2 வைகாசி MAY 1944 412 6 அண

# காவேரி

3—10




EAD The Cauveri -
ID MAGAZINE FOR THE HOME



De Duiller

# TIMES have changed!

## A.D.1704 —ல்

'இரத்தினம் முதலிய ஆபரணங்களை அதன் பல பாகங்களில் உபயோகிக்கலாம் என்று 1704-ல் பாஷியோடி டி டூலர் என்பவர் கண்டுபிடித்தார்.



## A.D. 1944

வெஸ்ட் எண்டு பூரண ஜுவல்கள் அமைக்கப்பெற்றவை



மினியேச்சர் 'U 3'
9 காரட் கெட்டி தங்கம் ... ரு 130



மினியேச்சர் 'O'
9காரட் கெட்டி தங்கம் ... ரூ. 112



மினியேச்சர் 'U-2'
9 காரட் கெட்டி தங்கம் ... ரூ. 108

ஷோர் ஸ்பிரிங் எஸ்கேப்மெண்ட் சிரிஷ்டி போன்று இவ்வாராச்சி பிரிஸிஷன் வாட்சு தயாரிப்பதில் முக்யாம்சமாகி பெருத்த முன்னேற்றத்தைக் குறிக்கிறது எல்லா வெஸ்ட் எண்டு வாட்சுகளும் ஜுவல்கள் அமையப்பெற்ற நம்பத்தகுந்த கடிகாரங்கள். இனும் கேட்லாக்கிற்கு எழுதவும்.

# WEST END WATCH Co

*Bombay*
*Calcutta*

காலதாமதமாக வருவதால், விளம்பரப்படுத்தப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமல்ல. ஆயினும் ஸ்டாக்கிற்கு ஏற்றவாறு ஆர்டர்கள் பூர்த்தி செய்யப்படும்.

வெஸ்ட்எண்ட் வாட்சு கோ. பம்பாய் — கல்கத்தா.

1781

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

## The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & SONS,

**KUMBAKONAM.**

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாப்பள்ளி | மதுரஸ் | பாலக்காடு | திருச்சினுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
„ வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
„ ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
„ கே. சிவஸ்வாமி அய்யர்
„ எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.



## ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

# பொருளடக்கம்

தாரண மலர் 3 — வைகாசி இதழ் 10

| | | |
|---|---|---|
| மகாத்மாவுக்குப் 'பிளாங்க் செக்'? | ... ... | 4 |
| கதம்பம் | ... ... | 6 |
| மந்திரி ஸபை நினைவுகள் | ... தி. சே. சௌ. ராஜன் | 9 |
| ராமனும் லக்ஷ்மணனும் | ... வே. நாராயணன் | 14 |
| தமிழ்நாடும் பம்பாய் திட்டமும் | ... க. சந்தானம் | 15 |
| பொல்லா உலகம் | ... கௌரீ | 17 |
| உடைந்த வீணை | ... கே. சுந்தரம்மாள் | 25 |
| எழில் தரும் தொழில் | ... 'சலவை' | 33 |
| படித்த முட்டாள் | ... கமலா பத்மநாபன் | 36 |
| சிதைந்த கனவு | ... "விஜயஸ்ரீ" | 41 |
| செல்லாத நாணயம் | ... ரா. வீழிநாதன் | 46 |

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



# காவேரி

தாரண மலர் 3

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

வைகாசி இதழ் 10


தமிழ்நாடு 2/9014

## மஹாத்மாவுக்குப் 'பிளாங்க் செக்'?



மங்கி அணையும் தறுவாயிலிருந்த மஹாத்மாவின் உயிரொளி இறைவன் அருளால் இன்று பூரண சோபையுடன் பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டது. இன்னும் கொஞ்சநாள் ஓய்வு ஏற்பட்டால் அவ்வொளி முன் போல் பிரகாசிக்கும் என்று பிரபல டாக்டர்கள் உறுதி கூறுகிறார்கள். இது இந்திய மக்களின் பெருத்த பாக்கியமேயாகும்.

காந்திஜியின் உடல் நிலை குன்றியதன் காரணமாக அவரை யாதொரு நிபந்தனையுமின்றி இந்தியா கவர்மெண்டார் விடுவித்திருக்கிறார்கள் என்ற செய்தி அதிக உத்ஸாக மூட்டக்கூடியதன்று. தங்கள் மனப்பான்மை எவ்வகையிலிருக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதுபோன்று இருக்கிறது, கவர்மெண்டார் விடுத்த அறிக்கை. இந்நாட்டில் தலைவர்கள் சிறை புகுவதும், அதினின்று வெளிவருவதும் சர்வசாதாரணம். இதனால் நாட்டில் ஓர் உணர்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்ப்பது தவறு.

உண்மையில், பிரிட்டிஷ் கவர்மெண்டார் காந்திஜியின் தேக அஸௌக்யத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரை விடுதலை செய்து பார்ப்போம் என்று தீர்மானித்திருக்கவேண்டும். மிகவும் கவலைக்கிடமான சமயத்தில் அவரை விடுதலை செய்யவில்லை. அவர் உடல் நிலை கொஞ்சம் ஸாதகமானவுடன் தான் விடுதலை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். சிறையிலடைத்தவர்களை விடுவிக்கவேண்டிய அவசியத்தை இப்பொழுது கவர்மெண்டார் உணர்ந்திருக்கவேண்டும். அதை எப்படிச் செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்கையில் காந்திஜியின் தேக அஸௌக்கியம் அவர்களுக்கு நல்ல வசதி அளித்திருக்கவேண்டும், விடுதலைப் படலத்தை ஆரம்பிக்க.

ஆனால் தங்கள் மனம் மாறிவிட்டது என்று காட்டிக்கொள்ள மாத்திரம் மனமில்லை. தாங்கள் ஏதோ அதே கொள்கையிருப்பதாகக் காட்டிக்கொள்ளவே இவ்வறிக்கையை விடுத்திருக்கவேண்டும்.

"காந்திஜீயை விடுதலை செய்வதினால் ஒத்துழையாமை இயக்கம் எம்மட்டில் நிற்கிறது, காங்கிரஸ் மனப்பான்மையில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று எளிதில் தெரிந்துகொள்ளலாம்; பிறகு மற்றத் தலைவர்களையும் விடுதலை செய்யலாம்; காந்திஜி கொஞ்சம் இணங்கி வருவாரானால்..............." என்று யோசித்திருக்கவெண்டும் அமெரி வர்க்கத்தார்.

"மஹாத்மாவின் உடல் நிலை கவலைக்கிடமாகியிருக்கவே அவரை விடுவிப்பதுஎவ்வகையிலும் நலம். நிலை இன்னும் குன்றுமாகில் அப்பெருத்த பொறுப்பினின்று பிரிட்டிஷ் கவர்மெண்டார் தப்பித்துக்கொள்ளலாம். அப்படியில்லாமல், தெளிந்துவந்தால், மஹாத்மாவினால் சும்மாவிருக்கமுடியாது. அவர் மனப்போக்கைப் பத்திரிகைகள் வாயிலாக அல்லது அறிக்கைகள் மூலம் வெளியிடுவது திண்ணம். அதில் ஏதேனும் சாதகமான மாறுதல் இருந்தால் அதைப் பயன்படுத்திக்கொண்டு மற்றத் தலைவர்களையும் விடுவித்து நாட்டு மக்கள் தங்களுடன் யுத்தத்தில் ஈடுபடுமாறு செய்துகொள்ளலாம்" என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் யோசித்திருக்கவேண்டும்.

நாட்டில் கலவர மனப்பான்மை இன்று இல்லை என்பதை கவர்மெண்டார் தெளிவாக அறிந்துகொண்டு விட்டார்கள். அதுமட்டும் அல்ல. 1942 ஆகஸ்டில் நாட்டில் மூண்ட

கலவரங்களுக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி யாரோ அல்லது மஹாத்மாவோ பொறுப்பாளியல்லர் என்பதையும் தெரிந்துகொண்டு விட்டார்கள். ஆகையினால் இனி யுத்த முயற்சிக்கு அபாயம் ஒன்றுமில்லை.

காந்திஜியின் விடுதலையினால் சாதகம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எல்லாம் மஹாத்மாவின் மனப்பான்மையைப் பொறுத்தது. அவரை விடுதலை செய்தால் இதை நன்று அறியலாம்.

இவ்வாறு ஆலோசனை செய்துதான் மஹாத்மாவை விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது திண்ணம்.

கவர்மெண்டார் எதிர்பார்க்கிறபடி நாட்டின் அரசியலில் ஓர் மாறுதல் ஏற்படும் என்பது திண்ணம். மஹாத்மா கூடிய சீக்கிரத்தில் தேகசவுக்கிய மடைந்ததும் அரசியல் ஸ்தம்பனத்தை அகற்ற யோசனை கூறுவார் என்று எதிர்பார்ப்பது தவறாகாது. இதை கவர்மெண்டார் மட்டுமல்ல, மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் நாட்டுமக்களின் மனதைப் பக்குவப்படுத்த கவர்மெண்டார் செய்யவேண்டியது மற்றத் தலைவர்களின் விடுதலையேயாகும். மஹாத்மாவின் மனதை அறிந்த பிறகே இதைச் செய்வது என்று எண்ணிக் காத்திருப்பது தவறு. வல்லபாய்படேல், ஜவாஹர்லால், அபுல்கலாம் அஸாத் இவர்களில்லாமல் மஹாத்மாஜி எதையும் செய்யமாட்டார். அப்படியே அறிக்கைவிட்டாலும் மஹாத்மா இவர்களை விடுவிக்க வேண்டுமெனத்தான் முதலில் வற்புறுத்துவார். கவர்மெண்டார் இதற்குச் செவி சாய்த்துத்தான் ஆகவேண்டிவரும். இல்லையேல் உலகம் பிரிட்டிஷ் கவர்மெண்டாரைத் தூற்ற ஆரம்பித்துவிடும்.

ஜப்பானிய அரக்கன் இந்தியாவிற்குள் புகுந்து அட்டகாஸம் புரிந்து வருகிறான். அவனை வெற்றிகரமாக இன்னும் நேசதேசப் படைகள் துரத்தி அடிக்கவில்லை. மக்களிடத்திலே ஓர் ஆவேசத்தைக் காணோம். ருசிகரமான நிகழ்ச்சி என எண்ணித் தினந்தோறும் பேப்பரைப் புரட்டிப் படிக்கிறார்கள். துரதிஷ்ட வசத்தினால் ஜப்பானியர்கள் இன்னும் முன்னேறினால், இம்மக்களின் மனப்பான்மை நேசதேசப் படைகளுக்குத் திங்கை யளிக்கலாம். நாட்டிற்கும் பெருத்த அபாயத்தை உண்டுபண்ணலாம்.

எனவே இம் மனப்பான்மையைப் போக்குவதில் நாட்டுத் தலைவர்களும், கவர்மெண்டாரும் ஊக்கங்காட்டவேண்டும். இந்திய அரசாட்சியின் பொறுப்பை மஹாத்மாவிடம் ஒப்படைக்கவேண்டும். மஹாத்மாவுக்கு வைஸிராய் வேவல் துரை ஒரு பிளாங்க் செக் அனுப்பி "கால நிலையை உணர்ந்து உமக்கு தற்பொழுது அத்யாவசியமான அதிகாரங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். சமாதானம் நிலவியதும் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் அளித்து விடுகிறோம்" என்று கூறிக் கடிதம் எழுதவேண்டும். அப்பொழுது தான் இந்த நெருக்கடியான நிலைமை தீரும்.

மஹாத்மா சீக்கிரத்தில் தம்முடைய மனப்பான்மையை வெளியிட்டும் கவர்மெண்டார் நாட்டிற்குச் செய்யவேண்டிய பொறுப்பை உணர்த்தியும் வைஸ்ராய்க்கு ஓர் கடிதம் எழுதுவார் என எதிர்பார்க்கிறோம்.

இதற்குள் மற்றத் தலைவர்களையும் பிரிட்டிஷ் கவர்மெண்டார் விடுவிப்பார்களானால் சமாதானத்திற்கு மனப்பக்குவம் ஏற்படும். நாட்டிலும் பிரிட்டிஷார்பால் ஓர் உணர்ச்சி ஏற்படும்.

எல்லா அறிவாளிகளும் இதைத்தான் கவர்மெண்டாருக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். பின்பு செய்யப்போவதை இப்பொழுதே செய்தால் மிக்கப் பலனளிக்கும். பிரிட்டிஷ் கவர்மெண்டார் இதைச் சீக்கிரம் செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

---

**கு. ப. ரா.**

சிறு கதை எழுதும் ஆர்வத்தை தமிழ் மக்களுக்கு ஊட்டிய கு. ப. ராஜகோபாலன் அகால மரணமடைந்தார் என்ற செய்தி தமிழர்களை திடுக்கிடச்செய்திருக்கும். வெளிப்பகட்டில்லாதவர், ஆனால் ஆழ்ந்த கருத்துள்ளவர். அவர் உயரிய கற்பனைகள் பல வெகுநாள் மக்கள் உள்ளத்தில் ஜீவித்திருக்கும் என நம்புகிறோம். அன்னார் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## அரிசிப் பங்கீடு

சென்னை மாஹாணத்தில் இப்பொழுது அரிசிப் பங்கீடு இல்லாத நகரே இல்லை எனலாம். அரிசி அபரிமிதமாக உள்ள தஞ்சைஜில்லாவிலும் இப்பங்கீடு வந்து விட்டது. மக்கள் இதை வேண்டினார்களா, இதற்கு அவசியமுண்டா என்பதெல்லாம் புத்தகப் பிரச்சனைகளாகி விட்டன.

காகிதப்பஞ்ச காலத்தில் இப்பங்கீடு சம்பந்தமாக ஜனங்கள் போடவேண்டிய மனுக்கள் கணக்கிலடங்கா. தொட்டதற்கெல்லாம் மனு வேண்டுமாம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர்வழிகளுக்கு எழுத்து வாசனை தெரியாத இத்தேசத்தில் இது எப்படி சாத்தியமாகும்? மக்கள் அவதிக்குக் கேட்கவேண்டியதில்லை.

அதிகாரிகளாவது பங்கீடுவிதிகளைத் தமிழில் அச்சடித்து இனமாக வழங்குவார்களானால் அது உபகாரமாக இருக்கும். இல்லையேல் கஷ்டம் தான்.

ஏற்கனவே நாட்டில் அவசரச்சட்டங்கள் நிறைந்துள்ளன. ரேஷன் அமுலுக்குக்கொண்டு வருவதில் கொஞ்சம் ஜனங்களிடம் அனுதாபம் காட்டிச் சட்டப்படி மிரட்டாமல் மக்களை உற்சாகப்படுத்திக்கொண்டு போவார்களானால் நலமாயிருக்கும்.

# கதம்பம்

## வீழ்ச்சி (அரசியல் கற்பனை நாடகம்)

காக்ஷி 1

(ஜின்னா உச்சானி மரக்கிளையொன்றில் அமர்ந்துள்ளார். தொண்டர் குழாம் துதிபாடுகிறார்கள்.)

தொ: அல்லா வாழ்க! ஒற்றுமை ஒழிக! பாக்கிஸ்தான் முழங்க! ஜின்னா வாழ்க!

ஜின்: அடியார்களே! அதுதான் நமதுவேதம்! குரான் வாக்யம் அதுதான். எனக்காக நீங்கள் எல்லோரும் பகுத்தறிவை உதறித்தள்ளித் தியாகம் செய்யததற்கு ஆண்டவன் அருள் புரிவார்!

ஒரு தொ: ஆஹா! தாங்களே தங்களுடைய பகுத்தறிவைப் பறிகொடுத்த பிறகு எதற்காக எங்களுக்குப் பகுத்தறிவு? தங்கள் உதார குணத்தையே பின்பற்றினோம்.

ஜின்: தொண்டர்களே! இதுவரை எனது பிடிவாத குணத்தை உடும்புப் பிடியாய்க் கைக்கொண்டதினாலேயே எனக்குப் புகழ் கிட்டியது. உங்களுக்கும் எனது அருள் கிட்டியது.

ஒரு தோழர்: பாரத தேசம் சுதந்திரமடைவதற்கு அமெரி துரை முட்டுக்கட்டைபோலிருந்தால் தாங்கள் மலைபோல் தடையாய் நிற்கின்றீர்கள்!

மற்றொரு தோ: இதுவரை நமது சமூகம் அடைந்துள்ளதென்னவெனச் சில சந்தேகப் பிராணிகள் முணு முணுக்கிறார்கள். தேச விடுதலைக்குச் சரியான வழியை நாடுகிறோமாவென்று கேட்கத் துணிகின்றனர்!

ஜின்: அவசியமில்லாத, அர்த்தமில்லாத இப்படிப்பட்ட கேள்விகள் கேட்பவர்களைச் சித்திரவதை செய்தாலும் தோஷமில்லை! மற்றொரு முறை நமது வேத வாக்கை ஓலமிடுங்கள்!

தோ: அல்லா வாழ்க! ஒற்றுமை ஒழிக! ஜின்னா வாழ்க!

ஜின்: இந்த வேத கீதத்தை முழங்கச் செய்வதே முஸ்லீம்களது வேலை. அதுவே ஆண்டவனது கட்டளை! பாஞ்சாலத்திலும் இந்த வேத கீதம்பரவத் திட்டம்போட்டுள்ளேன். வெற்றி நிச்சயம் (படார் என்று கிளை முறிந்து ஜின்னா கீழே விழுகிறார்!) ஆஹா! இது என்ன அபசகுனம்!

ஒரு தொ: இதில் ஏதோ ஹிந்துக்களின் சூழ்ச்சியிருக்கின்றது! (மரத்தில்ஏறிக் கிளையை சோதிக்கின்றான்) ஹா! விஷம வேலைதானிது. சந்தேகமில்லை!

ஜின்: இப்படிப்பட்ட மனப்பான்மைதான் உங்களுக்கு வேண்டும்! உறுதியாய் அதை ஜபம் செய்யுங்கள், ஆயினும் நான் அதிகம் காயம்படாமல் குதித்துஎழுந்த அதிசயத்தைப் பார்த்தீர்களா?

தொ: பார்த்தோம்! அதில் ஆண்டவனது அருளைக் கண்டோம்!

காக்ஷி 2

)வைஸ்ராய் மாளிகை: வைசிராய் வேவல் துரை கவலையுடன் காணப்படுகிறார். பக்கத்தில் கார்யதரிசி.)

வேவ: காரியதரிசி! ஜின்னாவின் அட்டகாசங்களை கவனித்தாயா? வளர்த்தகிடா மார்பில் பாய்வதுபோலல்லவாயிருக்கின்றது? பாஞ்சாலத்திலும் படுபாவி கலக விதைவிதைக்க எத்தனிக்கின்றான். இனி நாம் சும்மாவிருக்கக் கூடாது. ருசிகண்ட பூனை உறியைத் தாவுமென்பது உண்மையாகிவிட்டது!

காரிய: எதற்கு வீண் கவலை? ஆசாமியை தூக்கிவைத்தது நாம். கீழே தள்ளவும் சக்தியுண்டு நமக்கு. பாஞ்சாலத்தை அவன் கெடுக்க முற்பட்டால் யுத்த முயற்சிகள் பாழாகும். லீக் ஆசாமிகள் யாராவது வாலையாட்டினால் ஒட்ட அறுத்துவிடக் கவர்னருக்குச் சொல்லி விடுகிறேன்.


## அடுத்துவரும் நூல்கள்

1 அழகி

2 குழலோசை

3 ஔவையார்

4 லோபியன் காதல்

5 திக்கற்ற இரு குழந்தைகள்

6 புயல்- மகாகவி டாகூர்

7 கனகாம்பரம்- கு. ப. ரா.

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் : சென்னை

வேவ: அதுதான் சரி!

காக்ஷி 3

(ஜின்னாவும் பஞ்சாப் மாகாண மந்திரி ஷாகட் ஹையட்கானும்)

ஜின்: அடே ஷாகட்! பாஞ்சாலத்தில் நமது வேத கீதத்தைப் பரப்ப யாது செய்துள்ளாய்?

ஷாக: ஆண்டவனே, தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு என்னால் முடிந்தவரை 'லீக்' கொள்கைகளை அனுசரித்து வந்துள்ளேன். பிரதம மந்திரிமட்டும் பிடிவாதம்பிடிக்கின்றார். கூட்டு மந்திரி சபையைக் கைவிடமாட்டேன் என்கிறார். லீக் மந்திரி சபை நடவாத காரிய மென்கிறார். நான்மட்டும் ஹிந்துக்களுக்கு இயன்றவரை இன்னல்கள் பல இழைத்துவருகிறேன். சமீபத்தில் மற்றச் சமூகத்தைச் சேர்ந்த ஓர் உபாத்தியாயினியை வேலையினின்றும் நீக்கியதைத் தாங்கள் அறிவீர்களென நம்புகிறேன்.

ஜின்: அவையெல்லாம் போதாது! கூட்டு மந்திரி சபை ஒழியவேண்டும். லீக் மந்திரி சபை ஏற்படவேண்டும். சரி, நீ போ. நான் கூடிய சீக்கிரம் பாஞ்சாலம் வருகின்றேன்.

காக்ஷி 4

(ஸெயில்காட் ரயில்வே ஸ்டேஷனில் ஜின்னா இறங்குகின்றார். இரண்டொருவரைத் தவிர வேறு யாருமில்லை. மந்திரி ஷாகட் அழுத கண்ணீருடன் ஓடிவந்து ஜின்னாவின் முன் விழுகிறார்)

ஷாக: பிரபோ! போச்சு! போச்சு!

ஜின்: என்ன? என்ன?

ஷாக: என் பதவி!

ஜின்: (ஆத்திரமாக) விளங்கச்சொல்!

ஷாக: கவர்னர் துரை என்னைப் பதவியினின்றும் 'கல்தா' கொடுத்துவிட்டார்!

ஜின்: என்ன துணிச்சல் கவர்னருக்கு? அதிகார துஷ்பிரயோகம்! ஹூம்! ஜனநாயக விரோதச்செயல்! (கோபமாக) அந்தப் பிரதம மந்திரி என்ன செய்தார்? தலையிடவில்லையா?

ஷாக: தலையிட்டார்!

ஜின்: பின்?

ஷாக: அவனும் கவர்னருடன் சேர்ந்துதானே என்னைக் காலை வாரிவிட்டான்!

ஜின்: ஹா! அப்படியா? துரோகி! சண்டாளன். அவனை என்ன செய்கிறேன் பார்! (போகிறார்.)

காக்ஷி 5

(பஞ்சாப் மாகாண பிரதம மந்திரியும் ஜின்னாவும்)

பி. ம: என்ன விசேஷம் வந்தது?

ஜின்: (தமக்குள்) என்ன திமிர் இவனுக்கு? தாங்கள் லீக் மெம்பர், லீக்கின் அடிமை என்பதை மறந்தது ஆச்சரியமாயிருக்கிறது!

பி. ம: பிதற்றல் வேண்டாம்! தாங்கள் இந்தியன் என்பதை மறந்துவிட்டீர்களே?

ஜின்: உம் உபதேசம் எனக்குத் தேவையில்லை. லீக்கின் ஏக சக்ராதிபதியாகிய நான் சொல்லுகின்றேன்! எனது கட்டளைக்கு உடபட்டுக் கூட்டு மந்திரி சபையை ஒழித்து லீக் மந்திரி சபை ஏற்படுத்தப்போகின்றீரா, இல்லையா?

பி. ம: மரியாதையாய் வெளியில் செல்லும். உமது வாலை இங்கு ஆட்டவேண்டாம். வாயில் வந்தபடி பிதற்றுகிறீர்!

ஜின்: நான் யார் தெரியுமா?

பி. ம: நன்றாய்த்தெரியும்! முஸ்லீம் மக்களின் பகுத்தறிவைப் பாழ்படுத்தியவர்! நாட்டில் ஒற்றுமை ஏற்படாவண்ணம் மதியிழந்து வேலை செய்பவர்.

ஜின்: யார் முன்னிலையில் இவ்வாறு அவமரியாதைச் சொற்களை உபயோகிக்கின்றீர் என்பதை நிதானியும்! வங்காளத்தில் லீக் வெற்றிக் கொடி நாட்டிய வீரன் நான்! இந்துவில் முஸ்லீம்களின் பெருமையை உயர்த்தியவன் நான்! எல்லாப்புறத்திலும் வெற்றியைக் கண்டவன் நான். ஏராளமான முஸ்லீம்களைக் கோல் எடுத்த குரங்குபோல் ஆடச்செய்பவன் நான்! முரட்டுப் பிடிவாதத் தன்மையில் அந்த அமெரி துரையும் வெட்கித் தலைகுனியச் செய்தவன் நான்! பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கியவன் நான்! மற்றச் சமூகங்களெல்லாவற்றையும் நடுநடுங்கச் செய்தவன் நான்! இன்னும்............


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாக கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாக பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ.,

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லா கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜன்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

பி. ம: போதும், போதும் உமது ஜம்பம்! நான் யார் தெரியுமா? பாஞ்சால மாகாணத்தின் பிரதம மந்திரி! உமது மாய வலைக்குள் மற்ற முஸ்லீம்களைப்போல் அகப்பட்டு ஏமாருத தந்திரி! உமது பித்தத்தையும் போக்க வல்ல தன்வந்திரி! உமது திருவிளையாடல்களைக் கண்டுமகிழ இங்கு ஆசாமிகளில்லை. கடையைக் கட்டும்!

ஜின்: துரோகி, துரோகி! வஞ்சகா! என்ன செய்கிறேன் பார். (நாற்காலி இருக்கிறதென்று நினைத்து உட்காருகிருர்.) தடார் என்று கீழே விழுகிருர்!

ஹா! இந்த அவமானத்தை மறக்கமாட்டேன்! என் பிடிவாதத்தைப் போக்க அந்த அல்லாவாலும் முடியாது! உம்மை லேசில் விடப்போவதில்லை. உடனே கூட்டம்போட்டு கூச்சல்போட்டு என்ன செய்கிறேன் பார்!

பி. ம: என்னவேண்டுமாயினும் பிதற்றுங்கள்! முஸ்லீம்களுக்கு இனியாவது விழிப்பு ஏற்படுமென்பது திண்ணம்! மதியிழந்து படுகுழியில் விழாதீர்கள்! பாகிஸ்தான் பைத்தியத்தை விட்டொழியுங்கள், நடக்கக்கூடாத விஷயம். தேச விடுதலையைப்பற்றிச் சிந்தியுங்கள். நமது சகோதரர்களை நல்ல வழியில் நடத்துங்கள்!

ஜின்: என்ன செய்கிறேன் பார்? எனக்கா புத்தி சொல்லுகிருய்? (வேகமாக ஓட்டமெடுக்கிருர்.)

## புத்தக விமர்சனம்

### கதைக்கொடி:—

ஆசியஜோதிப்பிரசுரம், மைலாப்பூர், சென்னை விலை ரூ: 2-8-0.

சிறு கதைகள் எழுதுபவர்களில் சிறந்தவர்களெனக் கருதப்படுவர்கள் பலர் தங்கள் திறமையைக் காட்டியுள்ளார்கள். காகிதப் பஞ்ச நெருக்கடியில் புத்தகங்கள் பல வெளிவந்திருப்பது மக்களுக்குச் சிறு கதைகளில் ஏற்பட்டுள்ள அபிருசியைக் காட்டுகின்றது. கதைகளில் கதாசுவராஸ்யத்தோடு இயற்றிய கற்பனைகள், வர்ணனைகள், வாழ்க்கைத்தத்துவங்கள் முதலியனவும் பொலிந்து விளங்குவது போற்றதக்கது.

### கம்பன் மலர்—

சென்னை கம்பர் கழகவெளியீடு- அல்லயன்ஸ் கம்பெனி விற்பனை உரிமையாளர்- விலை ரூ. 2-0-0.

சமீபத்தில் நடந்த கம்பர்திருநாள் விழாவையொட்டி வெளியிடப்பட்ட அரிய நூல். தமிழ் பெரியார்களுள் பலர் கம்பன் கவியின் பல்வேறு சிறப்புக்களைத் திறம்படச் சித்திரித்துள்ளார்கள். கல்வியில் பெரியவராகிய கம்பருக்குச் செய்யப்பட்டுள்ள தொண்டைப் பாராட்டி ஆதரிக்க வேண்டியது தமிழர்கள் கடமை. முதல்தர இலக்கிய விருந்து.


சங்கீத ரசிகர்களுக்கு

"கான கலாதரரின்" செய்தி

Madura Mani Iyer
Sangeetha Vidwan



No. 22, Dubash Agraharam
MAYAVARAM
7-1-'44

கும்பகோணம் நேஷனல் ரேடியோ கம்பெனியாரால் செய்யப்படும் ஒலிபரப்பு ஏற்பாடுகள் மிகவும் நன்றாக இருக்கின்றன- எனது மனமார்ந்த ஆசிகளை அவர்களுக்கு நான் அளிக்கிறேன்.

(Sd) Madura Mani Iyer.

சிறந்த ஒலிபெருக்கி ஸ்தாபனம்:-

"நேஷனல் ரேடியோ"

பிரம்மன்கோவில் தெரு, கும்பகோணம்.

மின்சார வசதி இல்லாத இடங்களிலும் "நேஷனல் ரேடியோ', ஒலிபெருக்கிகள் பாட்டரியுடன் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

# மந்திரிசபை நினைவுகள்

தி. சே. சௌ. ராஜன்

## IV

காங்கிரஸ் மந்திரி சபைகள் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற உணர்ச்சி நாட்டில் வெகுவாகத் தேர்தல் காலத்திலேயே பரவிவிட்டது. அதன் காரணமாகத் தனிப்பட்ட நபர்களின் துன்பங்களுக்கும், சமூகத் தொல்லைகளுக்கும் விடுதலை உடனே பெற்றுவிடுவோம் என்கிற எண்ணமும் மக்கள் மனதில் குடிகொண்டது. நிலவரி குறையவில்லையே என்பார் மிராசுதார்கள். கள்குடியும், கள்ளுக்கடைகளும் ஒழியவில்லையேயென வருந்துவாள் குடியனைக் கணவனுகப் பெற்ற ஏழைக் குடும்பக்காரி. தீராத கடனில் ஈடுபட்டு குடிமுழுகிப்போகும் தறுவாயிலிருக்கும் குடிமக்கள் "பரம்பரையாக நம்மை துன்புறுத்திவரும் கடன் பாரத்திற்கு விமோசனம் கிடைக்கவில்லையே" யென ஏங்குவார்கள். இம்மாதிரி அவரவர்களுக்குள்ள பலவித துன்பங்கள் காங்கிரஸ் நிர்வாகம் பெற்ற உடன் தீர்ந்துவிடுமென்னும் எண்ணத்தினுல் எங்களுக்கும் கவலை அதிகரித்தது. காங்கிரஸ் பதவி வகிக்க முடிவுசெய்தபொழுது, சுதந்திரமடைய நாம் கோரின அரசியலமைப்பு திட்டம் நமக்குக் கிடைக்கவில்லை. அச்சுத்தளர்ந்துபோன ஓர் பழைய கட்டை ஓட்ட வண்டியைத்தான் நாங்கள் ஓட்டவேண்டியிருந்தது. வண்டி மாடும், பழைய மாடுகளே. வண்டியை கவிழ்க்காமல், மாட்டையும் அதன் சத்திக்குமீறி ஓட்டிப்படுக்கவிடாமல் வண்டியிலேறி இருப்பவர்களுக்குக் கஷ்டம் நேரிடாமல் ஓட்டவேண்டிய பொறுப்பு மந்திரிகளுக்கு ஏற்பட்டது. மக்கள் அதிகாரிகள் மீது குறைகூறும்பொழுதும், பழைய குறைகள் பல மாருமலிருக்கும்பொழுதும், மந்திரிகளின் துர்ப்பாக்கிய நிலைமையை மக்கள் கவனிக்கவில்லை. ஆனுல் அது மக்களுடைய பிசகு அல்ல. நெடுநாட்களாக வாய்திறவாது அனுபவித்த கொடுமை தாங்கமுடியாமல் ஏக்கமுற்ற காட்சி.

ஒரு நோயாளி சர்க்கார் ஆஸ்பத்திரியில் வைத்தியம் பார்த்துக்கொள்ளப்போகிருன். அங்கு ஆட்சிமுறை மாறிய சின்னங்கள் ஒன்றும் அவன் அறியும் வகையில் அவன் கண்ணிற்குத் தென்படுவதில்லை. அதே டாக்டர் தான் அங்கு உட்கார்ந்துகொண்டு நோயாளிகளை எப்பொழுதும்போல விரட்டி அதிகாரம் செலுத்துகிருர். சில்லறையை விரும்பி மருந்து கலப்பவர்கள், புண்ணைக் கட்டுபவர்கள் எல்லோரும் வெகுநாளாகக் கையாண்டு வரும் முறைகளையே பின்பற்றி வருகிருர்கள். சில்லறை கொடுக்க முடியாமல் தவிக்கும் ஏழை துடுக்காகப் பேசுபவனுகவிருந்தால் "என்ன ஐயா, காங்கிரஸ் ஆட்சி வந்தது. ராமராஜ்யமே வந்துவிட்டதெனக் கூச்சல் போட்டார்களே. ஏழையின் பாடு தீர்ந்த வழியைக்காணவில்லை" என்று சத்தம் போடுவான். எழுதப்படிக்கத் தெரிந்தவனுக இருந்தால் உடனே மந்திரிக்கு ஒரு புகார் கடிதம் எழுதிவிட்டுத்தான் வீடு திரும்புவான். இம்மாதிரியான கடிதங்கள் முதலில் அதிகமில்லை. நாளாவட்டத்தில் கட்டுக்கட்டாக வரத்தொடங்கிவிட்டன. அவைகளைப் பாராது அப்படியே குப்பைக்குழியில் தள்ள எனக்கு இஷ்டமில்லை. எனக்கு அனுப்பிய கடிதங்களின் காபிகள் ராஜாஜிக்கும் போகும். அவைகளை எனது பார்வைக்கு அவர் அனுப்பிவிடுவார். இம்மாதிரியே ஒவ்வொரு மந்திரிக்கும் வந்துகொண்டிருந்தது. அதைப்பற்றி விசாரணைசெய்யும்படி காரியதரிசிகளுக்கு அனுப்பினேன். அந்த விசாரணை நடந்து, எனக்கு விபரம் தெரிவதற்கு சுமார் மூன்று மாதங்கள் சென்றன. இதன் முடிவு தெரிந்து நியாயம் வழங்குவதற்குள் நோயாளியின் நோய் ஒரு விதமாக முடிந்து போயிருக்கும். முடிவு தெரிந்தும், பயன் படாமலும் போய்விடும். முறையிட்டவன் தனதுமுறை ஈட்டை மறந்துகூடப் போயிருப்பான். ஏன் அவ்வளவு தாமதம் என்று

விசாரிக்கப்புகுந்தேன். அதற்குக் காரியதரிசி கால அட்டவணை ஒன்று தயார்செய்து விபரம் எனக்கு அனுப்பினார். அது பின் வருமாறு:—

"மந்திரி ஆபீசிலிருந்து புறப்பட்ட கடிதம் "வெகு அவசரம்" என்ற குறிப்புடன் (பச்சை லேபிள் அல்லது சிகப்பு லேபிள்) போட்டு அந்த இலாகா ஸூப்பிரண்டெண்டிடம் போவதற்கு இரண்டு நாள். அவர் அதைக் கவனிக்கும் குமாஸ்தாவிடம் அனுப்பி அவர் அதை மெடிகல் விஷயமாயிருந்தால், ஸர்ஜன் ஜெனரல் ஆபிசிற்கும், சுகாதார விஷயமாகவிருந்தால் சுகாதார டைரெடர் ஆபிசிற்கும், தேவஸ்தானங்கள் சம்பந்தமாகயிருந்தால் தர்ம பரிபாலன போர்டு தலைவர் ஆபீஸிற்கும் அனுப்ப ஐந்து நாட்கள். சென்னைக் கவர்ன்மெண்டாரின் கோட்டையை விட்டுக் கிளம்புவதற்குள் ஒருவாரமாகி விடும். பிற்பட்டு அதன் கதி அந்தந்தத் தலைமை ஆபீஸ்களில் சஞ்சரிக்கத் தொடங்கும். அங்கிருந்து சம்பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிக்கு அனுப்பப்படும். மாதம் இருபதுநாள் சுற்றித்திரியவேண்டிய ஜில்லா அதிகாரியின் "காம்பு" போய் அங்கிருந்து குற்றம் நடந்த இடத்திற்கு விசாரிக்க புறப்பட்டு, விசாரணை முடிந்து ரிபோர்ட்டு திரும்பவும் சென்னை வந்துசேர இரண்டுமாதங்களுக்குக் குறையாமல் ஆகிவிடும். அவசரக்கட்டுக்கள் ஒவ்வொரு குமாஸ்தாவிடமும் இரண்டு நாட்களுக்குமேல் தங்குவதில்லை. இவ்வளவு வேகமாகச் சென்றும் மந்திரி ஆபீஸுக்குத் திரும்பிவர மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன. இப்பொழுதிருக்கும் நிலையில் புதிய மந்திரிகள் வந்ததின் காரணமாக ஆபீஸுகள் எல்லாம் இராப் பகலாக ஓய்வில்லாமல் வேலைசெய்கிறது. இதைவிட வேகம்போவது முடியாது. இப்பொழுதிருக்கும் சிப்பந்திகளை அடிமுதல் நுனிவரையில் பதின்மடங்கு அதிகரித்தால் ஒருமாதத்திற்குள் கட்டுக்கள் திரும்பக்கூடும். ஆனால் அதன் செலவு சர்க்கார் வரவு செலவு திட்டத்திற்குள் அடங்குமா? அப்படிச் செய்வதில் பயன் உண்டாகுமா? என்பதும் கவர்மெண்டார் யோசனை செய்யவேண்டும். இந்தப் பதிலைக்கண்டு திகைத்துவிட்டேன். காரியதரிசி அனுப்பிய திட்டமும் நியாயமானதாகத்தான் தோன்றியது. ஏழை மக்கள் முறை ஈட்டிற்கு வேறு விதமான பரிகாரம் தேடவேண்டியதுதான் என்ற முடிவிற்கு வந்தேன். புகார் கடிதங்களில் கையெழுத்துப்போட்டு விலாசத்துடன் இருப்பவைகள் சில. பெரும்பாலும் கையெழுத்தில்லாத மொட்டைக் கடிதங்கள். இதுவரையில் மொட்டைக் கடிதங்கள் சத்தமில்லாமல் குப்பைத் தொட்டிகளுக்குப் போவது வழக்கம். அநேகமாகக் கையெழுத்திட்ட கடிதங்களும் அதே கதியைத்தான் அடைந்துகொண்டிருந்தன. நாங்கள் எல்லாவற்றையும் விசாரணைக்கு அனுப்பத் துவக்கியவுடன் எங்கள் கீழிருந்த அதிகார வர்க்கத்திற்கு வேலை அதிகரித்துவிட்டது. அவர்களும் முணுமுணுக்கத் தொடங்கிவிட்டார்கள். இது விஷயமாக ராஜாஜியைக் கலந்து யோசனை செய்ததில், கஷ்டத்தைக் கவனியாது விசாரணை செய்தே ஆகவேண்டுமென அவர் முடிவு செய்தார். பல புகார்கள் ஆதாரமற்றதாகவேயிருந்தன. சிலது அதிகாரிகள் பேரில் துவேஷத்தினால் தனிப்பட்ட நபர்கள் தங்கள் மனக்கொதிப்பைத் தீர்த்துக்கொள்ளும் முறையிலிருந்தன. வெகு சில உண்மையானவாகவும், வெகு நாட்களாகக் கையாண்டு வரப்பட்ட ஊழல்களாகவுமிருந்தன. குப்பை கூளங்களைக் கிளறும்பொழுது பலவித உண்மைகளும் தெரிய வந்தன. குடியரசு முறையில் தான் இவைகள் வெளிவருமே யொழிய பொறுப்பற்ற ஆட்சி முறையில் தலைக்காட்டா. மற்றும் சில காங்கிரஸ்காரர்களுக்குத் தங்களுடைய மந்திரிகள் பதவு வகிப்பதால், தங்களுக்கும் இது வரையில் கிடைக்காத ஓர் மதிப்பும் அதிகாரமும் வந்துவிட்டதாகவும், அதைச் சில்லறை அதிகாரிகள் கவனித்து, தக்கபடி நடந்து கொள்ளாததினால் அவர்கள் பேரில் குறை கூறும் வழக்கமும் உண்டாயிற்று, திருச்சிக்குச் சமீபமாகவுள்ள ஓர் ஊரில் நடந்த சம்பவம் இதற்கு ஓர்சான்று.

ஓர் கிராமத்தில் அடிதடி சண்டையின் காரணமாக ஓர் ஹரிஜனனுக்கு காயம் ஏற்பட்டது. அவன் அந்த ஊரிலுள்ள ஜில்லா போர்டு காங்கிரஸ் அங்கத்தினரிடம் சென்று முறையிட்டான். அவனை அந்த ஊரிலுள்ள ஆஸ்பத்திரிக்கு இந்த ஜில்லா போர்டு மெம்பர் அழைத்துச்சென்றார். தேவையான சிகிச்சையை டாக்டர் செய்தபோதிலும், காங்கிரஸ் ஆட்சி முறைக்கு அந்த ஊரில் செல்வாக்குள்ள ஜில்லா போர்டு மெம்பரைத்தக்க வினயத்துடனும், மரியாதையுடனும் நடத்தவில்லையென அந்த மெம்பர் மனதில் பட்டது. அந்த டாக்டரை காயத்தை பரிசீலனை செய்து கோர்ட்டில் விவகாரம் தொடங்குவதற்கு ஆதாரமாக ஓர் ஸர்டிபிகேட் (அத்தாட்சி) வேண்டுமென போர்டு மெம்பர் கேட்டார். அதற்கு தமது பீஸ் (**Fees**) ஐந்துரூபாய் என டாக்டர் கேட்டதும் இவருக்குக் கோபம் வந்துவிட்டது, இந்த ஐந்து ரூபாயைக் கேட்க அவருக்கு நியாயம் கிடையாது, இது

ஒரு வகை லஞ்சம் என்பது மெம்பர் அபிப் பிராயம். டாக்டர் தனது தொழில் உரிமை யெனவும் பணமில்லாமல் அத்தாட்சி கொடுக்க மறுத்துவிட்டார். இருவருக்கும் பேச்சு தடித்தது. வேலே நேரத்தில் கூட்டம் கூடி விட்டது. ஒருவருக்கொருவர் அவதூறு கப் பேசினர்கள். முடிவில் டாக்டர் பேரில் சர்க்காருக்குப்புகார் செய்யப்பட்டது. ஜில்லா போர்டு மெம்பர் நான் திருச்சி வந்திருக்கும்பொழுது என்னை நேரில் கண்டு தாம் அவமதிக்கப்பட்டதையும், டாக்டருடைய கேவலமானநடத்தையையும் பற்றிஎன்னிடம் முறையிட்டார், நான் டாக்டர் பணம் கேட்டதில் பிசகில்லேயென்று சொன்னேன். அவருக்கு என்பேரில் கோபம் வந்துவிட்டது.

என்ன ஐயா, ஓர் பரமஏழை, தீண்டப்படாத வகுப்பைச்சேர்ந்தவன். அடிபட்டான் என்பதாகத்தெரிந்தும்அத்தாட்சிக்குப்பணம் கேட்பதாவென்று சொல்லி அந்த டாக்டர் பேரில் மற்றும் ஏராளமான குறைகளேயும் விவரித்தார், 'போலீஸ்காரர்களால் கொண்டு' வரப்படும் கேஸ்களுக்கு மாத்திரம் தான் பணமில்லாமல் அத்தாட்சி கொடுக்கப் படும். தனி நபர்கள் கேட்டால் பீஸ் பெற்றுக்கொள்ள டாக்டர்களுக்கு அதிகாரமுண்டு' என நான் சொல்லியும் அவர் என்னிடம் தன்னுடைய முறையீட்டை எழுதிக் கொடுத்து விசாரிக்கவேண்டுமென வற்புறுத்தி விட்டு என் பேரில் வருத்தத்துடன் சென்ருர். நான் அதை விசாரணே செய்யும் படி அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டேன். விசாரணேயில் டாக்டர் பேரில் குற்றமில்லே யெனவும், ஒரு பொதுஜன ஊழியரை வேலே நேரத்தில் கேவலமாகப்பேசி, செருப்பை எடுத்து அடிக்க ஜில்லா போர்டு மெம்பர் முன் வந்தாரெனவும், தனக்கு நடந்த அநீதியை டாக்டர் நியாயஸ்தலத்தில் சென்று வாதாட சர்க்கார் உத்தரவளிக்க வேண்டுமென வும் கோரப்பட்டது. அதன்படியே, கோர்டில் வாதாட உத்தரவு டாக்டருக்குக்கொடுக்கப்பட்டது. முடிவில் கேஸை விசாரித்த அதிகாரி, ஜில்லா போர்டு மெம்பர் குற்றவாளியென அவருக்கு இருநூறுபாய் அபராதமும் விதித்தார். முடிவில் காங்கிரஸ் ஆட்சி முறையின் பேரிலும், மந்திரிகளில் என் பேரில் முக்கியமாகவும், அந்த ஜில்லா போர்டு மெம்பருக்குத்தீராப்பகை உண்டாகி விட்டது.

எழுதியவர் கையெழுத்தில்லாத மொட்டைக்கடிதங்களில் ஒன்றை விசாரணேக்கு அனுப்பியதில் பலவருஷங்களாக நடந்து வரும் ஒரு விபரீதநிகழ்ச்சி வெளியாயிற்று. ஏன் இவ்வளவுகாலம் இது கேட்பாரில்லாத படி நடந்து வந்தது? ஒளிமறைவில்லாமல், வெளிப்படையாக நடந்தும் இந்த அநீதி ஏன் ஒருவருடைய கவனத்திற்கும் வரவில்லே? இந்த உண்மையான ஊழலேப்பற்றி எழுதியவர் ஏன் கையெழுத்தில்லாமல் மொட்டைக் கடிதமாக எழுதினர். என்பதற்கெல்லாம் என்னுல் காரணம் கூறமுடியாது, எழுதுவதும் பயனற்ற வேலே. இந்தச் சரித்திரம் சுமார் பத்துவருஷங்களுக்கு முன்பாகத் தொடங்கியது நிகழ்ச்சி. நடந்த இடம் நாகப்பட்டணம் துறைமுகம். நமது நாட்டு ஏழைக்குடி மக்கள் பட்டினியாய் வாடிவதங்கிப் பிழைக்க வழி தெரியாமல் சிலர் தனியாகவும், சிலர் மனைவி மக்களுடன் அக்கரைச்சீமைகளில் கூலி வேலேசெய்து வயிறு வளர்ப்பதற்காகத் தங்கள் கையில் கஷ்டப்பட்டு வெகுநாட்களாகச் சேமித்திருக்கும் சிறு தொகைகளே எடுத்துக்கொண்டு அல்லது கடன் வாங்கிக் கொண்டு மாதம் இருமுறை பயணமாகும் கப்பல்களில் ஆயிரக்கணக்காக போவது வழக்கம். மலேயா, சிங்கப்பூர், பினுங்கு, சைகோன், மோரிஷஸ் முதலிய நாடுகளுக்குச் செல்வார்கள். வறுமைக்கு உடன் பிறந்த தான தொத்துநோய்களும் அவர்களுடன்


# ஹோமியோபதி

என்னும் நவீன வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ தங்கள் வீட்டிலிருந்தே படித்துத் தேர்ச்சி பெற்று தாங்கள் டாக்டராகலாம். முழு விபரங்கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரகடனத்திற்கு எழுதவும்.

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்**

**எக்ஸ்டென்ஷன் - கும்பகோணம்.**

தென் இந்தியாவின் தலே சிறந்த ஹோமியோபதி ஸ்தாபனம்.

கூடக் கப்பலேறிச் செல்லும். அங்கிருக்கும் மக்களுக்கு இந்தத் தொத்துநோய் பரவி அவர்கள் இறந்துவிடக்கூடுமாதலால், அந்த ஊர் அரசாங்கத்தார்கள், நாகபட்டிணத்தில் கப்பலேறுமுன்பாக துறைமுக டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டுத் தடை ஊசி மருந்துகள் போட்டுக்சொண்டு, நோயற்றவர்கள் என அத்தாட்சி கொடுக்கப்பட்ட பிறகே கப்பலில் இடம் கிடைக்கும். இப்படிச் செய்வதனுல் பிரயாணிகள் நாகப் பட்டிணத்திலேயே ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் அங்கிருக்கும் விடுதிகளில் தங்கிப் பிறகு புறப்பட வேண்டியதாயிற்று, தங்களிடம் மிகுதியிருக்கும் சிறு அடகு நகைகளை விற்றோ அல்லது வைத்தோ பணம் திரட்டிவரும் ஏழைகளுக்கு பத்து நாட்களுக்குப் படிச்செலவு செய்து கொண்டு நாகப்பட்டணத்து விடுதிகளில் தங்கிப் புறப்படுவதற்கு முடிவதில்லை. கப்பல் கம்பெனியாரின் ஏஜன்டுகள் ஒரு டாக்டரை நியமித்து அவர் மூலம் தொத்துநோய் தடை செய்து, அத்தாட்சிபெற்றுப் பிரதி பிரயாணிகளைக் கப்பலேற்றி வந்தார்கள். இந்தியா கவர்ண்மெண்டார் துறைமுக சுகாதார அதிகாரிகளைக்கொண்டே அத்தாட்சி கொடுக்கும் வேலை செய்யப்படவேண்டுமெனத் தீர்மானித்த பிறகு இந்தவேலை நாகப் பட்டணம் துறைமுக சுகாதார அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. இதனுல் கப்பல் கம்பெனியாரின் டாக்டருக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் வரும்படி விஷயத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டது. சென்னை மாகாண சுகாதாரஅதிகாரியின் முயற்சியால் ஒரு சமரசம் ஏற்பட்டது. அதனுல் ஆங்கில வைத்திய முறையில் தேறி, தொழில் முறை நடத்தும் டாக்டர்கள் யாராயிருந்தாலும் தடுப்பு அம்மை குத்தி அத்தாட்சி கொடுக்கலாம். கப்பல் கம்பெனி டாக்டரும் கொடுக்கலாமென முடிவு செய்யப்பட்டது. இதனுல் கிடைக்கும் லஞ்சத்தைக் கப்பல் கம்பெனி டாக்டர்மூலமாக ஒருபெரும்பகுதி சென்னைக் கவர்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் துறைமுக சுகாதார அதிகாரி பெற்றுக்கொள்ள வேண்டுமென ஒப்பந்தம் ஏற்பாடாயிற்று.

இந்த வேலையில் லஞ்சத்திற்கு இடம் எங்கிருந்து வந்தது என்பதுதான் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது. பத்து நாட்கள் தங்கிச் செலவுசெய்யாமல், அம்மை குத்திக்கொள்ளாமலே அத்தாட்சிபெற்றுச் கப்பலேறிவிட்டால், பிரயாணிகளுக்குப் பணம் மிச்சமாகும். அதில் ஒரு பங்கு கப்பல் கம்பெனி டாக்டர்களுக்கோ அல்லது சுகாதார அதிகாரிகளுக்கோ கொடுத்துவிட்டு ஒரு அத்தாட்சிக் கடிதத்தைப் பெற்றுக்கொள்வதில் பிரயாணிகளுக்குத் தொல்லை குறைவு. கம்பலேறி தாய் நாட்டைவிட்டு வயிற்றுப் பிழைப்பிற்காக ஓட்டம்பிடிக்கும் ஏழை மக்களுக்குத் தடுப்பு அம்மை குத்திக்கொள்வதில் பயத்தை தவிர வேறு நம்பிக்கை கிடையாது. அநேகமாய் எல்லோரும் கையெழுத்துக்கூடப் போடத்தெரியாதவர்கள். படிப்பு, பயிற்சி, பழக்கம் ஒன்றுமில்லாதவர்கள். ஆங்கில வைத்தியப் படிப்பு முடித்து மாகாண வைத்திய ரிஜிஸ்டரில் பெயர் தாக்கல் செய்துகொண்ட டாக்டர்கள் எல்லோரும் அத்தாட்சி கொடுக்க அதிகாரம் பெற்றுர்கள். இவைகளின் விளைவு ஓர் வினேதம். நாகப்பட்டணம் துறைமுகத்தில் பலவிடங்களில் "இங்கே அம்மைத் தடைகுத்தி அத்தாட்சி கொடுக்கப்படும்" என்று விளம்பரங்ளுடன் அநேக சிறிய குடிசைகள் உண்டாயின. மாதம் இருமுறை கப்பல் பயணமாவதால் அதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக டாக்டர்களுடைய ஏஜண்டுகளும் அல்லது டாக்டர்களாகவே நேரிலும், அம்மை குத்தாமலே அத்தாட்சிகளை விற்கப் போட்டி வியாபாரம் நடத்தினுர்கள். பெயருக்குமட்டிலும் ஓர் ஊசிப்பெட்டியும், ஒரு மருந்து சீசாவும் அந்த குடிசைகளிலிருக்கும். அம்மை குத்துவதே கிடையாது. அத்தாட்சிகள் வியாபாரம்தான் நடக்கும். சமீப ஊர்களிலிருக்கும் டாக்டர்களிடம் நூறு அத்தாட்சி கையெழுத்து இட்டால் இவ்வளவென்று தரகர்கள் வந்து வாங்கிப்போய் கப்பல் புறப்படும்சமயம் அதைவிற்று பணம் சம்பாதித்து வந்தார்கள். இம்முறையில் சம்பாதிக்கும் பணத்தில் கம்பெனி டாக்டருக்கும் துறைமுக சுகாதார அதிகாரிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அதைத் தீர்ப்பதற்காக மாகாண சுகாதார அதிகாரி ஆங்கில ஐ.எம்.எஸ். ஒருவரும் அவர் இந்திய உதவியாளரான டாக்டரும் மத்யஸ்தம்செய்து சுகாதார டிபார்ட்மெண்டிற்கு இவ்வளவு பாகம் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்புகூறி இந்த வியாபாரம் ஐந்து வருஷங்களுக்கு மேலாக நடந்துவந்தது. இதன் விபரம் நாகபட்டணத்திலிருந்து கையெழுத்திடாத மொட்டைக் கடிதத்தில் கிடைத்தது. இதன் விவரங்களைத் தஞ்சைக்கலெக்டர்நேரில் விசாரித்து சென்னைகவர்மெண்டிற்கு யாதாஸ்து அனுப்பினுர். கடிதத்தில் கண்டிருந்த ஒவ்வொரு தகவலும் உண்மையெனத் தெரிந்தது. நம்நாட்டு நிகழ்ச்சி இவ்வாறிருக்க இறங்கும் துறைமுகத்திலுள்ள அதிகாரிகள் எவ்விதம்

இந்த அத்தாட்சிகளுக்கு மதிப்புக்கொடுத்தார்களென்பது நகைக்கத்தகுந்த விஷயம். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு அத்தாட்சியையாவது அவர்கள் நம்பவில்லை. கப்பலைவிட்டு இறங்கியதும், அங்கு ஒரு வாரம் துறைமுகத்திலுள்ள விடுதிகளில் இந்த ஏழைப்பிரயாணிகளை நிறுத்தி, தாங்களே தங்கள் வைத்திய அதிகாரிகளைக் கொண்டு தடை அம்மை ஊசிகுத்தி மற்றுமுள்ள ஏற்பாடுகளைச் செய்தபிறகு இவர்களை அவர்கள் நாட்டில் புக உத்தரவளித்தார்கள். சென்னை மாகாண சுகாதாரத் தலைவரே தீர்ப்புக்கொடுத்த உத்தரவை நடத்திவைக்கவேண்டியது தமது கடமையென நாகை துறைமுகச் சுகாதார அதிகாரியும் பகிரங்கமாகவே இந்த லஞ்சத்தைப் பெற்று அந்தத்தொகைகளுக்குச் சர்க்கார் வருமான வரியையும் செலுத்தி அதற்கான ரசீதும் பெற்று வந்தார்கள். இந்த வரும்படியில் மாகாண அதிகாரிக்கு எவ்வளவு? உதவி அதிகாரிக்கு எவ்வளவு? என்பதற்குச் சரியான புள்ளி விவரம் தஞ்சைக் கலெக்டர் விசாரணையில் தகவல் கிடைக்கவில்லை. மாகாண சுகாதார அதிகாரி தாம் பிரத்யேகமாக நடத்திய விசாரணையில் துறைமுக சுகாதார அதிகாரிகள் சுமார் இருபத்துநாலாயிரம் ரூபாய் வரையில் பெற்றிருப்பதாகக் கணக்கெடுத்தார். இவ்வளவும் லஞ்சம் என்பதான முடிவிற்கு வந்து சென்னை பப்ளிக் ஸர்விஸஸ் கமிஷன்" (Madras Public Servcies Commission) மூலம் விசாரிக்க ஏற்பாடு செய்து, இரண்டு துறைமுக சுகாதார அதிகாரிகளும், ஒரு உதவி மாகாண சுகாதார அதிகாரியும் குற்றவாளிகள் என முடிவு ஏற்பட்டது. அதற்குத் தகுந்த தண்டனையும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஒரு சிறிய மொட்டைக் கடிதத்தின் பலனாகப் நாகப்பட்டணம் துறைமுகத்தின் ஊழல் வெளிவந்தது. அதற்குப்பிறகு நாகப்பட்டணத்தில் அத்தாட்சிப் பத்திர ஏலமும் அதன்மூலம் நடந்த வியாபாரமும் நின்றன. இதன் பிறகு எல்லாக் கடிதங்களும் ஒன்றுதவருது விசாரணைக்குக் கொண்டுவந்துதான் முடிவு செய்ய வேண்டுமென்கிற ஓர் கட்டுப்பாடும் செய்ய முடிந்தது.


USE ALWAYS

**Jupiter Face Powder**

**Toilet & Medicinal**

Our Special Quality is **WEISSE ROSE**.

Samples in Two Boxes Against Re. 1

**ஜூபிடர் பேஸ் பவுடர்**

**உபயோகியுங்கள்**

கோடை காலத்திற்கு மிகவும் சிறந்தது. குளிர்ந்த வாஸனையுடையது. விஞ்ஞான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது. இது முகத்தில் உள்ள பருவுகளையும் தேமல்களையும் அறவே போக்கி முகத்தை தேஜஸாக்கி அழகு படுத்த வல்லது. இதனை ஒரு முறை வாங்கி உபயோகித்து. — பார்த்தால் உண்மை விளங்கும். —

**எல்லா இடங்களிலும் கிடைக்கும். ஏஜண்ட் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை?**

சாம்பிள் புட்டிகள் வேண்டுவோர் 1 ரூ. மணியார்டர் செய்தால் அழகிய இருபெட்டிகள் அனுப்பப்படும்.

**The Jupiter Trading Company**

20, Kuchukatti Street :: :: KUMBAKONAM, S. I.

# ராமனும் லக்ஷ்மணனும்

வே. நாராயணன்

முண்டகோப நிஷத்திலே, "இரண்டு பறவைகள் ஒரு மரக்கிளையிலே இருந்தன; அவற்றுள் ஒன்று பழத்தைத் தின்றுகொண்டிருந்தது, மற்றொன்று அதைப் பார்த்துக்கொண்டிருந்தது" என்று ஒரு உதாரண மூலமாக உண்மை உபதேசிக்கப் பெற்றுள்ளது. "உண்ணும் பறவை ஜீவாத்மா; உண்ணாது ஸாக்ஷியாக இருக்கும் பறவை பரமாத்மா" என்பது அவ்வுபதேசத்தின் கருத்து. அத்வைத மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இரண்டு பறவைகள் ஒன்றே என்று நிரூபிக்கிறார்கள். ஸ்ரீ ராமானுஜர் முதலியவர்கள் அவற்றை வேறாகக்கொள்கிறார்கள். இந்த உபநிஷத்தின் பொருளையே ஸ்ரீமத் ராமாயணமும் ராம லக்ஷமணர்களால் விளக்குகின்றது. லக்ஷ்மணன் இராமனுக்கு இரண்டாவது அந்தராத்மா, பரபிரும்மம் மாயையைத் தனக்குப் பரதந்திரமாகக்கொண்ட ஈசுவரனாகவும் மாயைக்கு அடங்கிய ஜீவனாகவும் தோன்றுகின்றது என்னும் உண்மையை, ஸீதாப்பிராட்டியைத் தனக்குப் பரதந்திரப் பட்டவளாகக்கொண்ட ராமனாலும் பிராட்டிக்குப் பரதந்திரனான லக்ஷ்மணனாலும் ஸ்ரீ ராமாயணம் விளங்கச்செய்கின்றது என்று கூறலாம். ஸ்ரீராமன் சுத்த ஸத்வஸ்வரூபியான ஈசுவரனையே தன்செயலாலும் சொல்லாலும் நினைப்பூட்டுகிறான். லக்ஷ்மணனோ, முக்குணங்களுக்கு உட்பட்ட ஜீவத்வத்தையே விளக்குகிறான்என்பது பலர் கொள்கை, இக்கொள்கைதான், ராமனை மட்டும் மஹாவிஷ்ணுவாகவும் லக்ஷ்மணனை ஆதிசேஷனின் அம்சமாகவும் மற்றைப் புராணங்கள் கூறுவதின் கருத்து. இருவரும் பரத சத்ருக்னர்களுமே மஹாவிஷ்ணு என்னும் வால்மீகிமுனிவரின் வாக்கு அத்வைத மதத்திற்கு அனுகூலமாகின்றது போலத் தோன்றும். இது எவ்வாறாயினும், உபநிஷத்து மரத்திலேயிருந்த இரண்டு பறவைகளையும் போல ராமலக்ஷ்மணர்கள் விளங்கினார்கள் என்பது தெளிவு.

நம்முடைய சரீரமும் இந்த விருக்ஷத்தைப் போன்றது. அதனுள், அந்தராத்மாக்கள் இருவர் இருக்கின்றனர். "இராமனுடைய சரீரத்துள் ஒரு அந்தராத்மாதான் இருந்தது; மற்றை அந்தராத்மா லக்ஷ்மண வடிவங்கொண்டு அந்தச் சரீரத்திற்கு வெளியிலே இணைபிரியாமல் உலாவியது" என்று ஸ்ரீராமாயணம் பல இடங்களிலே கூறுகின்றது. ராமனைத் தசரதர் விசுவாமித்திர முனிவரோடு அனுப்புகிறார். ராமனுடைய இரண்டாவது அந்தராத்மாவான லக்ஷ்மணனும் கூடச்செல்கிறான். ராமனுக்கு அம் முனிவர் பலா அதிபலா என்னும் மந்திரங்களையும் மந்திர ரூபங்கொண்ட அஸ்திர சஸ்திரங்களையும் உபதேசிக்கிறார்; லக்ஷ்மணனும் அவற்றைப் பெறுகிறான். யுவராஜ்ய பட்டாபிஷேகம் ராமனுக்கு என்றால், "என் இரண்டாவது அந்தராத்மாவாகிய உன்னையே இந்த யுவராஜ்யலக்ஷ்மி அடைகின்றாள்" என்று ராமன் லக்ஷ்மணனிடம் கூறுகிறான். ராமனைப் பிரிந்து இருக்க பிராட்டியால் முடிந்தது; லக்ஷ்மணனால் முடியவில்லை; பிராட்டியைப் பிரிந்திருக்க ராமனால் முடிந்தது; லக்ஷ்மணனைப் பிரிந்திருக்க முடியவில்லை. லக்ஷ்மணனோடு ராமனும் ஸரயூவிலே பிரவேசிக்கிறான்.

இவ்வாறு பகவான் அவதாரஞ்செய்யும் போது இரண்டு வகையாகப் பிரித்து அந்தராத்மாவை விளக்கிக் காட்டியதன் தாத்பர்யம் நம்முள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இவ்விரண்டு அந்தராத்மாக்களும் இருப்பதை நன்கு உணர்த்துவதற்காகவே போலும். நம்முள் ஸாக்ஷியாக இருக்கும் ஆத்மா ராமனைப்போல, "பட்டாபிஷேகம்" என்றபோதும் "பட்டாபிஷேகத்தை விடுத்துக் காடுசெல்வாய்" என்றபோதும் ஒரு ஒரு நிலைப்பட்ட ஸெளமுகத்தை யுடையதாய் விளங்குகின்றது. இன்பதுன்பங்கள் அதனைப் பாதிப்பதில்லை. மற்றொரு அந்தராத்மாவோ, "பட்டாபிஷேகம்" என்றபோது களிப்புறுகின்றது. "காடுசெல்வாய்" என்றபோது கோபத்தாலும் சோகத்தாலும் குமுறுகின்றது. இது எதனால் என்றால் இந்த அந்தராத்மா முக்குணங்களால் கட்டுண்டு கிடக்கின்றது. வேறு சில சமயங்களில் ராமனுக்குள் இருக்கும் அந்தராத்மா முக்குணங்களாலே கட்டுண்டும் கோப சோகங்களுக்கு உள்ளாகின்றது; அப்போது லக்ஷ்மணனாகிய அந்தராத்மா ஸாக்ஷியாக

16-ம் பக்கம் பார்க்க

# தமிழ்நாடும் பம்பாய் திட்டமும்

**க. சந்தானம்**

மூன்று மாதங்களுக்கு முன் நமது நாட்டின் சில பிரபல முதலாளிகளும், பொருளாதார அறிஞரும் கூடி ஒரு பொருளாதார திட்டம் வகுத்தனர். அது இந்தியாவின் பொது நலத்தையே நாடி வகுக்கப்பட்டது. அதனால் நாடெங்கும் ஓர் புதிய பரபரப்பு உண்டாகியிருக்கிறது. முதலில் இந்திய சர்க்காரும், அதன் அடிமை கோஷ்டிகளும் இத்திட்டத்தைப் பரிகாசம் செய்யப் பார்த்தனர். ஆனால் ஆராய ஆராய அதன் உட்கருத்துக்களின் பெருமை பெருகினவேயொழிய, அதற்கு ஒரு பங்கமும் ஏற்படவேயில்லை. அரசியல் சுதந்திரம் கிடைத்து மகாண மத்திய அரசாங்கங்கள் முற்றிலும் தேசிய மயமானாலொழிய இத்திட்டமும் வேறு எத்திட்டமும் ஏட்டுச்சுரக்காயாகத்தான் இருக்கமுடியும். ஆனால், நாட்டின் வருங்காலப் பொருளாதாரத்தைப் பற்றி உண்மையான கருத்துக்கள் பரவினால், அதனாலேயே சுதந்திர ஆவலும் அதிகரிக்கும். சுதந்திரம் கிடைத்தபின் திட்டம் வகுக்கத் தாமதம் ஏற்படாது. இந்த வியாசத்தில் இத்திட்டம் அமுலுக்கு வந்தால் தமிழ் நாட்டின் பாகமென்னவாக விருக்குமென்று விளக்க விரும்புகிறேன்.

நாட்டிற்குப்பொதுவாக ஒரு திட்டம் போட்டுவிட்டால்போதாது. அது எல்லாப் பாகங்களுக்கும் நியாயமாக வகுக்கப்படவேண்டும். ஓர்மாகாணத்தில் தொழில்விருத்தியாகி இதர பாகங்கள்ஏழையாக இருப்பின் நாட்டின் மொத்தச்செல்வம் வளர்வதைக்கொண்டு பஞ்சப்பிரதேசங்கள் திருப்தியடைய முடியாது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இங்கிலாந்தும், கானடாவும், ஆஸ்திரேலியாவும் மிகவும் செழிப்பாகவிருப்பதால் இந்தியாவிற்கு என்ன பலன்? தங்கள் தொழில்கள் குறையாமலிருப்பதற்கு இந்தியத்தொழில் விருத்தியைத் தடுப்பதுதான். அவ்வாறே இப்பெரிய நாட்டிலும் ஒவ்வோர் பாகம் முன்னேறினால் போதாது. கூடியவரையில் எல்லாப் பாகங்களும் செழிக்கவேண்டும். ஒவ்வோர் பாகத்திலும் எல்லா மக்களும் வறுமையொழிந்து மகிழவேண்டும். ஆதலால் தமிழ் மக்கள் தமிழ் நாட்டிற்கு இத்திட்டத்தில் சரியான பாகம் தேடுவது நியாயமேயாகும். அதில் குறுகிய நோக்கமொன்றுமில்லை.

முதலில் பம்பாய்த் திட்டத்தின் சாராம்சத்தைக் குறிப்பிடவேண்டும். 1931-32இல் இந்தியாவின் மொத்த வருஷ வருமானம் 2200 கோடி ரூபாய். 35 கோடி ஜனங்களுக்கு இதில் சராசரி ஈவு தலைக்கு வருஷத்திற்கு ரூ. 65; தினசரி ரூ. 0—2—10; மிகக் குறைவான கணக்குப்படி பார்த்தாலும் உணவு, உடை, வீடு, சுகாதாரம், ஆரம்பக்கல்வி இவைகளுக்கே குறைந்தது 2900கோடிரூபாய் அல்லது தலைக்கு வருஷம் ரூ 74 வேண்டும். ஆதலால் இந்தியன் மான ஜீவனம் நடத்த வேண்டுமாயின் 1931—32 வருமானவிகிதத்தைக் குறைந்த பக்ஷம் இருமடங்காவது ஆக்க வேண்டும். 1960ஆம் வருஷத்தில் இந்திய ஜனத்தொகை 475 கோடியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆதலால் நாட்டின் மொத்த வருமானம் மூன்று மடங்கு 6600 கோடி ஆனால்தான் சராசரி வருமானம் ரூ 130 ஆகும். இந்த வருமானம் உண்டாவதற்கு அடுத்த 15 வருஷங்களில் 10,000 கோடி ரூபாய் முதல் போடவேண்டும். தொழிற்சாலைகளுக்கு 4500 கோடி, விவசாயத்திற்கு 1250 கோடி, வீடுகளுக்கு 2200 கோடி, போக்குவரத்துச் சாதனங்கள் 1250 கோடி, இதர முதல் செலவுகள் 800கோடி. இதன் பலனாக 1960 ஆம் வருஷத்திற்குள் நாட்டின் செல்வம் 2200 கோடியிலிருந்து 6600 கோடியாகும். இதில் தொழிற்சாலைகளின் வருமானம் 374 கோடியிலிருந்து 2240கோடியாகும். விவசாய வருமானம் 1166 கோடியிலிருந்து 2670 கோடியாகவும், சேவைகளால் உண்டாகும் வருமானம் 484 கோடியிலிருந்து 1450 கோடியாகவும் அதிகரிக்கும். இந்த மொத்த வருமானத்தில், நாட்டிற்குப்போதுமான கல்வியும் சுகாதாரமும், போக்குவரத்து சாதனங்களும் வீடுகளும் பழகுவதற்கு வருஷாந்தரம் 1200 கோடி செலவு செய்வது சாத்தியமாகும்.

இத் திட்டப்படி தமிழ் நாட்டின் பாகமென்ன? அதன் ஜனத்தொகை ஏறக்குறைய இந்தியாவின் ஜனத்தொகையில் 20இல் ஒரு பாகம். ஈவுப்படி தமிழ் நாட்டின் உத்தாரணத்திற்கு 500 கோடி முதல் வேண்டும். இதில் 225 கோடி தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கு 65கோடியும், வீடுகள் கட்டுவதற்கு 110 கோடியும் இதர இனங்களுக்கு 35 கோடியும் வேண்டும். இதன் பலனாகத் தமிழ் நாட்டிற்குத் தொழிற்சாலை வருமானம் 120 கோடி, விவசாயம் 130 கோடி. சேவை 75 கோடி ஆக 325 கோடி வருஷ வருமானம் கிடைக்கக்கூடும். 250லக்ஷம் ஜனங்களுக்கு இது சராசரி ஈவு ரூ. 130 ஆகும்.

ஆனால் வெறும் ஈவை வைத்துக்கொண்டு ஒரு தமிழனும் ஜீவிக்கமுடியாது. இந்த ஈவுப்படி ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் போதுமான வருமானம்பெறவேண்டும். பொதுவுடைமைச்

சமுதாயத்தில் கூட ஏற்றத்தாழ்வுகளை அடியோடு ஒழிக்க முடியாது. ஆதலால் ஈவு ரூ. 130 ஆகவிருந்தபோதிலும், எத்தமிழனுக்கும் ரூ. 100க்குக் குறையாமல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தால் போதுமானது. அதாவது, தமிழ்நாட்டில் 1960இல் 50 லக்ஷம் குடும்பங்களிருப்பின், ஒவ்வோர் குடும்பத்திற்கும் குறைந்தது வருஷம் ரூ. 500 வருமானம் இருக்கவேண்டும். இதற்கு என்ன நியமங்கள் வேண்டும் என்பதைப்பற்றி பம்பாய்த் திட்டத்தார் கூறவில்லை. பின்னல் விளக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதலால் பின் கூறப்படும் யோசனைகளின் முழுப்பொறுப்பும் பிரத்தியேகமாக என்னுடையதே.

50 லக்ஷம் குடும்பங்களில், திட்டம் அமுலான பிறகு 30 லக்ஷம் குடும்பங்கள் விவசாயத்திலும், 15 லக்ஷம் குடும்பம் தொழில்களாலும், 5 லக்ஷம் குடும்பங்கள் சர்க்கார் சேவை முதலிய பணிகளாலும் ஜீவனம் செய்யவேண்டியிருக்குமென்று எதிர்பார்க்கிறேன். விவசாயத்தில் ஈடுபடும் ஒவ்வோர் குடும்பத்திற்கும் 6 ஏகரா நிலம் தமிழ் நாட்டில் இருக்கிறது. ஆதலால் 6 ஏகரா நிலத்தில் வருஷாந்திர வருமானம் 500க்குக் குறையாமலிருந்தாலொழிய விவசாயிகளின் நிலைமை குறிப்பிட்ட அளவு சீர்படாது. நிலத்தில் இந்த வருமானம் வந்தால் போதாது. அது விவசாயியின் வருமானமாகவிருக்க வேண்டும். வட்டி, வாய்தா, மேல்வாரம் இவைகளுக்கெல்லாம் மிச்சம் வேண்டுமானல் ஏகராவின் சராசரி வரும்ானம் குறைந்தது 150 ரூயாவது ஆகவேண்டும். பம்பாய்த் திட்டபடி தமிழ்நாட்டின் 180 லக்ஷம் ஏகராக்களின் வருமானம் 130 கோடி, அதாவது ஏகராவுக்கு ரூ. 75 சராசரிவருமானம். குடும்பத்தின் 6 ஏகராவின் வருமானம் ரூ 450 தான் ஆதலால் பம்பாய்த் திட்டத்தைத் தமிழ் நாட்டிற்குத் திருத்தியமைக்கும்பொழுது ஒன்று விவசாய வருமானம் குறிப்பிட்ட அளவுக்குமேல் விருத்தியாகும்படி செய்ய வேண்டும். அல்லது எல்லா நிலங்களையும் விவசாயம் செய்யும் குடும்பங்களுக்கே சொந்தமாகச் செய்து, விவசாயிகளுக்குக் கடன் கிஸ்தி முதலிய பாரங்கள் இல்லாமல் செய்யவேண்டும்.

தொழிலாளிகளை எடுத்துக்கொள்ளுவோம். 15 லக்ஷம் குடும்பங்களில் வேலை செய்யக் கூடியவர்கள் 30 லக்ஷம் பேர்கள் தானிருப்பார்கள். தவிர எல்லா வயதுவந்த பெண்களும் தொழில் செய்யமுடியாது. ஆதலால் 15 லக்ஷம் ஆண்களும், $7\frac{1}{2}$ லக்ஷம் பெண்களும் தொழில் செய்வதாக வைத்துக்கொள்ளுவோம். 15 லக்ஷம் குடும்பங்களுக்குத் தலைக்கு ரூ 500 வீதம் 75 கோடி ரூபாய் வேண்டும். அதாவது ஒவ்வொரு தொழிலாளிக்கும் வருஷம் ரூ 334 கூலி வரவேண்டும். வருஷம் 30 நாள் ஓய்வு அவசியமாகும் என்று வைத்துக்கொண்டால் தொழிலாளியின் குறைந்த கூலி தினம் ஒரு ரூபாய் என்று விதி செய்யப்படவேண்டும். தொழிற்சாலைகளின் மொத்த வருமானம் 120 கோடி எதிர்பார்ப்பதால் அதில் கூலியின் ஈவு ரூபாய்க்கு 10 அணுவாகும்.

இந்த இரண்டு நியமங்களும் செய்தபின் வேலை செய்யக்கூடாதவர்கள், அநாதைகள், தாற்காலிகமாக நோயில் வீழ்ந்திருப்பவர்கள் இவர்களின் குடும்ப சம்ரக்ஷணை செய்வது அவசியம். தமிழ் நாட்டில் 1லக்ஷம் குடும்பம் இந்த வகுபைச் சேர்ந்திருக்குமாயின், அதற்கு வருஷம் 5கோடி வேண்டும். மொத்த வருமானம் 325 கோடியில் இது ரூபாய்க்குக் காலணு கணக்காகிறது. தர்மத்திற்குக் காலணு மகிமை கொடுப்பது எந்தச் சமுதாயத்திற்கும் கஷ்டமாக விராது.

நான் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்கள் பெரும்படியானவைகள். தமிழ்நாட்டிலிருக்கும் பொருளாதார அறிஞர்கள் மேற்கூறிய யோசனைகளை வைத்துக்கொண்டு விபரமான ஒரு திட்டம் வகுக்கக் கூடுமானல், பொது ஜனங்களின் அறிவையும். தேசபக்தியையும் திரட்டுவதற்கு மிகவும் சாதகமாகவிருக்கும். 500 கோடி ரூபாய் முதல் வேண்டுமேயென்று ஒருவரும் மயங்கலாகாது. இந்த ஐந்து வருஷங்களில் நம் நாடு யுத்தத்திற்காகச் சுமார் 2000 கோடிரூபாய் செலவும் கடனுமாகப் புதிய பாரமேற்றிருக்கிறது. அதில் தமிழ்நாட்டின் ஈவு 100 கோடியானல், அடுத்த 15 வருஷங்களில் பொருளாதார விருத்திக்காக 500 கோடி முதல் சேமிப்பது அசாத்யமல்ல. வேண்டுமானல் வெளி நாடுகளில் கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ளலாம். சுதந்திரதாகமும், பொதுமக்கள் நிலைமையை உயர்த்ர ஆவலுமே வேண்டும்.

---

14-ம் பக்கம் தொடர்ச்சி.

நின்று குணாதீதமாக விளங்குகின்றது. இவ்வாறு வான்மீகி முனிவர் வருணிப்பதினின்றும் இரண்டாகத் தோற்றும் ஆத்மா ஒன்றே என்னும் உண்மையை வற்புறுத்துவதாக ஏற்படுகின்றது.

நாம் அனைவரும் மாயைக்குட்பட்ட ஜீவாத்மாக்களாக விளங்குகிறோம். சுகம் வந்தால் களிப்புறுகிறோம்; துக்கம் வந்தால் துன்புறுகிறோம்; இது ஸகஜம். ஆனாலும் நம்முள் இருக்கும் பரமாத்மாவினுடைய தன்மை மேலிடுமாறு முயலவேண்டும். ராமலக்ஷ்மண விவாதங்கள் நம்முன் தினந்தோறும் நடந்துகொண்டிருக்கின்றன. அப்பொழுது ஸாக்ஷியாகிய பரமாத்மாவே உண்மை என்று அறிந்து முக்குணங்களின் ஆதிக்கத்தை அழித்து ராமலக்ஷ்மணர்களைப்போல வெற்றி பெறவேண்டும் என்பதே ராமலக்ஷ்மணவதாரங்களால் நாம் பெறக்கூடிய பயன்.

# பொல்லா உலகம்

கௌரி

நிசி வேளை. உலகம் நித்திராதேவியின் வலையில் சிக்கி மயங்கிக் கிடந்தது. ஊர் கடைசி. ஓர் சாரியாய் நின்றன சில சிறிய வீடுகள். அநேகமாய் ஒன்றிலும் விளக்குத் தென்படவில்லை. கடைசியிலிருந்த வீடொன்றில் ஒரு சிறிய வெளிச்சம் தோன்றியது. அறையில் ஒரு மசிக்கூட்டு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அருகில் இரண்டு உருவங்கள் உட்கார்ந்திருந்தன. ஒன்று பெண். மற்றொன்று ஆண். அதாவது ஒரு வாலிப உருவம். பெண் உருவம் வாடித் தேய்ந்து, வதங்கி முகத்தில் களையற்று இருந்தது. அகத்தில் கொதித்துக்கொண்டிருந்த துக்கம் கண்களில் மூலம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அந்நிலைமையில் அவளுடைய வயதைக் குறிப்பிடுவதே மிகவும் சிரமம். வாலிபனுக்கு அதிக வயதில்லை. பதினைந்து பதினாறு வயதுதான இருக்கலாம். நல்ல கட்டான தேகம். முகத்தில் யௌவனத்தின் சின்னங்கள் பூர்ணமாய் பதிந்திருந்தும் அம்முகத்தில் ஓர் ஆழ்ந்த கவலையும் துக்கமும் மேலோங்கி நின்றது. யௌவனத்தின் ஒளியும் தீர்மானமும் ஓங்கி வீசவேண்டிய அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர்மாலை சொரிந்துகொண்டிருந்தது.

"இப்படிப் பேசுகிறார்களே எல்லோரும், அப்படி அப்பா என்ன குற்றம் செய்துவிட்டார் அம்மா? வரவர என்றால் பொறுக்கவே முடியவில்லை" என்றான் வாலிபன் அப்பெண்ணுருவத்தைப் பார்த்து.

வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வாலிபனைப் பார்த்தாள். மகன் கண் கலங்கக்கூடாதென்று எவ்வளவு காலம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் அது? மகனின் இளம் உள்ளத்தை இடிக்கத் தாயுள்ளம் சம்மதிக்கவில்லை. சொல்லாமல் மறைத்து மறைத்து வைத்தான். ஆனால் இன்று வேறு வழி இல்லை. பொல்லா உலகம் தளிர்த்துத் தலை தூக்கும் உணர்ச்சி நிறைந்த இளம் உள்ளத்தில் கூறிய வேகமான அம்புகளை எய்யவாரம்பித்து விட்டது! இனி என்ன செய்ய முடியும்? அவள் வாயை மூடிக்கொண்டிருக்கலாம். ஊர் வாயை அவள் எவ்விதம் மூட முடியும்? இவ்வளவு வருஷக்கணக்காய் அணை போட்டு வைத்திருந்த அவளுடைய துக்க வெள்ளத்தை வெளியில் விட்டாள்.

"முருகேசா, ஊர் சொல்லுவது வாஸ்தவம் தான். உன் தகப்பனாரும் இன்னும் சிலரும் வெகுகாலம் வரையிலும் ஆப்த நண்பர்களாய் இருந்தார்கள். காலம் நல்லதாய் இருக்கும் வரையில் ஒரு துன்பமும் இல்லை. ஒருவர் புத்தியும் கெடவில்லை. ஆனால் சீக்கிரத்தில் காலம் மிகவும் கெட்டுவிட்டது. அவர்களுடைய புத்தியும் கெட்டுவிட்டது. அவர்களில் யாரோ கொலை களவு செய்தார்கள். வாஸ்தவத்தில் தண்டனையடைய வேண்டியவர்கள் தப்பியோடி விட்டார்கள். ஒருவரும் அகப்படவில்லை. குற்றம் செய்தவன் தப்பியோடி விட்டான். உன் அப்பா வாயில்லாபூச்சி. உயிரையே வேண்டுமானாலும் மற்றவர்களுக்காகத் தியாகம் செய்வார். குற்றம் செய்தவரையும் காட்டிக்கொடுக்கவில்லை. பழி ஏன் அவர் தலையில் வந்து சுமராது? எல்லா அபராதமும் அவர் தலையிலேயே வந்து விடிந்தது. உயிருக்கே ஆபத்து வந்து சேர்ந்தது. ஆனால் கடவுள் ஒருவர் இருக்கிறார் ஏழைகளைக் காப்பாற்ற. நம்முடைய நல்ல காலம் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. கடுந்தண்டனை கிடைத்தது. பத்து வருஷங்கடுங் காவல்! என்ன செய்வதப்பா? உலகம்போல்லாது. பண்டம் ஓரிடம், பழி ஓரிடம். அப்பா! ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாய்த்தான் தள்ளினேன். உலகம் அதை அறிகிறதா? அப்பொழுதும் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக்கொண்டிருந்தது".

சற்று நேரம் மௌனமாய் இருந்தான் வாலிபன். தாயின் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் சென்று என்னவோ வேதனை செய்தன.

"என்ன உலகம்? இதைவிட்டு எங்கேயாவது கண்காணாமல் ஓடி விடக்கூடாதா அம்மா?', என்றான் அவன்.

ஹூம் என்று பலவந்தமாய் ஒரு சிரிப்பு சிரித்தாள் அவள் தாய்.

"முருகேசா, நீ இன்னும் இளங்குழந்தை. உனக்கு என்ன தெரியும் உலகம்? இந்தப் பரந்த உலகத்தில் இனி நாம் எங்குச் சென்றாலும் நமக்குச் சிறைவாசம்தான். ஊரையும் நாட்டையும்துறக்கலாம் ஆனால் காவலிலிருந்து தப்ப முடியாது. எங்குச் சென்று என்ன பயன்?" என்று சொல்லி வருத்தத்துடன் முருகேசனைப் பார்த்தாள்.

"ஆனால் என்னையும் இப்படியேதான் அழைப்பார்களா அம்மா? இதிலிருந்து நான் தப்ப முடியாதா?" என்றான் அவன். அவனுடைய குரலில் கோபமும் துக்கமும் சேர்ந்து தொனித்தன.

"முருகேசா, என்ன செய்வது? நாம் செய்த பாக்கியம் அவ்வளவுதான். இனி எல்லாம்

உன் கையில்தான் இருக்கிறது. உலகத்தில் நேர்வழியில் நடக்கவேண்டும். நல்ல பெயரை எடுக்கவேண்டும். அதுதான் மனிதனுக்கு முதலில் வேண்டியது. இவ்வுலகத்தில் மனிதனுக்கு அதுதான் ஸகல ஸம்பத்தும்;'' என்றுள் மறுபடியும் அவள்.

முருகேசனுடைய முகம் கோபத்தால் சிவந்தது. "என்ன அம்மா பேசுகிருய் நீ? அப்பா நேர்வழியில் நடக்கவில்லையா? மற்றொரு வருக்காக உயிரையும் துறக்கத் தயாராக வில்லையா? ஆனுல் ஏன் அவருக்கு நல்லபெயர் கிடைக்கவில்லே? நல்லபெயர் என்ருல் எப்படி எடுப்பது?'' என்று ஆத்திரத்துடன் தரையின் மேல் கையை ஓங்கி அறைந்தான்.

சற்று மௌனமாய் இருந்தாள் அவன் தாய்.

"அப்பா, சொன்னேனே உன் அப்பா வாயில்லாப்பூச்சி. உலகத்தில் எல்லோருடனும் பழகத்தெரியவேண்டும். இரண்டு எழுத்து படிக்கத்தெரியவேண்டும். மனிதன் தன்னை எப்படியாவது காப்பாற்றிக்கொள்வான். அதற்குத்தான் உன்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன்'' என்ருள்.

முருகே;— "இல்லை அம்மா, இனி நான் பள்ளிக்கூடம் போகமாடடேன். என்னுல் அப்பெயரைக்கேட்க முடியவில்லை. என் உள்ளமே வெடித்துவிடும் போலிருக்கிறது. எங்கேயாவது ஓடிவிடப்போகிறேன் நான்–''

தாய்:— அப்படி ஓடுவாயாகில் கட்டாயம் உலகம் உன்னை இன்னும் தூற்றும். வீண் வார்த்தைகளுக்குள்ளாவாய். நன்ருய்ப்படித்து நாலுகாசு சம்பாதித்தால் தானே நல்ல பெயர் கிடைக்கிறது. அவர்கள் சொன்னுல் நமக்கென்ன? நீ பள்ளிக்கூடம் போவதை விடக்கூடாது. இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் முருகேசனுக்கு ஓர் புதிய தைர்யம் உண்டாயிற்று. அவனுடைய கண்களில் ஓர் ஒளி வீசியது. "எப்படியாகிலும் ஸரி அம்மா, இவ்வபவாதத்திலிருந்து விலக்கிக்கொள்ளவேண்டும், உலகத்தில் ஓர் உணர்ச்சியைக் கிளப்ப வேண்டும்' என்று சொல்லிக்கொண்டான். ஆழ்ந்த தீர்மானம் அவன் முகத்தில் ஓடி உள்ளத்தில் ஆழமாய்ப்பதிந்தது. அப்பொழுது தான் வெளியிலிருந்து அவன் தந்தை வந்தான். இவர்களுடைய பேச்சில் அவனும் கலந்து கொண்டான். இரண்டு உள்ளங்களுக்கிடையே மோதிக்கொண்டிருந்த துக்க அலைகளுடன் மூன்ருவது பெரும் அலேயும் சேர்ந்து மோத வாரம்பித்தது. துக்க சாகரங்கள் மூன்றும் கூடிப் பயங்கரமான அலைகளுடன் ஓர் சிறிய எண்சாண் அறையில் மோதிக் கொண்டிருந்தன. விஸ்தாரமான இவ்வுலகில் அவைகளுக்குப் புரண்டு ஓடித்துக்கத்தை ஆற்றிக்கொள்ள இடம் கிடைக்கவில்லை போலும்!

பதினாறு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அவன் பிறந்தது — யோசித்துக்கொண்டே இருந்த அவனுக்கு அவனுடைய ஞாபகத் திரையில் ஏதோ சித்திரங்கள்வந்து தோன்றித் தோன்றி மறைத்துகொண்டிருந்தன. பழைய நினைவுகள் வந்து வந்து மறைந்துகொண்டிருந்தன.

மின்னல்களுக்கிடையே மானம் பயங்கரமாய் உறுமிக்கொண்டிருந்தது. "சோ'' என்று மழை. அவர்கள் இருந்த சிறிய மண் வீட்டில் எங்கும் மழைத் தண்ணீர் ஒழுகிப் பெருகிக் கொண்டிருந்தது. ஒத்தாசைக்குக்கூட ஒருவரும் இருக்கவில்லை. தேகத்தில் "சுரீலென்று'' கூர்ந்து பாயும் கடுமையான குளிர். போட்டுக் கொள்ளப் போதுமான வஸ்திரமில்லை. ஓர் பாயின்மேல் படுத்துக்கொண்டிருந்தாள் அவன் தாய். அவள் தேகம் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அவன் பிறந்தான். "பிள்ளையா'' என்ருன் அவன் தகப்பன். அவ்விடமிருந்த மற்றொரு ஆத்மா அவன்தான்-அவனும்குளிராலும் கவலையாலும் ஒடுங்கி ஓர் மூலையில் உட்கார்ந்திருந்தான். மகன் பிறந்தானென்று அவன் ஸந்தோஷப் படவில்லை. அவன் ஆயுளில் நாற்பதாவது கல்லில் பிறந்தது ஒரேமகன்தான் "இன்னும் எங்கேயாவது போய் பிறக்கக்கூடாதா? நம்ம வயிற்றில் வந்து பிறந்தது பாவம்'' என்று சொல்லிக்கொண்டான். அவன் தாய் ஒன்றும் பேசவில்லை. அவளுக்குப் பேசத் தள்ளவில்லை. விளக்கொளியில் தெரிந்த குழந்தையின் முகத்தைப் பார்த்து தனக்குள் மகிழ்ந்துகொண்டிருந்தாள். இவ்வுலகத்தில் அவன் பிறந்ததற்காக ஸந்தோஷப்பட்டவள் அவள் ஒருவள்தான், அவளுடையமுப்பத்தைந்தாம் வயதில் பிறந்த முதல் அருமை மகன்-முருகேசன் என்று நாமம் சூட்டினுர்கள்.

இதெல்லாம் அவன் பிறந்தஉடன் நடந்த சம்பவம். அவனுக்கெப்படித் தெரியும்? கொஞ்சம் விளையாட்டுவந்து முகம் பார்த்துச் சிரிக்கும் சமயம் அவன் பார்த்தது இரண்டே முகங்கள்தான், அவன் தாய், அவன் தந்தை. களையற்றுத் துன்பம் நிறைந்த முகம் ஒன்று. இளைத்துத் துரும்பாய் இருந்த எலும்புக் கூடொன்று. இதைத் தவிர வேறு ஒரு முகம் அவனுக்குத் தெரியாது. பிறகு மூன்று நான்கு வயது வரையிலும் அவன் அறிந்துகொண்டது கொஞ்சம்தான். அவனுக்கு ஒரு அப்பா உண்டு, ஒரு அம்மா உண்டு. மூவரும் இருப்பதற்கு ஒரு சிறிய மண் வீடு. சமைத்துச் சாப்பிட இரண்டு மண் பாத்திரங்கள். போட்டுக்கொள்ள கொஞ்சம் கந்தைகள். பொழுது விடிந்தால் அப்பா எங்கேயோ கிளம்பிப் போவான். மாலைதான் திரும்பிவருவான். வரும் பொழுது ஏதோ கொண்டுவருவான். உலை வைத்து என்னமோ செய்வாள் தாய், சாப்பிடுவார்கள். என்ன என்று அவனுக்குச் சொல்லத்

தெரியாது. தாய் எங்கும் வெளியில் போக மாட்டாள். அக்கம் பக்கத்தில் யாருடனும் பேசமாட்டாள். தண்ணீர் கொண்டுவருவதற்கு மட்டும் வெளியில் போவாள். தெருக்குழாயடிக்குப்போவாள். முருகேசனும் அவளுடன் ஓடுவான். எல்லோரும் முதலில் தண்ணீர் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அவன் தாய்தான் கடைசியில் பிடித்துக்கொண்டு வருவாள். தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும் பொழுது தெருவார் அவர்களைப் பார்த்து என்னவோ பேசிக்கொள்வார்கள், சிரிப்பார்கள். தாய் யாரையும் பார்க்கமாட்டாள். தலையைக் குனிந்துகொண்டு வீட்டிற்கு வந்துவிடுவாள். முருகேசனுக்கு இதற்கெல்லாம் காரணம் அப்பொழுது தெரியாது. அவன் இன்னும் குழந்தை. அவன் தாயும் அவனிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவனையும் அழைத்துக்கொண்டு சுள்ளி ஒடிக்கப்போவாள். ஒடிந்த ஒரு சிறிய கட்டை முருகேசன் தலையில் வைத்துக்கொண்டு வருவான். அதில் அவனுக்கு எவ்வளவோ பெருமை. அவனைப் பார்த்துக் களிப்பாள் அவன் தாய்.

நாட்களும் ஓடிக்கொண்டேவந்தன. வரவரப் பெரியவனுய் வளர்ந்துகொண்டு வந்தான் முருகேசன். அவனுடைய கை கால்கள் இப்பொழுது வளர்ந்து நீண்டு பெருத்துவிட்டன. பலம் பெற்றுவிட்டன. விஷமம் செய்ய அவன் மனம் ஆசைகொண்டது. ஓடி விளையாடப் பரந்தன அவனுடைய சிறிய அழகிய கை கால்கள். இது வரையில் வீட்டிலிருந்தான் தாய் சொல்வதைக் கேட்டான்-அவன் மனம் ஆசைப்பட்டது இனிய வார்த்தைகளுக்கும் தகப்பனுடைய அற்பத்தின்பண்டத்திற்கும் தான். ஆனுல் இப்பொழுது அப்படியில்லை. தெருவில் விளையாட்டுச் சத்தம் அவனைக் கூவி அழைத்தது. ஓடி விளையாட அவன் கால்கள் துடித்தன. வாசலில் போய் எட்டி எட்டிப் பார்த்தான். விளையாடும் குழந்தைகளைப் பார்த்துத் தன் பல்லைக்காட்டி ஆனந்தத்தைத் தெரியப்படுத்தினுன். அவர்கள் கூப்பிடவேண்டியதுதான் போகத் தயாராய் வந்துநின்ருன். ஆனுல் அவர்கள் அவனைக் கூப்பிடவில்லை. மிகவும் துக்கமாய் இருந்தது முருகேசனுக்கு. உள்ளே செல்ல மனம் வரவில்லை. அங்கே நின்றுகொண்டு பார்த்தான். அவன் கண்கள் ஆச்சர்யத்தாலும் ஸந்தோஷத்தாலும் மலர்ந்தன. "எவ்வளவு குழந்தைகள்? ஆண்! பெண் எல்லோரும் இருந்தார்கள்! விதம்விதமான விளையாட்டு. எல்லோரும் ஓடுகிருர்கள். "சூட்" என்று சத்தம் போடுகிருர்கள். ஒரு பையன் அவ்வளவு பேரையும் துரத்திக்கொண்டு ஓடுகிருன்! அடுத்தது எல்லோரும், ஒளிந்துகொள்ளுகிருர்கள். ஒருவன் தேடுகிருன். அதற்கடுத்தது எலி, பூனை அவர்கள் சொல்லிக்கொண்டார்கள். அவனுக்குத் தெரியாது. ஏன் அவன்மட்டில் போகக்கூடாது? அவனுக்குமட்டும் பலமான கைகால்கள் இல்லையா? அவர்களைப்போல் வேகமாய் ஓட முடியாதா? ஒரு ஓட்டம் ஓடிப்பார்த்தான் அவன். அவனுல் இன்னும் அதிக வேகமாக ஓட முடிந்தது. ஸந்தோஷம் தாங்கமுடியவில்லை. அடுத்த நிமிஷம் குழந்தைகளின் நடுவில்போய் நின்றுகொண்டிருந்தான். எல்லோரையும் பார்த்துச் சிரித்தான். அப்பார்வையில் ஆனந்தமும் அன்பும் நிறைந்திருந்தன. ஆனுல் அவன் நினைத்தபடி அவனுடைய நட்பை ஒருவரும் விரும்பவில்லை. "அடி அவன் கருப்பன் மகண்டீ" என்ருர்கள் இரண்டுசிறுமிகள். "போடா உன்னுடன்நாங்கள் யாரும் விளையாட மாட்டோம் என்ருர்கள். பையன்கள் 'அடேய், அவன் கைதிக் கருப்பன் மகன்; ஜாக்கிரதை என்ருர்கள் சில பெரியபசங்கள். கண்மூடிக் கண்திறப்பதற்குள் எல்லோரும் கலைந்து விட்டார்கள். முருகேசன் தனியாய் விழித்துக்கொண்டு நின்றிருந்தான். அவர்கள் கூறியது, அதனுடைய பொருள் ஒன்றும் அவனுக்கு விளங்கவில்லை. அவன் மனதில் தோன்றியது ஒன்றே ஒன்றுதான், தன்னுடன் விளையாட ஒருவரும் வரமாட்டேனென்கிருர்கள் என்ற ஒரே வருத்தம்தான். தாயிடம் ஓடிவந்தான். 'அம்மா அவர்கள் என்னுடன் விளையாட வரமாட்டேனென்கிருர்கள் அவர்களை வரச்சொல்லு அம்மா, என்று அவளைப் பிடுங்க ஆரம்பித்தான். அம்மாவுடைய சிபார்சை எதிர்பார்த்தான். ஆனுல் அவன் தாய் அவனைக் கோபித்துக்கொண்டாள். "ஏன் தெருவில் போனுய்? போகக்கூடாது" என்று கண்டித்தாள். விளையாட்டில்லை! வேறு ஒன்றுமில்லை! எல்லோருடைய வீட்டிலும் யார்யாரோ இருந்தார்கள். எல்லோருக்கும் எவ்வளவோ விளையாட்டுகள் இருந்தன. அவனுக்கு ஒன்றும் இல்லை. விளையாட்டுக்கூட கிடையாது! எப்பொழுது பார்த்தாலும் 'தாய்! தந்தை! தாய் தந்தை! வீடு, வீடு, வீடு, வீடு இதை வெறுத்தது அவன் மனம். பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தான். எப்பொழுது பார்த்தாலும் வெளியில் ஓடிப்போய்ப் பார்த்தான். விளையாட ஒருவரும் வராவிட்டால் மூலையில் உட்கார்ந்துகொண்டு அழ ஆரம்பித்தான். நாழிக்கு நாழி நாளுக்கு நாள் அவன் பிடிவாதம் அதிகமாயிற்று. தாய் தந்தையை மிகவும் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான்.

ஒரு நாள் அவன் மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். அவன் தாயும் தந்தையும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இனிமேல் இந்த முருகேசனை இப்படியே விட்டால் கழுதையாய்த்தான் போய்விடுவான்" என்ருள் அவன்தாய்.

"என்ன செய்வது? குழந்தைதானே? ஏதாவது நல்லதனம் சொல்லித்தான் சரிப்படுத்தவேண்டும்" என்ருன் தகப்பன்.

"ஒரு எழுத்து வாஸனை இல்லாமல் தான் நீ இப்படிக் குட்டிச்சுவராய்ப்போனுய். அவனுக்காவது இரண்டு எழுத்து சொல்லிக்கொடுக்க

வேணும். அதை வைத்துக்கொண்டு பிழைத்துக்கொள்வான்" என்றாள் தாய்.

தகப்பன்:—ஆனால் அவனைப் பள்ளிக்கூடத்திலா சேர்க்கவேண்டுமென்கிறாய்" என்றான்.

"ஆமாம், சேர்க்கத்தான் வேண்டும் நாம் எப்படி இருந்தாலும் அவனாவது நல்ல பேர் எடுத்து நன்றாய் இருக்கவேண்டாமா?" என்றாள் அவள். அவன் தந்தை ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ யோசித்துக்கொண்டிருந்தாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டேதான் இருந்தான் முருகேசன். அவர்கள் பேசிக்கொள்வது அவனுக்குப் புதிதாக இருந்தது. வார்த்தைகளும் புதிதாக இருந்தன. இவ்வளவு நாட்கள் அவ்வார்த்தை அவன் கேட்டதில்லை. பள்ளிக்கூடம்! அதென்னது! புதிதாய் இருந்தது அவனுக்கு. கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். அவன் பிடிவாதமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிட்டது. தகப்பனிடம் ஓடி வந்து கேட்டான் "அது என்னப்பா பள்ளிக்கூடம்!" என்றான். தகப்பன் அவனுக்குக் கூறினான். அவனுக்கு விளங்கவில்லை. மலர்ந்த கண்களுடன் தந்தையைப் பார்த்தான். "பார்த்தாயா புதிய சட்டை. இதைப் போட்டுக்கொண்டுதான் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்றான் தந்தை. "பள்ளிக்கூடம்! அங்கு யார் இருப்பார்கள்? எப்படி இருக்கும்? எப்படிப் படிப்பார்கள்? என்று எவ்வளவோ கேள்விகள் கேட்டுக்கொண்டே தூங்கினான். மாதமும் ஓடியது.

முருகேசன் புதுச்சட்டையைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போகவாரம்பித்து இரண்டு வாரங்களாய்விட்டன. ஒன்பது மணிக்கெல்லாம் கையில் ஒரு பலகையுடன் வேகமாய்ப் பள்ளிக்கூடத்திற்கு ஓடினான். அவனுக்குப் பள்ளிக்கூடம் ரொம்ப பிடித்துவிட்டது. அவனுடன் விளையாடுவதற்கு எவ்வளவு பேர்? எவ்வளவு விளையாட்டு? படிப்பது, பாடுவது, பொம்மை வரைவது, அழகிய வர்ணங்கள் கொடுப்பது, வர்ணக் காகிதங்களை கத்தரித்து ஒட்டுவது, கவாத்துப் பழகுவது, பந்தாடுவது எவ்வளவு தினுசுகள்? ஸந்தோஷம் தாங்கவில்லை. வீட்டிற்கு வந்தவுடன் தாய் தகப்பனிடம் எல்லாவற்றையும் அப்படியே ஒப்பித்தான். அதைக்கேட்டு ஸந்தோஷப்பட்டான் கறுப்பன். 'எப்படியாவது ஒரு நல்ல பெயர் எடுத்துக்கொண்டு நாலுகாசு ஸம்பாதித்துத் தன்பாட்டைப் பார்த்துக்கொண்டால் போதும்" என்று சொல்லிக்கொண்டாள் அவன் தாய்.

முருகேசன் பள்ளிக்கூடத்தில் மிகவும் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்கினான். ஒரே ஒரு வருஷம்தான். வகுப்பில் எப்பொழுதும் முதல் ஸ்தானத்தை வகித்தவன் அவன்தான். வரவர எல்லோருக்கும் அவன்பேரில் பொறாமை உண்டாக ஆரம்பமாகிவிட்டது. கண்டபடி அவன் செவியில் படும்படி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். "அவன் கர்வத்தையும் அந்தஸ்தையும் பார்த்தாயாடா? ஒருவரோடும் பேசக்கூடப் பிடிக்கவில்லை அவனுக்கு. கடைசியில் கேடி கறுப்பன் மகன். இவ்வளவு கர்வம்!" என்றார்கள். "ஏய் எவ்வளவு படித்தால் என்னடா? ஜாதியின் புத்திதானே வரும்? அவன் நல்ல பெயர் எங்கே எடுக்கப்போகிறான்?" என்றார்கள் இன்னும் சிலர். இவ்வார்த்தைகள் முருகேசனுடைய உள்ளத்தைக் கோடாலி போட்டுப் பிளந்தன.

முருகேசன் முன்போல் இன்னும் குழந்தையா? பிரதி வருஷமும் வகுப்பில் தேறிக்கொண்டுவந்தான். இப்பொழுது பெரிய வகுப்பில் படித்துவருகிறான். அவன் பள்ளிக்கூடத்தில் கொடுத்த பெயர் முருகேசன். ஆனால் அவன் இன்று அவனுடைய செவியால் கேட்பது "கேடி கறுப்பன் மகன்". அவனால் கேட்டுக்கொள்ள முடியவில்லை. ஆம்! அவ்வார்த்தைகளைக் கேட்டதுபோல் ஓர் நினைவு அவனுடைய உள்ளத்தில் எழுந்து படர்ந்தது. அதே வார்த்தைதான் அவன் குழந்தையாய் இருக்கும்பொழுது, தாயுடன் குழாயடிக்குப் போகும்பொழுது அவன் கேட்டிருக்கிறான். அதே வார்த்தைதான்! இன்று அவன் பள்ளிக்கூடத்தில் கேட்டான். அப்பொழுது அதன் பொ


GRIPE-VIT-D



REGD.

கிரைப் - விட் - டி

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி, மாந்தம், வயிற்றில் புளிப்பு, உப்பிசம், வாந்தி, வயிற்றுப்போக்கு, விக்கல் முதலிய கோளாறுகளை உடனே நிவர்த்தியாக்கும்.

*Apply to:-*

Proprietors, **S. R. Remedies,**

**Trichinopoly.**

ருள் அவனுக்குத்தெரியாது. இன்று முருகேசன் படிக்கிறான். என்ன கடூரமான பெயர்? அதை அவனல் எவ்விதம் ஸகிக்கமுடியும்? பையன்களிடம் நல்லதனமாய்ச் சொல்லிப்பார்த்தான். கோபித்துக்கொண்டிருந்து பார்த்தான். ஒன்றும் பயனில்லை.

ஒரு நாள் பையன்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று எண்ணி வாத்தியாரிடம் போய்ச் சொன்னான். ஆனல் பாவம்! வாத்தியாரும் அப்படிச் சொல்வாரென்று அவன் எதிர்பார்க்கவில்லை. "ஏய் முருகேசா, அவர்கள் கூறுவது என்ன பிசகு? கேடி கறுப்பனின் மகன் தானே நீ? அதை எவ்விதம் இல்லை என்று சொல்லமுடியும்" என்றார். முருகேசனுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. துக்கம் தாங்கமுடியாது தாயிடம் முறையிட்டான். அவனுடைய உள்ளத்தில் தாய் இன்னுமோர் அம்பை எய்துவிட்டாள். எப்படி ஸகிப்பான் அவன்.

வரவர அவனுக்கு மனநிம்மதி குறையவாரம்பித்து விட்டது. பள்ளிக்கூடம் போகப் பிடிக்கவில்லை. பள்ளிக்கூடத்தில் அவன் வகுப்பில் ஒரு பெண் படித்துக்கொண்டிருந்தாள். அவள் ஒருவள்தான் முருகேசனிடம் அன்பு காண்பித்தாள். அவள் பெயர் தங்கம். யாரிடம் சொல்லிக்கொள்வது? அடிக்கடி தன் குறைகளை அவளிடம் சொல்லி ஆற்றிக்கொண்டான். அவனுக்கு இது ஒரே ஒரு ஆறுதல்தான். "நன்ருய்ப் படித்து நீயும் ஒரு உத்தியோகம் செய்தால் எல்லாம் மறைந்து போய்விடும் போ" என்று ஆறுதல் கூறினுள் அவள். ஆனல் அவள் என்ன கண்டாள் பாவம்? முருகேசனுடைய படிப்பிற்கும் முடிவு காலம் வந்து விட்டதை யார் அறிந்தார்? அவனுக்கே தெரியவில்லை.

மாதங்களும் ஓடிக்கொண்டே வந்தன. எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டுதான் பள்ளிக்கூடம் போய்வந்தான் முருகேசன். ஒரு நாள் அவனுடைய வகுப்பில் ஓர் அமர்க்களம் நடந்தது. அதுதான் பள்ளிக்கூடத்திற்கு அவன் போன கடைசி தினம்.

வழக்கம்போல் மாணவர்கள் வகுப்பிற்கு வந்து உட்கார்ந்தார்கள். மணி அடித்து உபாத்தியாயரும் வகுப்பில் வந்து அமர்ந்தார். பாடம் தொடங்கும் ஸமயம். மாணவர்களில் ஒருவன் எழுந்தான்.

"ஸார்" என்ருன். 'என்ன விசேஷம்' என்ருர் அவர்.

"என்னுடைய புத்தகங்களிலொன்றைக் காணவில்லை. யாரோ எடுத்துக்கொண்டு விட்டார்கள்" என்ருன்.

"எவ்வளவு நாட்களாய்க்காணவில்லை? நீ வீட்டிலேயே தான் எங்கேயாவது போட்டு விட்டாயோ என்னவோ" என்ருர் உபாத்தியாயர் மற்ற மாணவர்கள் எல்லோரும் 'குசு குசு' வென்று பேசிக்கொண்டார்கள்.

"இல்லை ஸார், நேற்று நான் வீட்டிலிருந்து கொண்டுவந்தேன். மறுபடியும் வீட்டிற்குப் போகும்பொழுது பார்க்கவில்லை. வீட்டிற்குப் போய்ப்பார்த்தேன் காணவில்லை. இங்குதான் இருக்கவேண்டும்" என்ருன் பையன்.

உடனே உபாத்தியாயர் எல்லோருடைய மேஜையையும் சோதனைபோட்டார். புத்தகம் முருகேசனுடைய மேஜையிலிருந்து வெளி வந்தது. மாணவர்கள் எல்லோரும் முருகேசனைப் பார்த்தார்கள். அவனல் தலை தூக்க முடியவில்லை. அவனுக்கு நன்ருய்த் தெரியும். இது பொருமையால் நடந்த விஷயம். உபாத்தியாயரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் அவர் கேட்கவில்லை. "என்னடா கையும் களவுமாய்ப் பிடித்தும் கதை படிக்கிருய்? அப்பனுக்கு இருக்கும் புத்திதானே பிள்ளைக்கு வரும்? விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? எல்லாம் ஜாதிபுத்தி தான் வரும்" என்று போடாய்ப் போட்டார். அவ்வளவுதான். முருகேசனுடைய மனம் முறிந்துவிட்டது. அவனுடைய படிப்பும் அன்ருேடு நின்றது. கூலிவேலை அகப்பட்டாலும் போதும். அதைக்கொண்டு பிழைத்துக்கொள்வது என்ற தீர்மானத்திற்கு வந்தான். வேலையும் தேடவாரம்பித்தான்.

நாட்களும் ஓடின. படிப்பை மூட்டைகட்டி வைத்துவிட்டு அலைந்துகொண்டிருந்தான் முருகேசன். ஆனல் நடந்ததுவேறு. "பட்ட காலிலேயேபடும், கெட்ட குடியே கெடும்', என்று வசனம் கூறுவார்கள். அது முருகேசனின் விஷயத்தில் பலித்தது. திடீரென்று ஊரைக்கொடிய நோய் முற்றுகை போட்டது. முருகேசனின் பிச்சைக்குடியில் தன் முழுப்பலத்துடன் ஸாம்ராஜ்யப்போரை நடத்தவாரம்பித்தது. முதல் முதலாய் அவ்வாட்கடிக்கு உட்பட்டவர்கள் அவனுடைய தாய் தந்தையர் தான். கடும் நோயால் பீடிக்கப்பட்டு வருந்தவாரம்பித்தார்கள். முருகேசனின் தலையில் பொறுப்பின் ஓர் பிரமாண்டமான சுமை வந்து விழுந்தது. கடமை அவனை விரட்டி அடித்தது. வறுமை அவனைச் சூழ்ந்து நின்றது. அன்பு அவனை உருக்கியது. நோயால் வருந்தும் இரண்டு அனுதை ஆத்மாக்களைக்கண்டு அவனுள்ளம் துடித்தது. அவ்வனுதை ஆத்மாக்களை ரக்ஷிக்கவேண்டிய கடமை அவன் முன் வந்து நின்றது. "அப்பா முருகேசா, என்ன செய்வாய் குழந்தை நீ, எங்களைப்பற்றிக் கவலைப்படாதே, நடக்கிறபடி நடக்கட்டும்"என்று அவனைத் தேற்றினுர்கள் பெற்ருேர்கள்—ஆனுலும் அவன் எப்படிச் சும்மாவிருக்கமுடியும்?

பொருள் இல்லை, பண்டம் இல்லை. மனித ஆதரவு இல்லை. தவித்தான் முருகேசன். ஒவ்வொரு வீடாய்ப் போய் யாசகம் கேட்டான். எவ்வளவு நாள் கேட்பது? வாரங்களும் ஓடின.

மாதமும் மறைந்தது. நோயின் கொடுமை தணியவில்லை, இனி யாசகம் கொடுக்க ஓர் கை முன் வரவில்லை. அலைந்தான் அவன். ஒன்றும் பயனில்லை. தாய் தகப்பனை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டான். கடைகளுக்குப் போனான் வீடுகளுக்குப் போனான். 'வேலை செய்கிறேன், கூலி வேண்டும்' என்று கேட்டான். நீயார். யாரென்று தெரியாமல் வேலைக்குவைத்துக்கொள்ள முடியுமா? என்றார்கள் எல்லோரும். அவன் என்ன சொல்வான். பொய் எப்படிச்சொல்வான். கறுப்பன் மகன் என்றான். அவனை ஏற்றுக்கொள்ளவில்லை ஊர். அவனைக்கண்டு இரங்கவில்லை ஓர் ஆத்மாகூட. 'ஆமாம்' இப்படிக்குறை சொல்லிக்கொண்டு வருபவர் ஊரில் எவ்வளவோபேர் போ, என்றார்கள் எல்லோரும்.

இனி இவ்விடத்தில் இருக்க விரும்பவில்லை முருகேசன். அவ்வூரையே வெறுத்தான். அவனையும் ஓர் ஸம ஆத்மா என்பதை உணரும் ஓர் உயிருள்ள இடத்தைக்காண அவன் உள்ளம் துடித்தது. நோயால் வருந்தும்தாய் தந்தையை நினைத்து நினைத்து அழுதான் அவன். இச்சமயத்திலும் அவனுக்கு ஆதரவளித்தவள் ஏழைத் தங்கம்தான்.

மூன்று மாதங்களும் ஓடின. ஒருநாள் மாலை முருகேசன் ஓர் மரத்தடியில் தங்கத்துடன் பேசிக்கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்குக்கவலை இல்லை. அவனுடைய தாய்தந்தையரை அவன் சாந்த நிலயத்திற்கு அனுப்பி விட்டான். ஆனால் அவன் உள்ளச்சாந்தியைத் தேடி அலைந்து கொண்டிருந்தான்,

'தங்கம் நான் எங்கேயாவது போய்விடப் போகிறேன்' என்றான் தங்கத்தைப் பார்த்து.

திடுக்கிட்டாள் நின்று கொண்டிருந்த தங்கம்.

தங்கம்: "எங்கேயாவது போகப் போகிறாயா? ஏன்?"

முருகேசன்: எனக்கு ஒருவர் முகத்திலும் விழிக்கப்பிடிக்கவில்லை. மனிதர்களின் நடுவில் போய்ப் பிழைக்கவேண்டும்.

தங்கம்: "என்ன சொல்லுகிறாய் நீ இங்கு இருப்பவர்கள் மனிதர்கள் இல்லையா?"

முருகேசன்: ஆம், ஆனால் உள்ளமில்லாத மனித உருவங்கள், தங்கம்" என்றான். அவன் குரலில் ஒரு பரிதாபம் ஒலித்தது.

தங்கம்: "உன்வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களினால் நீ அப்படி நினைக்கிறாய் முருகேசா."

முரு: "ஆம். நான் என் வாழ்வையே மாற்றிக் கொள்ளப் போகிறேன்."

தங்: "எப்படி?"

முரு: "கண்காணமல் எங்கேயாவது ஓடிப் போய்........"

தங்: "ஓடிப்போயா? நான்?" என்றாள். அவள் கண்களிலிருந்து பலபலவென்று கண்ணீர் நிறைந்து உதிர்ந்தது. என்னைத் தனியாய்விட்டு விட்டுப் போகப்போகிறாயா முருகேசா?"

முரு: நான் இப்பொழுது உன்னை ஏற்றுக் கொள்ளமாட்டேன்."

தங்; "ஏன்? நான் என்ன குற்றம் செய்தேன் முருகேசா? நீ எவ்விடம் செல்லுகிறாயோ நானும் அவ்விடம் வந்துவிடுகிறேன். உன்னை விட்டு நான் இருக்கமாட்டேன் என்று கைகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டாள்.

முருகேசன் மனம் இளகவில்லை. "நானும் ஓர் மனிதனான பிறகுதான்" என்றான். அவ்வளவுதான் அவன் கூறியது. தங்கம் அழுது கொண்டிருந்தாள். அவன் அவள் கண்களிலிருந்து மறைந்தான்.

கால் நடையாகவே சென்றான். ஊர் ஊராய்ப் போனான். ஓர் துறைமுகத்தை அடைந்தான். அவன் பார்த்தது புதிய புதிய முகங்கள். நடந்துகொண்டே போனான். அவன் உள்ளத்தில் பெய்துகொண்டிருந்த அடை மழையினிடையிடையே "பளிச்சென்று" ஓர் மின்னல் மின்னி மறைந்துகொண்டிருந்தது. அவன் அகக்கண்முன் கண்ணும் கண்ணீருமாய் வந்து நின்றது தங்கத்தின் வாடிய முகம். கணம் நின்றது அவனுடைய கால்கள். மறுபடியும் வேகமாய் நடந்தான். துறைமுகத்தில் கப்பல் நின்று கொண்டிருந்தது. எவ்வளவோ வண்டிகள் வந்து போய்க்கொண்டிருந்தன. கணக்கில்லாத ஜனங்கள் வந்துபோய்க்கொண்டிருந்தனர், கூலி ஆட்கள் கப்பலுக்குக் கரி வாரிப்போட்டுக்கொண்டிருந்தனர், முருகேசனை யார் என்று கேட்பவர் அங்கு யாருமில்லை. "கைதியின் மகனா?" என்று கேட்பதற்கு ஒரு தெரிந்த முகம் இல்லை. கூலியாட்களிடம் போனான்; நானும் கூலி வேலை செய்கிறேன் என்றான். வா தம்பி என்று அன்புடன் அழைத்தார்கள் அவர்கள். அவனுக்கும் வேலை கொடுத்தார்கள். "நீ யார் என்று அவர்கள் அவனைக்கேட்கவில்லை "தம்மைப்போல் பிழைக்க வந்தவன்" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். வேலைசெய்தான் முருகேசன். அவர்களுடன் சாப்பிட்டான். கவலையின்றிப் படுத்துக்கொண்டு உறங்கினான். அவனுக்கு இப்பொழுது ஒரே ஒரு கவலைதான். கப்பலேறி அக்கரை செல்ல வேண்டும். எப்படிச் செல்வது? அது தான் அவனுக்குத் தெரியவில்லை.

அவர்களுடன் பத்து—நாட்கள் செய்தான். ஒருமாதம் செய்தான். வேலையை மிகவும் அக்கரையாய்ச்செய்தான். அதிகாரிக்கு அவனிடம் திருப்தி ஏற்பட்டது. கப்பலின் அடித்தளத்தில் ஓர் வேலை கொடுத்தான். முருகேசன் அவர்களுடன் போய் வேலைசெய்தான். வேலைசெய்துகொண்டே எல்லோரும் பாடினார்கள். அவன் கேட்டுக்கொண்டிருந்தான். 'தம்பி'

நீயும் பாடேன்'' என்றார்கள் அவர்கள். 'கட கட' 'கட கட' என்று தண்ணீரைக் கிழித்துக் கொண்டு கப்பல் சென்று கொண்டிருந்தது. தினந்தோறும் அது சுமந்து செல்லும் சுமையைப்பற்றி ஸமுத்திர ராஜனிடம் சொல்லிக் கொண்டே மிதந்து போய்க்கொண்டிருந்தது. அடித்தளத்தில் முருகேசன் பாடினான். ஆயுளில் அவன் பாடியதெப்பொழுது?. முதலில் அவனுக்கு வரவில்லை. அவர்கள் பாடுவதைக் கேட்டுப்பாடினான். ''பாடு தம்பி, தெரிந்ததைப் பாடு, உலகத்தில் சந்தோஷமாய் இருக்க வேண்டும்'' என்றார்கள். இவ்விதம் அருமையான வார்த்தைகளைக்கேட்டு எவ்வளவு காலமாய்விட்டது. மழையைக் கண்ட பஞ்சகாலப்பயிர்போல் குளிர்ந்தது முருகேசனுடைய உள்ளம். குளிர்ந்த உள்ளத்திலிருந்து கனிந்து வந்தன வார்த்தைகள். அவன் பாடினான். எல்லோரும் பாடினார்கள் - முருகேசனின் பாட்டு ஓங்கி ஒலித்தது. எல்லோரும் பாடுவதை நிறுத்தினார்கள். வேலைசெய்து கொண்டே அவன் பாட்டைக்கேட்டார்கள். அவன் உள்ளத்தைக் கிழித்துக்கொண்டு உணர்ச்சியோடு பாடினான். வேலை செய்து கொண்டிருந்த கைகள் நின்றன. அவன் இன்னும் பாடினான். அவன் கண்களில் நீர் நிரம்பி இருந்தது. ஒவ்வொரு வராய் அவன் அருகில் வந்து பாட்டைக் கேட்டார்கள்.

'அப்பா, கேடியின் மகன், இருக்க ஊரில்லை தங்க இடமில்லை, உருகுவதற்கொரு உள்ளம் இல்லை, தவிக்கிறான். அவனுக்கு உங்களூரில் எங்கேயாகிலுமோர் இடமுண்டா?'' என்று பாடினான் அவன். அவன் கண்களிருந்து நீர் உதிர்ந்தது. அதைக்கேட்டு அவர்களுடைய கண்களில் நீர் நிரம்பியது. உள்ளம் உருகியது. உள்ளத்தைத் தேற்றும் உயிர்கள் அவர்கள் ஊரில் உண்டு என்றார்கள் அவனை ஒருவரும் ஒன்றும் கேட்கவில்லை. 'கேடியின் மகன்' என்று ஏசவில்லை, அன்புடன் ஆதரவளித்தனர்' ஆசையுடன் அன்னம் கொடுத்துச் 'சாப்பிடு தம்பீ' என்று உபசரித்தார்கள்.

மிதந்துகொண்டே அக்கரைசீமைப்போய்ச் சேர்ந்தது கப்பல். இறங்கவேண்டியவர்கள் இறங்கினார்கள். முருகேசனும் இரங்க இஷ்டப் பட்டான். அவன் விருப்பத்திற்கு விரோதமாய் நிற்பவர் அங்கு ஒருவரும் இல்லை. ஒரே ஒரு வாரப் பழக்கம்தான். அங்கு இருந்தவர்களை அன்பு தன் கொடிகளால் இறுக்கிப் பிணைத்து விட்டது. ''தம்பீ நீ இங்கேயே வேலை செய்'' என்றார்கள் எல்லோரும். ''இல்லை தம்பீ நான் பிறகு வருறேன்'' என்று சொன்னான் அவன்.

கப்பலைவிட்டு இறங்கிப்போனான். தெருவோடு நடந்துபோனான். அவனை ஒருவரும் ஒன்றும் சொல்லவில்லை. தைர்யமாய் நடந்து சென்றான். அவனுக்கிப்பொழுது இருந்தது ஒரே ஒரு ஆசைதான். அவன் பணத்திற்கு ஆசைப்படவில்லை. உத்தியோகத்திற்கு ஆசைப்படவில்லை. அவனையும் ஸம ஆத்மாவென்று கருதும் ஓர் உள்ளத்தைத்தான் தேடி


# கூந்தல் வளர்ப்பு அதன் பாதுகாப்பு

இவை இரண்டும் நமக்குப் புதிய கலையல்ல
இவை நமது புராதனக் கலைகளே




30 MAY 1944

## ஜப்கோ ஹேர் குரோயர்

புராதனக் கலையின் ஆராய்ச்சியும்
- நவீன ரசாயனமும் சேர்ந்தது -
மங்கையர் மகிழ்ந்து விரும்புவது
கூந்தலை அபரிமிதமாக வளர்ப்பது

யது அவன் உள்ளம். பயமில்லாமல் போனான். தெருத் தெருவாய்ப் போனான். எவ்வளவோ பேரைக் கண்டான். "ஐயா ஓர் வேலை வேண்டும்" என்று கேட்டான். நீ யார் என்று அவனை ஒருவரும் கேட்கவில்லை. கேடியின் மகன் என்று சொல்லவில்லை. "பையா, உனக்கு எந்த வேலை தெரியும்" என்று கேட்டார்கள். அவர்களுடைய வார்த்தையில் அன்பு ததும்பியது. முருகேசன் சொன்னான் "எந்த வேலை வேண்டுமானாலும் செய்வேன், கற்றுக்கொள்வேன். கொஞ்ச நாள் பழக்கம் வேண்டும். படிக்கவும் கொஞ்சம் தெரியும்" என்றான். அவனுடைய வார்த்தைகளில் ஓர் தீர்மானமும் ஓர் உறுதியும் தொனித்தன. அவனைப்பார்த்து ஸந்தோஷப்பட்டார்கள் எல்லோரும். சிபார்சு கடிதங்கள் கொடுத்தார்கள். "பையா தேக்கு மர வியாபாரி ஒருவர் இருக்கிறார் அவரிடம் போ, உனக்கு வேண்டிய வேலை தருவார்" என்று, இடம் காட்டினார்கள். முருகேசன் உள்ளம் குளிர்ந்தான். அதில் நிறைந்திருந்த தாபம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது.

தேக்குமர ஏற்றுமதியில் இறங்கினான் அவன். எந்தவேலையானாலும் தன்கைகளால் செய்தான். கருத்துடன் கவனித்தான். வியாபாரம் தழைத்துச் செழித்தது. முருகேசனுடைய உள்ளம் தழைத்துப்பூத்தது. வேண்டியபணம் வந்து குவிந்தது. செல்வத்தை மதிக்கவில்லை அவன். 'தானும் மனிதனாகவேண்டும். கேடியின் மகன் என்ற அபவாதம் ஒழியவேண்டும். தன்னைப்போல தன் ஸந்ததியார் கஷ்டப்படக் கூடாது என்பதுதான் அவன் ஆசை. 'முருகேசா, நீ வந்து கால்வைத்த முகூர்த்தம் வியாபாரத்தில் கொள்ளை லாபம். இந்தா உனக்கு வெகுமதி என்று பணத்தை வாரிக்கொடுத்தான் வியாபாரி. மகிழ்ந்தான் முருகேசன்.

அவன் உள்ளம்தழைத்துப்பூத்துக்கொண்டிருந்தது. ஆனால் அப்பூவை முடிந்துகொண்டு ஆனந்தமடைவார் யார்? அவன் இப்பொழுது தங்கத்தை நினைத்துக்கொண்டான். கடிதம் எழுதினான். பணம் அனுப்பினான். தங்கம் காத்துக்கொண்டிருந்தாள். உடனே வந்துசேர்ந்தாள். முருகேசன் மணம் நடைபெற்றது. எல்லோரும் வந்தார்கள்' அவனை வாழ்த்தினார்கள். தங்கத்துடன் அரிய இல்லறம் நடத்தினான்.

அவன் பெயர் இப்பொழுது 'முருகேசன்', தேக்கு வியாபாரி முருகேசன். பெரிய பங்களா கட்டினான். ஏராளமானநிலம் வாங்கினான். முருகேசன் மிகவும் உயர்ந்த குணமுள்ளவன், நல்ல உழைப்பாளி என்று ஊர் அவனைப் புகழ்ந்தது. வீடு நிறைய ஓடி விளையாடக் குழந்தைகள் பிறந்தன. முருகேசன் பெரிய ஸம்ஸாரியாய் விட்டான். "தங்கம் இதை எல்லாம் பார்க்க என் தாயார் தகப்பனார் இல்லையே" என்று வருத்தப்பட்டான் அவன்.

'உங்கஅப்பா அம்மா, உயிருடனிருந்தால் நீ இப்படிப் பெயர்எடுக்க முடியுமா?' என்றாள் அவள்.

வருஷங்களும் ஓடி மறைந்தன. முருகேசன் பேரன் பேத்தி எடுத்துவிட்டான். தாதா என்று கூப்பிட்டுக்கொண்டு ஐந்தாறு குழந்தைகள் வந்து அவன் முன்நின்றன. அவனுக்கு ஒரு கவலை இல்லை. 'எங்கள் அப்பா முருகேசன் 'எங்கள் தாதா 'கறுப்பன்' என்று பெறுமையுடன் சொல்லிக்கொண்டார்கள் அவனுடைய பேரப்பிள்ளைகள். அனேக வருஷங்கள் ஓடிவிட்டன.

முருகேசன் மிகவும் கிழவனாய் விட்டான். கண்மூடும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்- 'தங்கம் இனி என்னைக் கேடியின்மகன் என்று ஒருவரும் சொல்லமாட்டார்களே' என்று கேட்டான். இன்றும் அந்நினைவு அவனுக்குப்போகவில்லை. அப்பெயர் அவன் உள்ளத்தில் வேர்ஊன்றி நின்றது.

"இனிமேல் யார் சொல்லப்போகிறார்கள்? ஊர் உலகம் எல்லாவற்றையும்தான் விட்டுவிட்டு வந்தாய்விட்டதே" என்றாள் அவள்.

பேசாமல் இருந்தான் முருகேசன். அவன் சிறுவயதில் நடந்த அவ் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவன் அகக் கண்முன்வந்து வந்து மறைந்தது. ஆனால் அவன் அவைகளைப் புறக்கணித்துத் தள்ளினான். அப்படியே சில மாதங்களில் அவன் கண்களும் சாச்வதமாய் மூடிக்கொண்டன.

ஊரில் அவனுக்கு நடக்கவேண்டியவைகள் குறைவின்றி நடந்தன. ஊரார் எவ்வளவோ பேர் வந்துபோயினர். முருகேசனுடைய புகழும் பெயரும் ஊர் ஊராய்க் கப்பல்ஏறிச் சென்றது. ஆனால் என்ன பயன்? "நம்ம ஊர் கேடி கறுப்பன் மகன், பெரிய உத்தியோகம் செய்து பணம் ஸம்பாதித்துவிட்டு நான்கு நாட்களுக்கு முன் காலஞ்சென்றானாம்" என்று கொட்டை எழுத்தில் எழுதியது கறுப்பன் ஊர்ப் பத்திரிகை. "முருகேசன், தேக்குமர விபாபாரம் செய்வதில் புலி, மிகவும் உயர்ந்த குணமுள்ளவர், அவர் கேவலம் கேடியின் வம்சத்திலிருந்து வந்தாராம்" என்று எழுதியது முருகேசன் ஊர் பத்திரிகை. அதைப்படித்து ஆச்சர்யபட்டார்கள் யாவரும். பொல்லா உலகம்!

முருகேசன் இதற்காகத் தன் உயிரையும் அர்ப்பணம் செய்தான். சந்ததியில் பெயரை மாற்ற அரும்பாடு பட்டான். கப்பல் ஏற்றிக்கொண்டு வந்து அவன் சந்ததியின் தலையில் அப்பெயரைச் சுமத்தியது. அதன் வேலையைச் செய்துமுடித்தது பொல்லா உலகம்! அதன் வாயைமூட யாரால் முடியும்?

# உடைந்த வீணை



<u>தொடர் கதை</u>　　　　கே. சுந்தரம்மாள்

— 9 —

அவ்விட்டம் அவளை ஆற்றுவார் யார்? தேற்றுவார் யார்? சற்று நேரத்திற்கெல்லாம் உணர்வு ஏற்பட்டது. எழுந்திருந்து நாலா பக்கமும் சுற்றிப்பார்த்தாள். நரேன் தென்படவில்லை. மெதுவாகத் தன் அறைக்குள் வந்து சந்தடி செய்யாமல், கட்டிலின்மீது உட்கார்ந்தாள். ஸ்பிரிங் கட்டிலானபடியினால், கிறிச் என்று சத்தமிட்டது. அந்தச் சமயம் புரண்டு படுத்த தாயார் விழித்துக்கொண்டு, "மாலதி" என்று கூப்பிட்டாள். ஏன் அம்மா? என்று கேட்கும்பொழுது அவளையும் மீறி ஒரு தேம்பல் வெளிவந்தது. திடுக்கிட்ட தாயார் எழுந்து ஸ்விச்சைப் போட்டாள். அழுது கண் இடுங்கி, சிவந்திருக்கும், அலங்கோல நிலைமையைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்?" என்றாள்.

கெட்ட சொப்பனம் கண்டேன். தூக்கத்திலே அழுதிருக்கிறேன். திடுக்கிட்டு விழித்தேன். என்னமோ பயமாக இருக்கிறது. படபடவென வருகிறது" என்றாள்.

பக்கத்தில் உட்கார்ந்து மடியில் படுக்க வைத்துக்கொண்டாள் புதல்வியை. ஒருநாளுமில்லாமல், தலையில் பூவைக் கண்டதும், 'இது என்னம்மா?' என்று அதை எடுக்கப்போனாள்.

கையை வைத்து மறித்து "எடுக்காதேயம்மா. அது மிகவும் அழகாக இருந்தது. எனக்கு ஆசையாக இருந்தது, வைத்துக்கொண்டேன்—இதில் தப்பென்ன? அம்மா. இன்று ஒரு நாள் மட்டும் இருக்கட்டும்" என்றாள்.

"அதனால்தான் கெட்ட கனவு கண்டாயோ என நினைக்கிறேன்."

"அதொன்றுமில்லையம்மா. இன்று இந்தப் புஷ்பம் என் தலையில் இருக்கவேண்டும். அம்மா தயவுபண்ணு" என்றாள்.

தெய்வகன்னிபோல் விளங்கும் தன் குழந்தை, யௌவன சுகம் யாவற்றையும் இழந்து, ஒரு புஷ்பத்திற்குத் தன்னிடம் மன்றாடும்பொழுது, ஒரு தாயின் உள்ளம் எவ்விதம் அமைதியை அடைந்திருக்கும்? அவள் கண்களிலும் நீர் நிறைந்தது. பிறகு "மாலதி உனக்குப் பயமாக இருந்தால் உன் பக்கத்திலேயே படுத்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு, செல்வியை அணைத்துப் படுத்துக்கொண்டாள். கெட்ட ஸ்வப்பனத்தினால் பயந்துவிட்டாள் குழந்தை என நினைத்தாள் தாய். "தாய்க்கொளித்த சூலா?" என்றது மகளின் மனம். தூங்குவது போல் அபிநயித்தாள்.

ராகவய்யாவும், மாதவனும் திரும்பிவரும்பொழுது, விடியற்காலம் ஐந்துமணி ஆகிவிட்டது. அலுப்பினால், ஒன்றையும் கவனிக்காமல் படுக்கச் சென்றார்கள். விடிந்தவுடன், யாவரும் அவரவர் வேலையைக் கவனிக்கச் சென்றார்கள். "துக்கத்தின் முடிவு தூக்கம்" ஆனபடியினாலே மாலதி விடியற்காலையில் கண்ணயர்ந்துவிட்டாள். எட்டுமணியாகியும் எழுந்திருக்கவில்லை. "இரவு நல்ல தூக்கமில்லை. அவளை எழுப்பவேண்டாம்" எனச் சொல்லிவிட்டாள் தாயார்.

மாதவன் நரேன் அறைக்கு வந்தான், காணவில்லை. ஒவ்வொரிடமாகச் சுற்றினான். காணவில்லை. கடைசியில் மாலதியின் அறைக்கு வந்தான். அப்பொழுதுதான் அவள் விழித்துக்கொண்டாள். இரவு சம்பவத்தால், அவள் உடம்பெல்லாம் சோர்வுற்றிருந்தது. தலையை

யும் வலித்தது. எழுந்திருக்க மனமில்லாமல் படுத்துக்கொண்டிருந்தாள்.

"மாலதி! என்ன? இன்று அதிசயமாக இருக்கிறதே. உடம்பிற்கு என்ன" என்று அவள் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான்.

"தலைவலி, வேறொன்றுமில்லை" என்று சிரிக்க முயன்றாள்.

"முகமெல்லாம் உப்பியிருக்கிறது. கண்கள் சிவந்திருக்கின்றன. என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை அண்ணா" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். தலையில் புஷ்பத்தைப் பார்த்துவிட்டான்.

"மாலதி! புஷ்பம் எப்பொழுது..." என்று நிறுத்தினான். துப்புக்கண்டவன்போல் மகிழ்ச்சியுண்டாயிற்று.

"இது அன்பின் பரிசு அண்ணா!" என்றாள் அமைதியாக.

"ரைட்! அவன் எங்கே?" என்றான்.

"என்ன அண்ணா! இப்படிக் கேலி செய்வார்களா? நான் தலைப்பிலா முடிந்துகொண்டிருக்கிறேன்" என்றாள்.

"கேலிக்கு இது சமயமல்ல மாலதி! காலையிலிருந்து அவனைக் காணவில்லை. படுக்கையில் படுத்ததாகவே தெரியவில்லை. நானும் நெடுகத் தேடியாய்விட்டது. கவலையாக இருக்கிறது" என்றான்.

"என்ன? காணவுமில்லையா?" என்று பதறினவள்போல் எழுந்தாள். "ஒருசமயம் அவசரமாக டியூஷனுக்குச் சென்றிருக்கிறாரோ என்னவோ? காப்பி சாப்பிட்டாரா?" என்றாள். ஆனால் அவளின் துக்கம் கரை கடந்தது.

"மாலதி. வருந்தாதே. காப்பியும் சாப்பிடவில்லை, இன்னும் விசாரிக்கிறேன்" என்று எழுந்து சென்று விட்டான்.

"அப்பா, ஒரு கண்டம் தப்பினேன்" என்று படுக்கையில் சாய்ந்தாள்.

மாதவன் சாயங்காலம் வரை எங்கெல்லாமோ தேடினான். 'பிறகு தகப்பனார் அவனை ஏதோ சொல்லிவிட்டார். அதனால் அவன் சொல்லாமல் சென்றுவிட்டான்' என்று அவரிடம் வந்து கேட்டான். அவர் அவனைப் பிறகு பார்க்கவில்லையென்றும், அவன் பிரிவிற்கு மிகவும் வருத்தப்படுவதாகவும் சொல்லிவிட்டார். சட்டென மாலதியின் புஷ்பத்தின் ஞாபகம் வரவே அவளிருக்குமிடம் சென்றான். அவள் தீபத்தின்முன் நரேனுடைய வீணையை வைத்துக்கொண்டு கண்ணீர்வடிய உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில்போய் உட்கார்ந்துகொண்டு, "மாலதி! அவன் சென்றவிடம் உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நேற்றுப் புஷ்பம் வைத்துக்கொண்டது எப்பொழுது? இந்த வீணை அவனுடையதல்லவா? மறைக்காமல் உண்மையைச் சொல்லு. நான் அவனை உன்னிடம் சேர்க்க ஏற்பாடு செய்கிறேன்"

"அண்ணா, உண்மையாக அவர்சென்றவிடம் எனக்குத் தெரியாது. என்னிடம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நேற்றுச் சாப்பாடானதும் வஸந்த மஹாலின் பக்கமாகப் பேசிக்கொண்டே சென்று விட்டோம். அப்பொழுது அவ்விடமிருந்த இந்தப் புஷ்பத்தை என் தலையில் வைத்தார். உடனேயே பாடுவதற்கு வந்துவிட்டோம். எனது வீணையைக்காணவில்லை. அவர் வீணை அறையிலிருந்தது. இரவு வீணையை எடுக்கவந்த சோணாசலத்தை, இரண்டு வீணையையும் அவர் அறையில் வைக்கச்சொன்னோம். மத்தியானம், அங்கே சென்று பார்த்தபொழுது அவர் வீணை அவ்விடமிருந்தது, அதில் இந்தச் சீட்டு வைக்கப்பட்டிருந்தது. அதில்"மாலதி!என் வீணையை உனக்காக வைத்திருக்கிறேன். உன் வீணையை நான் எடுத்துச் செல்லுகிறேன் நரேன்"என்றுஎழுதியிருந்தது. அண்ணா! காரணம் தெரியவில்லை. நீ மிகவும் பாடுபடுகிறாய். என் விதி உனக்கு இடம் தரவில்லை. என் கஷ்டம் என்னோடு. இதை விட்டுவிட்டு உன் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து, அப்பா மனதைச் சந்தோஷப்படுத்து. ஒரு மதனி வந்துவிட்டால் என் துக்கமும் கொஞ்சம் குறையும்."

பயங்கரமாகச் சிரித்தான். பிறகு "மாலதி! நான் ஒரே நாக்குப் படைத்தவன். உனக்கு வாழ்வு உண்டானால் எனக்கும் வாழ்வு உண்டு. உனக்கு இல்லையேல் எனக்கும்இல்லை. இது சத்தியம்" என்றான்.

பிறகு எவ்வளவோ தந்திரமாகவெல்லாம் அவளைக் கேட்டுப்பார்த்தான். அவள் ஒரே பதிலைத்தான் சொன்னாள். "மாலதிக்கு விஷயம் தெரியும். அவள் எதற்காகவோ மறைக்கிறாள். காரணம் தந்தையாகத்தான் இருக்கவேண்டும்" என்று முடிவிற்கு வந்தான். நரேனைத் தேட அநேகவித பிரயத்தனங்கள் செய்துவந்தான். நாளாக நாளாகத் தந்தையின்மீது வருத்தம் ஏற்பட்டது. அடிக்கடி சச்சரவு ஏற்படலாயிற்று. மனோரம்மியமாக விளங்கிவந்த அக்குடும்பத் தோட்டத்தில் கவலை, கோபம், சோகமாகிய புயல்காற்று வீசி, சின்னாபின்னமாகத் தென்பட்டது. மாலதியின் தாய்க்கும் இவ்விஷயம் அறிவிக்கப்பட்டது. அவள் புதல்வியின் பாசத்திற்கும், கணவனின் ஸனாதன சமூகக் கட்டுப்பாட்டிற்கும் மத்தியில் இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தாள். நரேனைக் கண்டுபிடித்துவிட்டால் பிள்ளையின் கக்ஷியில் சேர்ந்துகொண்டு, கணவனை ஏமாற்




குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்-பட்டணம், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர்,
திருச்சிராப்பள்ளி.


றவும் உறுதிகொண்டாள். மாலதிக்குச் சமாதானமும் கூறிவந்தாள். சுபிக்ஷமுற்ற அவ்வீடு களையிழந்து காணப்பட்டது. யாவர் மனதிலும் நிம்மதியில்லை. மணி நாள்களாகி நாள்கள் வாரங்களாகி, வாரம் மாதமாக, மாதம் வருஷத்தையும் தாண்டிவிட்டது நரேன் சென்று. எவ்வளவு முயன்றும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மாலதி நாளுக்கு நாள் மெலிந்தாள். ஆகாரத்தையும் வெறுத்தாள். சந்தோஷமாக இருப்பதாய்க் காட்டி வந்தாலும், எப்பொழுதும் முகத்தில் சோகமே தேங்கிநிற்கும். சித்திரம் வரைய உட்காருவாள். கையில் பிடித்த தீட்டுகோலுடன் கல்லாய்ச் சமைந்து விடுவாள். நரேனது தோற்றமும் செய்கையும் எப்பொழுதும் அவள் மனக்கண் முன் காக்ஷியளித்து வந்தன. சில சமயம் அதில் லயித்து ஆனந்தத்தை அடைவாள். வீணையை வாசிக்க உட்காருவாள். வாசிக்க ஓடாமல், வீணையை முகத்துடன் சேர்த்து வைத்துக்கொண்டு மணிக்கணக்கில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து விடுவாள். அவளது குரு நரேன், படத்திற்குத் தினம் பூஜை செய்வாள். எந்த விஷயமும் அவளுக்குத் துன்பமயமாகவே தோன்றினது. வரவர உடல்மெலிந்து கடைசியில் படுக்கையில் விழுந்துவிட்டாள். அநேக டாக்டர்கள் வந்துபார்த்தார்கள். மனநோய்க்கு மருந்து ஏது? சதா இவளுடன் கூடியமட்டும் நிம்மதியளிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மாதவன் பொழுதைக் கழிப்பான். உத்தியோகத்தையும் விட்டுவிட்டான்.

மாலதி படுக்கையில் விழுந்ததும், சாப்பாட்டு நேரத்தைத்தவிரப் பாக்கிப்பொழுதை மாலதியின் பக்கத்திலேயே உட்கார்ந்து அவளுக்கு வேண்டியதைச் செய்துகழித்தான்.

நரேன் சென்றவிஷயத்தில், பிரிவு என்பதை நினைத்து வருந்தினாலும், குடும்ப கௌரவம், தமது ஸனாதன தர்மம் இவைகளை நினைக்க, அவன் சென்றது நன்மையே என்றும் நினைத்தார் தந்தை. இவளுக்குச் சந்தோஷமாகக் காலங்கழிக்க வசதியளித்தோம். இவள் இந்தப் புத்திக்கு இடம்கொடுத்தாள். இருந்து கஷ்டப் படுவதைவிட இறந்துவிட்டால் நலம் என்று நினைத்துவந்தார். நாள்கள் செல்லச்செல்ல அவர் மனமும் மாறத்தொடங்கிற்று. இந்தக் கோரம் சஹிக்கவில்லை. மாதவன் நிலைமையும் மோசமாகச் செல்லுகிறது. வெளிக்கு ஸனாதனியாகிக் காரியாம்சத்தில் காலத்தையனுசரிக்கும் ஸனாதனர்களை நாமும் பின்பற்றுவோம். நரேன் வந்துவிட்டால் தமக்குத் தெரியாமல் நடந்துவிட்டதாகச் சொல்லிவிடுவோம். மாதவன் இஷ்டப்படி சமஸ்தானத்தில் கல்யாணம் நடக்கட்டும் என்றுகூட சில சமயம் நினைப்பார். ஆனால் விதி.

அன்று காலையிலிருந்து மாலதி மிக்க பலஹீன முற்றவளாகக் காணப்பட்டாள்.

மாதவன் அவள் பக்கத்தைவிட்டு நகரவில்லை. இரவு எட்டுமணி. மாலதி கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். கட்டிலின் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்து அவளையே பார்த்தவண்ணமிருந்தான். அவள் நிலைமையை நோக்க அவன் ஹ்ருதயம் பிளந்துவிடும்போலிருந்தது. "என்ன உலகம்! என்ன கொடுமை. அறியாத பெண்ணின் உண்மைக் காதலுக்குச் சாவுதான் சன்மானமோ? ஒரு பெண்ணின் ஹ்ருதயத்தைப் புண்ணாக்கி அவள் அறிவு, சுகம், சுதந்திரம் இவைகளைப் பாழ்படுத்தி மடியவைத்துவிட்டால், குடும்ப கௌரவம், மானம், சமூகத்தின் கட்டுப்பாடு இவைகள் பாதுகாக்கப்பட்டனவாக உலகின் நினைப்பு. 'ஸனாதனம், சமூகம், குடும்ப கௌரவம் யாவற்றையும் உடைப்பில்போட, என்று பல்லைக் கடித்தான். பிறகு "ஈசா இவளைப்போல் எத்தனை பெண்கள் மடிந்தார்களோ? கபடமற்ற என் ஸகோதரியின் நிலைமை இப்படியா ஆகவேண்டும். அவள் கடைசிக் காலத்திலாவது சற்று நிம்மதி கிடைக்கச் செய்யும். நான் எவ்வளவெல்லாம் எண்ணியிருந்தேன். யாவும் பகல் கனவாய் முடிந்துவிட்டதே. பாழும் சமூகமே உன் வெறியில் எவ்வளவு இளம் கன்னியர்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறாய்?" என்று பலவாறு உலகத்தைச் சபித்தவண்ணம் உட்கார்ந்திருந்தான்.

மாலதி கண்ணைத்திறந்தாள். கட்டிலின் பக்கத்திலுள்ள ஜன்னலின் வழியாகப் பூர்ண சந்திரனும், நக்ஷத்ரங்களும் அவள் கண்ணுக்குத் தென்பட்டன.

"அண்ணா!" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"ஏனம்மா! என்னவேண்டும்?" என்றான் அன்பாக.

ஜன்னலின் வழியாகச் சுட்டிக் காண்பித்து, "நான் அருந்ததி நக்ஷத்திரமாவேனா?" என்றாள்.

அவள் கேள்வியின் அர்த்தத்தை நினைத்து மனம் நொந்தான்.

"மாலதி நீ நிச்சயம் அருந்ததி நக்ஷத்திரமாவாய்."

"நிச்சயமாக?"

"சந்தேகமே இல்லை. நீ நிச்சயம் அருந்ததி நக்ஷத்திரம்தான்.

"அண்ணா, நான் நடந்தது குற்றமோ குற்றமற்றதோ எப்படியானாலும் கீதையில் சொல்கிறபடி காரணகர்த்தா ஈசனே. அதில்வரும் பாப புண்யம் அவரைச்சார்ந்ததே. இல்லை விதி அண்ணா விதி!" என்றாள்.

"விதி மாத்திரம் காரணமல்ல. மதியற்ற மனிதர்களும் காரணம்"

"அது எப்படி யிருந்தால் எனக்கென்ன? அண்ணா இன்று எனக்குப் பலஹீனம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மார்பு வலிக்கிறது. அநேகமாக நாளைச் சூரியோதயத்தை நான் பார்க்கமாட்டேனென்று நினைக்கிறேன். அதற்குள் அவர் வருவாரா? நான் காணமுடியுமா? அண்ணா, எனக்கு இந்த ஒரே ஆசைதான் இருக்கிறது. ஆனால் அது நிறைவேறாது" என்று தங்கித்தங்கிப் பேசினாள். ஆயாசத்தினால் கண்ணை மூடிக்கொண்டாள். இச்சொற்கள் மாதவன் ஹ்ருதயத்தைப் பிளந்தன கண்ணில் நீர் ததும்ப "அம்மா! என்ன கஷ்டம்" என்று வாய்க்குள் முணுமுணுத்தான். சற்று நேரம் அமைதி நிலவியது. மறுபடியும் கண்ணைத் திறந்தாள் மாலதி.

"அண்ணா மணி என்ன?" என்றாள்.

"ஒன்பதரை" என்றான்.

"அண்ணா ஒரு விஷயம் கேட்கிறேன். என் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றுவாயா?"

"என்ன விஷயம் மாலதி, உடனே சொல்லு செய்கிறேன்."

நேற்றுவரை படுத்தபடியேயாயினும் வீணை வாசித்துவிட்டேன். இன்று அதுவும் முடியாது போலிருக்கிறது. நீ அதை எடுத்து இன்பக் கனவு என்ற பாட்டை வாசி" என்றாள்.

"மாலதி! இந்தச் சமயத்திலாவது நான் கேட்பவைகளுக்கு உண்மையான பதிலைத் தருவாயா?" என்றான்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? உன்னிடத்தில் மறைக்கக்கூடிய விஷயம் என்னிடத்தில் ஏது? எது கேட்டாலும் சொல்லுகிறேன் கேள்" என்றாள்.

"அவன் சென்ற நாட்களாக இரவு பத்து மணிக்கு நீ இந்தப் பாட்டை தினம் தவறாமல் வாசிக்கிறாய்? நான் கவனித்துக்கொண்டே வந்தேன். எந்த விஷயம் மறந்தாலும் இதை மறப்பதில்லை. இதில் ஓர் மர்மம் அடங்கியுள்ளது என்பது மட்டும் எனக்கு ஊர்ஜிதமாயிற்று. கேட்டால் நீ உண்மையைச் சொல்லப்போவதில்லையென்று கேட்கவில்லை, இந்த நிலைமையிலும் இன்று நீ சொன்னதால் கேட்கத் துணிந்தேன்" என்றான்.

"அண்ணா! நீ நினைத்தது உண்மையே. அது ஓர் மர்மம்தான். என் ஜீவன் பிரியும்வரை காப்பாற்றிவிட்டேன். இனி எந்த நிமிஷம் என் ஜீவன் பிரியுமோ? அவ்வளவு சோர்வு ஏற்படுகிறது. இனிமேல் சொல்லுவதால் தப்பிதமில்லை. சொல்லுகிறேன்" என்று நரேன் சென்ற விபரம் முழுவதும் தங்கித்தங்கி வரும் மூச்சுடன் சொல்லிமுடித்தாள்.

"ஐயோ மாலதி! உன் வாழ்வை நீயே பாழாக்கிக்கொண்டாயே. அந்தச் சமயம் என்னிடம் சொல்லிவிட்டுப் போகலாமென்று

தடுத்திருந்தாயானால், அல்லது நான் கேட்டதும் உண்மையைச் சொல்லியிருந்தாயானால், உனது வாழ்க்கைப் பூங்காவில் சுகந்த மலர்களும் இனிய கனிகளும் நிறைந்து இன்பமயமாய்த்திகழும். வீணான பலவீனத்தினால் இரகசியம் என்னும் பூச்சியால் அரிக்கவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டாயே. அவன் போன நோக்கம் தெரிந்திருந்தால் அதற்குத் தகுந்த ஏற்பாட்டுடன் தேடிப் பிடித்திருப்பேன். கோழை என் லக்ஷியத்தைச் சிதைத்து உன்னையும் பாழாக்கித் தானும் கஷ்டத்தையடைந்தான்.''

''நீ நினைப்பது தவறு. என் வாழ்க்கைப் பூங்காவை நான் அரிக்கவிடவில்லை. விதியின் சுழல்காற்று அழித்தது. அவர் கோழையல்ல. லக்ஷ்ய புருஷன். தியாகமூர்த்தி. மானி. அப்பாவின் ஒரே வார்த்தையில் அவர் மனம் உணர்ச்சியடைந்தது. ''கடமை''.— அதுவே லக்ஷ்யமாகக்கொண்டார். அவர் சொல்லுவது நியாயம் எனத் தோன்றினது. ஒப்புக்கொண்டேன். அண்ணா! அப்பாவிடம் நான் குடும்ப கௌரவத்தைக காப்பாற்றிவிட்டேன். அவர் ஸனாதன தர்மத்திற்கு பங்கம் ஏற்படுத்தவில்லை. 'சமூகத்தின்முன் அவரைத் தலை குனிய வைக்கவில்லை என்று சொல்லுகிறாயா''? என்றாள். ஆயாசத்தினால் கண்ணை முடிக்கொண்டாள்.

கடலில் முழுகித் தத்தளிப்பவனுக்கு ஓர் துரும்பு அகப்பட்டால் எப்படி அதன் ஆதாரத்தை நாடுவானோ! அதுபோல் மாலதியின் வார்த்தையினால் நரேனைக் கண்டுபிடித்துவிடலாம், ஆனால் மாலதி நிலைமை? அவள் பிழைத்து எழுந்திருக்க ஈசா நீ அருள் செய்ய வேண்டும் என்று எண்ணமிட்டவனாக உட்கார்ந்திருந்தான். ஏதோ காலடிச் சத்தம் கேட்டது. வாசற்படியைத் திரும்பிப் பார்த்தான். எலும்புக்கூடான நரேன் நடந்துவந்தான். அவனது நீண்ட கூரிய மூக்கைக்கொண்டேதான் நரேனென்று கண்டுகொள்ள முடியும். எழுந்து ஒரே தாவலில் சென்று ''நரேன்!'' என்று அவனை அணைத்துக்கொண்டான். ''மாதவா!'' என்றான். பிறகு சற்று நேரம் இருவரும் வாய் திறக்காமல் கண்ணீர் விட்டார்கள். நரேன் கண்கள் மாலதியின் படுக்கையை நாடின. அதைப்பார்த்த மாதவன் அவனைப் படுக்கையருகில் அழைத்து வந்தான். ''மாலதி!'' என்றான் மாதவன். அவள் கண்விழிக்கவில்லை.

''நரேந்திரா! என்ன காரியம் செய்தாய்? இருவரும் சேர்ந்து ஓர் உன்னத லக்ஷ்யத்தைக் கடைப்பிடித்து முன்னேறவேண்டும்'' என்ற எனது எண்ணத்தில் மண்ணைப்போட்டாயே. அவசரப்பட்டுவிட்டாய். தகப்பனார் கோபத்தை ஆற்றதைரியமில்லாமலா துணிந்தேன். அவரே அவளை உனக்களிக்க இப்பொழுது சித்தமாக இருக்கிறார்'' என்று மெலிந்த குரலில் சொன்னான்.

''அவரே அளிக்கும் பக்ஷத்தில் நான் ஆவலுடன் ஏற்கத் தயார்''

''நீ ஏற்பதற்குமுன் யமன் ஏற்றுக்கொண்டு விடுவான்போலிருக்கிறதே! அவள் , உயிர் மட்டும் தங்குமானால், நான் அவள் வாழ்க்கையை எவ்வளவு பரிமளமுள்ளதாக விகஸிக்கச்செய்வேன்.''

''நரேன்! என் மாலதியைக் கொல்லாமல் கொன்றுவிட்டாய். அவசர புத்தியினால் என் லக்ஷ்யத்தையும் சிதைத்து, உன்னையும் வருத்தி அவளையும் பாழாக்கிவிட்டாய். என் ஹ்ருதயம் என்ன பாடுபடுகிறது தெரியுமா? நல்ல வேளையாக இப்பொழுதாவது வந்து சேர்ந்தாயே. அவள் கடைசிக்காலமாவது நிம்மதியடையட்டும். நீ இவ்வளவு நாள் எங்கு மறைந்தாய். நான் தேடாத இடமில்லையே.'

''மாதவா! என்னை மன்னித்துவிடு. என் தந்தையின் வாக்குப்படி கடமைக்குக் காதலைத் தியாகம் செய்தோம். வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல், உன் தந்தையின் மனதை நோகவைக்க என் மனம் இடந்தரவில்லை. அன்று 'நரேன் மாலதியிடம் அவ்வித எண்ணத்துடன் பழகவில்லை என்பது எனக்குத் தெரியும். அவன் அப்படிப்பட்டவனல்ல. இது நிச்சயம்' என்று உன் தந்தை சொன்ன வாக்யத்தில், எவ்வளவு நம்பிக்கை அன்பு தொனித்தது. கடைசியில் இப்படியாகவா நினைத்தான் என்று அவர் நினைப்பாரே என்று நினைக்கும் பொழுதே என் தேகம் குன்றினது. அந்த உணர்ச்சியுடன் அவர் முன் தென்படுவதைவிட உயிரைவிடுவது மேல் எனத் தோன்றினது. அதனால் இவ்விதம் செய்யத் துணிந்தேன். எங்கள் அன்பு பரிசுத்தமுள்ளது. அடுத்த பிறவியிலாவது ஒன்று கூடுவோம். என்று சொல்லிவிட்டு மாலதியின் பக்கம் திரும்பினான். அவள் கண் திறக்கவில்லை. ''தூங்குகிறாளா?'' என்று கேட்டான். ''தூக்கமோ மயக்கமோ? உங்கள் சங்கேதப்பாட்டை வாசிக்கும்படி கேட்டுக்கொண்டாள். நரேன் உன் வாக்கை வேதமென்று நினைத்துப் போற்றினாள். நேற்றுக்கூடப் படுக்கையில் படுத்தவாறே வாசித்தாள். உன்னிடம் வைத்திருக்கும் பக்தியும் அன்பும் எதற்கு ஈடாகும்? நரேன்! உனக்கும் பலனளிக்கக் காத்திருந்த செடியை வெட்டிவிட்டாய். என் மாலதியை அடைந்து சுகம்பெறக் கொடுத்துவைக்காத பாவி நீ'' என்று மனம் கொண்டமட்டும் திட்டினான். பிறகு ''அவள் பக்கத்தில் உட்கார்ந்து அந்தப் பாட்டை வாசி'' என்றான்.

''நரேன் வீணையை ச்ருதிகூட்டிப் பாட்டை வாசிக்க ஆரம்பித்ததும், அந்த மீட்டும் சப்தம் மாலதியின் ஹ்ருதயத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கிற்று. உணர்வு தோன்றிற்று. ஆனால் கண்ணைத் திறக்கமுடியாமல் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். கமகம்,

மீட்டு, பாணி எல்லாம் நரேன்தான் என்பதை அறிந்துகொண்டாள். எவ்வளவு நாள் சென்றாலும், வலிமையிழந்தாலும் அன்பின் ஆழம், அன்பை அறிவது இயற்கையன்றோ. பாட்டு முடிந்ததும் கண்ணை விழித்தாள். அவளையே பார்த்துக்கொண்டிருந்த நரேன், வீணையைக் கட்டில் ஓரமாகச் சாத்திவைத்துவிட்டு, பக்கத்தில் உட்கார்ந்து இரண்டு கைகளையும் அவள் இரண்டு பக்கங்களிலும் ஊன்றி, மாலதி'' என்றான்.

''நரேன்!'' என்றாள் மூச்சுத்திணறியபடி. அந்த ஒரு சப்தத்தில் அன்பு, சோகம், ஆச்சர்யம் யாவும் ஒருங்கே தொனித்தன. உங்கள் வாக்கைக் காப்பாற்றிவிட்டேன். நான் இனி நிச்சயம் அருந்ததி நக்ஷத்திரமாவேன்'' என்றாள்.

நரேனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''என்ன சொல்லுகிறாய்?''

''சற்றுமுன், என் முடிவிற்குள், உங்கள் தெரிசனம் கிடைத்தால் என் கற்புப் பரிசுத்தமானது. நான் அருந்ததி நக்ஷத்திரமாவேன்'' என்று சபதம் செய்துகொண்டேன். உங்களைக் கண்டேன். என் ஜன்மம் சாபல்யமாயிற்று. எப்படி வந்து சேர்ந்தீர்கள். உங்கள் உடம்பு எலும்புக்கூடாய்விட்டதே'' என்று தனது பசையற்ற கைகளினால் அவன் கன்னத்தைத் தடவினாள்.

''மாலதி! நான் உன்னை இந்த நிலைமையில் காணுவேன் என்று நினைக்கவில்லையடி. எங்கெல்லாமோ சுற்றினேன். என்னைத்தேடி வந்தவர்களைக்கண்டும் காணாதுபோல் மறைந்துகொண்டேன். மாலதி, நமது உண்மை அன்பு, என்னை இவ்விடம் கொண்டுவந்தது. நான்குநாளாய் உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் தீவிரமாக எழுந்தது. உணர்வு அடக்கமுடியவில்லை. இவ்விடம் வந்து நிலைமை தெரிந்துகொண்டு இரவில் தோட்டத்தில் நின்றாவது உன்னைப் பார்த்துச்செல்லலாமென வந்தேன். இன்று காலையில் விசாரித்ததில் உன் நிலைமை தெரிந்தது. ஆனால் இவ்வளவு மோசம் என நினைக்கவில்லை. உன் அப்பா முகத்தில் எப்படி விழிப்பது என்று தயங்கினேன். பிறகு காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளலாமென்று நினைத்து, உன் விஷயமாக எவ்வித அவமானம் நேர்ந்தாலும் பரவாயில்லையென்று உள்நுழைந்தேன். உன் தந்தையைக் காணவில்லை. சோணாசலம் ஓடி வந்து என் பெட்டியையும் வீணையையும் வாங்கிக்கொண்டு, நீ இவ்விடம் படுத்திருப்பதாகச் சொன்னான். நேரே இவ்விடம் வந்தேன். வேறு ஒருவரையும் சந்திக்கவில்லை. மாலதி! இன்று விடிந்ததுமுதல் பலவீனமுற்று என் தேகம் பதறிக்கொண்டேயிருக்கிறது. இனிமேல் உன்னைவிட்டுப் பிரியவே மாட்டேன்'' என்று அவள் நெற்றியைத் தடவியவாறு கூறினான்.






உங்கள் கூந்தலைக் காப்பாற்ற
மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிளோ-இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்-2.

"நரேன்! இப்பொழுது எனக்குச் சாக மனம் வரவில்லை. ஆனால் நான் பிழைக்க மாட்டேன் என்று தோன்றுகிறது. உங்கள் முகத்தைப் பார்த்தவாறு ஜீவன்போனால் நான் பாக்யசாலியே. நரேன், மரணமானாலும், வாழ்வதானாலும் இருவரும் சேர்ந்துதான். ஏதோ அப்படி என் மனதில் தோன்றுகிறது. இந்த உலகமே நமக்கு வேண்டாம், ஸனாதனம், சமூகம், அந்தஸ்து, குடும்ப கௌரவம், இவையில்லா உலகத்தில் நாம் ஆனந்த வாழ்க்கை நடத்துவோம்" என்றாள். இதோ பாருங்கள், தாங்கள் அன்று அளித்த புஷ்பம்" என்று, தலைமாட்டிலிருந்த டப்பியைத் திறந்தாள். வாடின புஷ்பம், "மாலதி! என்று அவள் முகத்தருகில் குனிந்து, நீ நிச்சயம் பிழைப்பாய். நான் இனி உன்னை அழைத்துக் கொண்டே இவ்விடம் விட்டுச்செல்லுவேன். அரைக்கணம்கூட பிரிய மாட்டேன்" என்றான்.

"நரேன்!" என்று பயங்கரமாகச்சிரித்தாள். இந்தச் சப்தத்தைக்கேட்டு மாதவன் அருகில் வந்தான். "அண்ணா! எனக்கு என்னவோ செய்கிறது? அம்மாவைக் கூப்பிடு" "என்றாள். வேலைக்காரனைக் கூப்பிட்டுச் சொல்லியனுப்பினான். "நரேன், நீங்கள் அழைத்துக்கொண்டு போகப்போகிறீர்களா? நான் அழைத்துச் செல்லப்போகிறேனா?" என்று நிறுத்தினாள். சற்று நீண்ட சுவாஸம் ஒன்று வந்தது. தனது பசையற்ற துவண்ட கரங்களால் நரேன் கழுத்தைக்கட்டி, முகத்தோடு முகம் சேர்த்துக்கொண்டாள். நரேன்! தெய்வீகக்காதல், அன்பு, சாந்தி!" என்றாள். அவ்வளவே கண்களை மூடிக்கொண்டாள். அவளை அணைத்தவாறே, அதே நிலைமையில் குனிந்துகொண்டிருந்தான். இவன் கழுத்தைச்சுற்றியிருந்த கை நடுவில் படுக்கையில் விழுந்தது. சில்லென்ற மாலதியின் மூக்கு, இவனைத் திடுக்கிட்டு எழுந்திருக்கச்செய்தது. அவள் ஹ்ருதயத்தில் கையை வைத்தான் அவ்வளவே.

"ஐயோ மாலதி! இதற்காகவா நான் இவ்விடம் வந்தேன். ஜீவன் முடியும் தருணம் ஒன்றுசேருவோம் என்ற சபதம் பலித்தது. மரணமும் ஒன்று என்பது பலிக்கவில்லையே, மாலதி மாலதி" என்று பயங்கரமாகக் கதறினான்.

ஹ்ருதய நோயால் பலஹீனமுற்றவன். எதிர்பாராத அதிர்ச்சி. இரத்த நரம்பு வெடித்துவிட்டது. அப்படியே குப்புற மாலதியின் சவத்தின்மீது விழுந்தான். துக்கமயமான முட்கள் நிரம்பிய இரு கூட்டைவிட்ட இரண்டு பக்ஷிகளும் ஒன்றாய்ப் பறந்துசென்றன. நரேன் விழுந்த அதிர்ச்சியில், கட்டிலின்மீது சாத்தப்பட்டிருந்த வீணை கீழே விழுந்து, தடால் என்ற சப்தத்துடன், உடைந்துகூடின குடம் உடைந்து வாய் பிளந்து அதன் நாதமாகிய ஜீவனை விட்டது. இவையாவும் ஒரு விநாடியில் நடந்தேறின. சற்று அவர்கள் தனிமையை அனுபவிக்கட்டும் என்று கொஞ்சம் தள்ளி நின்றுகொண்டிருந்த மாதவன், சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ஒரே தாவலில் கட்டிலின் அருகில் சென்றான். இரு தேகங்களையும் புரட்டினான்.

"மாலதி! நரேந்திரா! தியாகத்திற்குப் பரிசு உயிர்ப்பலியா? அப்பா அம்மா! பலி, பலி! உங்கள் ஸனாதனத்திற்குப் பலி. சமூகக் கொடுமைக்குப் பலி. ஆத்ம பலி. குடும்ப கௌரவத்திற்குப் பலி! அப்பா உமது ஸனாதனம் தர்மம் காப்பாற்றப்பட்டன. சமூகக் கட்டுப்பாட்டிற்கு இரண்டு பலி! அம்மா பலி, பலி" என்று அந்த வீடே கிடுகிடுக்கக் கதறினான். வெறிகொண்டவன்போல், தலையிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டான்.

"அநுகூல சத்ருவாக என் குழந்தையைக் கொன்றுவிட்டீர்களே! உலகத்தில் சாதாரணமாக நடந்துவரும் விஷயத்தில் நீங்கள் மாத்திரம் ஏன் பின்வாங்கவேண்டும்? அம்மா மாலதி என் கண்ணே! வாய்விடாமல் பெற்ற தாயிடம் கூட சொல்லாமல் அப்பாவின் கௌரவத்திற்காக உயிரையே த்யாகம் செய்துவிட்டாயே. இரக்கமற்ற தெய்வமே! மாலதி! என் பெற்ற வயிறு எரிகிறதேடி: அனாதையாக வந்த பிள்ளையையும் பலிவாங்கிவிட்டீர்களே" என்று அலறினாள் தாயார்.

இப்படி நாலாபக்கமும் நிந்தனைச் சொற்களும், நடுவில் கோரமான வீணையும், அன்றிலைப்போல் இருவரும் ஒரே இடத்தில் உயிர் விட்ட காக்ஷியும் ராகவய்யாவின் மனதை வாட்டின. துக்கம் தாங்கவில்லை. அவரும் கதறினார். "உண்மை அன்பின் தன்மையை அறியாமல்போய்விட்டேன். மூடக் கொள்கைக்கு, என்குழந்தையையே பலியாக்கினேன். ஐயோ! நரேந்திரா! என்னை வந்து அடைந்ததற்கு, நான் உனக்களித்த சன்மானம் சாவு தானா?" என்று புலம்பினார்.

ஃ ஃ ஃ

நெருப்பில் கைபட்டதும் 'அப்பப்பா' என்று துடிக்கிறதும், சற்று நாழிகையானால், அது ஒத்துப்போவதும் இயற்கையாகிறது. அப்படியேதான் ஒரு குடும்பத்தில், சிகரம்போலிருக்கும் மனிதர் மறைந்தாலும், அந்தச் சமயம் ஹா, ஹா, என்று உலகமே பதறுகிறது. நாள்கள் செல்ல, உப்பும் தண்ணீரும் உள்ளே புக, யாவும் சர்வசகஜமாகிவிடுகின்றன. இப்படியேதான் நரேன், மாலதி பிரிவும்.

மாதவன் வாழ்க்கையைத் தியாகம் செய்தான். உணர்வில்லாத உடலைச் சுமந்தான். அவனிடம் பேசவே யாவரும் அஞ்சினார்கள். தகப்பனாரைக் குற்றவாளி எனக்கருதினான். கடைசிக்காலத்தையும், தங்களது வம்ச விருத்

தியையும் ராமு ஒருவனாலேயே நடத்திக் கொள்ளவேண்டியதாயிற்று.

மாலதியின் நகைகள், பணம், நரேனது பணம் இவைகளைக்கொண்டும், மாதவனின், பங்கையும் போட்டு "சந்திரமாலா" என்ற சைத்ரிய கலாசாலை ஏற்படுத்தினார்கள். அதில் ஏழைகளுக்கும், மாலதிபோன்ற நிலைமையை அடைந்தவர்களுக்கும், இலவசமாகச் சித்திரம் கற்பிக்கப்பட்டன.

வித்யாலயத்தின் நடு ஹாலில், நரேன், மாலதி இருவர் படமும் ஆள் உயரம் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அதன் அடியில் ஓர் கண்ணாடிப்பெட்டியில் உடைந்த வீணை வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் விதி உடைந்த வீணையாகவந்து சதி செய்ததனால் ஒரேகாலத்தில் உயிரிழந்த உண்மைக் காதலர்கள் என்று எழுதியிருந்தது. நரேனுக்கு உயிருக்குயிராக இருந்த வீணை மாதவனுக்கு ஜன்ம சத்ருவாயிற்று. அதனால் அதை ரிப்பேர் செய்யவும் வேண்டாம், ஒருவரும் வாசிக்கவும் வேண்டாம் என்று வைத்துவிட்டான். மாதவன் மனம் யாவும் விதி புருஷனின் விளையாட்டு என்பதை நம்பவில்லை. மனிதர்களாகச் சேர்ந்து சதிசெய்துவிட்டார்கள் என்ற நினைப்பில் உலகத்தின் பந்தமே வெறுத்துவிட்டது. அவ்விடம் வருவோர் போவோர்கள் அவனது ஸகோதர வாஞ்சையைக்கண்டு ஆச்சரியப்பட்டுப் பேசாமல் செல்லமாட்டார்கள். அக் கலாசாலையைப் பார்க்க வருபவர்கள் மாலதி, நரேன் படத்தையும் உடைந்த வீணையையும் உடைந்த உள்ளத்துடன் காவி உடை தரித்துப்படத்தின்கீழ் கண்ணீருடன் உட்கார்ந்திருக்கும் மாதவனையும் பார்க்காமல் செல்லமுடியாது.

(முற்றிற்று.)


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

| கும்பகோணம் கிளை :— | திருச்சி கிளை :— |
| --- | --- |
| 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி. | 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு |

# எழில்தரும் தொழில்

'சலவை'

—o—

சலவைத்தொழிலும் 64 கலைகளில், ஒன்று இல்லையா? என்ற கவலை நமக்கு வேண்டாம். சொல்லுமிடத்துச் செய்யும் தொழில் ஒவ்வொன்றும் கலைதான். அப்படியானால் உலகத்தில் 64 கலைகள் எனப் பழக்கத்திலிருக்கும் வழக்கச் சொல்லுக்கு இடமில்லை. கலைகள் கணக்கற்றவை. முற்காலத்தில் எல்லாத் தொழிலுக்கும் அவசியமில்லாதிருந்திருக்கலாம். ஆற்றல், அறிவு, வசதி ஒன்றும் கிடையாதகாலம். அறிந்தவற்றை மட்டில் கொண்டு 64 என வகுத்திருக்கலாம். ஆனால் நாகரிகம் ஓங்கி மானிடர்கள் நாலாவிதத்திலும் முன்னேற்றமடைந்து, வாழ்க்கைக்கு யாவும் அவசியமாய்விட்ட இக்காலத்திலோ கற்றனவெல்லாம் கலையே. அக்காலத்தில் சினிமா கிடையாது. படம் எழுதத் தெரியுமே தவிர, எடுக்கத் தெரியாது. இப்பொழுது படம் பிடிப்பதும் அதை ஓடச் செய்வதும், ஒலிபதிவிப்பதும் ஒப்பற்ற கலையாக ஓங்கிவிட்டன.

ஒவ்வொன்றும் அந்தந்த ஜாதிக்கு உரிமையாய் இருந்தது. அவரவர் தம்தம் தொழிலை மேன்மையாகவும், பெருமையாகவும், பழமையாகவும், மிகப் புராதனமானதாகவும்கூட சொல்லிக்கொள்ளுவதில் ஆச்சரியமில்லை. யார் எதைச்சொன்னபோதிலும் எங்களுக்குக் கவலையில்லை. எங்கள் ஜாதியின் பண்டைய சலவைத் தொழில், சகலத்திலும் சிறந்தது; சாஸ்திர சம்மதமானது; புராணகாலந்தொட்டு பெருமைவாய்ந்துவருவது. மிகக்கஷ்டமானது; மன்னாதி மன்னர்களுக்கும், மற்றுமுள்ள மாந்தர்களுக்கும், கோயில்களில் குடிகொண்டு கும்பிடப்படும் தெய்வங்களுக்கும்கூட மிக மிக அவசியமானது. கந்தையானாலும் கசக்கிக் கட்டவேண்டுமென்பது வசனம்.

புராண சம்பந்தத்துக்கு அத்தாட்சி வேண்டுமா? புரட்டுங்கள் ராமாயணத்தை; புரிந்து போகும். சீதையைச் சந்தேகித்து வண்ணான் சொன்ன வார்த்தையை மதித்து, ராமர் தம் பத்தினியை அக்கினிப்பிரவேசத்திற்கு ஆளாக்கினாரென்றால் இக்குலத்தின் பழமையும், பெருமையும் விளங்குவதுடன், அரண்மனைகளிலும், ஆலயங்களிலும், அனாதிகாலமுதல் ஏனாதிகளை அமர்த்தியிருந்தார்கள் என்பதும் தெரியவரும்.

ஆடையென்பதொன்றை அணிய ஆரம்பித்த பின்பும்; அதைத் தைத்து உடுத்த ஆரம்பிக்கு முன்பும் (இவ்விரண்டின் இடைக்காலத்தில்) இத்தொழில் தொடங்கியிருக்கவேண்டும். சலவையென்பது தெரியாதிருக்கலாம், துவைத்து அழுக்கு நீக்கினால் அதுவும் சலவையைச் சார்ந்ததே.

சலவை செய்த தூய துணிகளை உடுத்த விரும்பாதவர் ஒருவரும் இருக்கமுடியாது. ஆள் அங்கமில்லாமல் அவலட்சணமாய் இருந்தால்கூட, நன்கு குளிப்பாட்டி, நல்ல சலவையாலான ஆடையை அணியச் செய்தால், அவனுக்கு ஒரு அலாதி சோபையும், அங்க லக்ஷணங்களும் அமைகின்றன. துணியும் பிணியை நீக்கும்; ரணங்களை ஆற்றும் வல்லமை சலவைத் துணிக்கு உண்டு என்பது நிதர்சனமும் தீர்மானமுமானது.

உத்தியோகம் விரும்பி உயர்தர அதிகாரியைப் பேட்டி காண விரும்பினாலும் ராஜ சபைகளுக்குப் போவதானாலும், நாலுபேர் கூடும் மன்றங்கள், கச்சேரிகள், விருந்துகள் முதலியவற்றிற்குச் செல்வதானாலும், பகட்டான உடுப்புக்களுக்கு மதிப்புண்டு; போகும் காரியம் கைகூடுமென்பது திண்ணம். அழுக்கடைந்த ஆடையுடன் சென்று அவமானமும், அவதியும் அடைந்து திரும்பி வந்தவர்களினுடைய திருஷ்டாந்தம் அநேகம் உள. அதற்கு ஒரு கதை வேண்டுமா?

மிகப்பிரபல கனவான்—எளிய வாழ்க்கை நடத்துபவர்ஒருவர், பெரிய விருந்தொன்றுக்கு அழைக்கப்பட்டார். அவர் பிரத்தியேகமான ஆடை அணியாமல் சாதாரண உடையுடன் அங்கே சென்றார். படேபடே ஆசாமிகளோடு சாமான்ய மனிதர்கூட அவர்களின் ஆடையாபரண அலங்காரம் நிமித்தமாய்த் தங்கு தடையின்றி உள்ளே சென்றனர்.

வாசல் காப்போன் இவரை இன்னாரென்று அறியாது, சாதாரண ஆடையைக்கொண்டு, யாரோ நாடோடியென்று தடுத்துவிட்டான். 'விர்' என வீடு திரும்பினார். வெள்ளைவெளேரெனச் சலவை வேஷ்டி, அங்கவஸ்திரம், ஷர்ட்டு, சட்டை, தலைப்பாகை, தடி, காதில் கடுக்கன், விரல்களில் மோதிரம், இத்யாதிகளுடன் மறுபடி காட்சியளித்தார். எட்டி வரும்பொழுதே வாசல் காப்பவன், இவரை யாரோ பெரிய மனிதரென்றெண்ணி, அடங்கி, ஒடுங்கி, குனிந்து கூழைக்கும்பிடுபோட்டு, "உள்ளே போங்கள்" எனவற்புறுத்தி அழைத்துச்சென்றான். இவருக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. அடக்கிக்கொண்டு உள்ளே சென்றார். நன்கு வரவேற்கப்பட்டார். இலையில் உட்கார்ந்தவர் ஒன்றையும் சாப்பிடாமல், பக்ஷணவகைகளையெல்லாம் எடுத்து எடுத்துக் கோட்டுப்பைகளிலும், தலைப்பா

விலும், அங்கவஸ்திரத்தைப்பிரித்து அதிலும் வைப்பவராய், முனைந்து வேலைசெய்து மூட்டை கட்டிக்கொண்டிருந்தார். இதைக் கண்டு விபரீதமாய் (மூளைக்கோளாறென) எண்ணிக்கொண்ட வீட்டுக்காரர், ஆச்சர்ய மடைந்து அவரை வினவ, அவரும், "இக்கௌரவங்களெல்லாம் எனக்கல்ல. எவர்களுக்காக அளிக்கப்பட்டனவோ அவர்கள் சாப்பிடுவது தான் நியாயம். எல்லாம் இவ்வாடைகளுக் குரியன," எனச் சாந்தமாய் பதில் விடுத்தார். ஆதலால் ஆண், பெண்; பெரியோர், சிறியோர்; படித்தவர், பாமரர்; ஏழை, பணக்காரரென்ற வித்தியாசமின்றி, யாவருக்கும் அந்தஸ்தையும், அலங்காரத்தையும், காரிய ஸித்தியையும் அளிக்கவல்ல புனிதமான தொழில் இது. சமூகத்துக்குத் தொண்டு செய்வதற்கென்றே, தொன்றுதொட்டு வருகின்றன எங்கள் குலமும் தொழிலும்.

அப்பேர்ப்பட்ட இத்தொழில் முன்னேற்ற மடைவதைக்கண்டு மகிழ்ந்திருக்கும் சமயத்தில் முற்றுப்புள்ளி வைக்கும்படி நேரிட்டால் வருந்தாது என் செய்வது? இத்தொழிலுக்கும், எங்கள் குலத்துக்கும் சம்பந்தமற்றுப் போகும்படி செய்யப்பட்டுவிட்டது. இதர ஜாதியார்களும், படித்த வாலிபர்களுங்கூட எங்களுடன் போட்டியிட்டு, பிழைப்பின் நிமித்தம், புது மாதிரியாக 'லாண்டரி' என நவீனப் பெயரிட்டு ஒன்றை நடத்த ஆரம்பித்தார்கள். அவ்வளவுதான், அடிக்கொரு 'லாண்டரி' ஏற்படவே எங்கள் பாடு லாட்டரியாகிவிட்டது. அலுங்காமல், அவதிப்படாமல் ஆவியில் கொடுத்தெடுத்து, பிடித்து மடித்து அரைமணியில் முடித்துக் கொடுத்துவிடுகிறார்கள். எல்லாம் மிஷின் வேலை, நிமிஷக் கணக்கு. ஆனால் என்ன?" கூலி அதிகம். ஆடைகளை ஆவியில் கொடுத்து, அதன் ஆவியை வாங்கி ஆயுளைக் குறைத்துவிடுகிறார்களென்பதை அனைவரும் அறிவர். ஆயினும் என்ன? எங்களிடம் முன்போல் ஒருவரும் வருவதில்லை. லாண்டரியில் போடுவதுதான் பெருமையென்ற எண்ணம். கண்ணுக்குக் கவர்ச்சிதான். காசுக்கு? இப்படியாக எங்கள் தொழில் ஒரு விதத்தில் பிரபலமும், முன்னேற்றமும் அடைந்தபோதிலும், எங்களைப் போன்றவர்களை வயிற்றில் அடித்து, வறுமையைக் கொடுத்து வயிறெரியச் செய்கிறார்கள்.

இதிலிருக்கும் இன்னல்களோ இவ்வளவவ்வளவெனச் சொல்லி முடியாது. முதலில் முனிசிபாலிட்டியாரின் முட்டுக்கட்டை. ஆற்றில் வண்ணார்கள் "அங்கே இறங்கக்கூடாது! இங்கே துவைக்கக்கூடா"தென்ற கடுபிடி. கழுதைகளைக் கண்டவிடங்களில் வீதிகளில் விடக்கூடாதென்ற விதி. பின்னே, அவைகளைக் கட்டிப்போட்டுத் தீனிபோடுவதைக் கண்டதுண்டா? மற்றத் தொழிலாளர்கள் மேனி அலுங்காமல் சம்பாதிப்பதைப் பார்க்கும்போது, பொறாமையும், அசூயையும்கூட, சகோதரத் தொழிலாளரிடம் ஜனிக்கிறது. நாம் என்ன? பொறுமைக்குப் பூஷணமா? சர்வத்தையும் அடக்கிய சந்நியாசியா? மனதை ஒடுக்கிய மகாத்மாவா? உணர்ச்சியற்றிருக்க.

எங்கள் தொழிலுக்கென்று மகா சாதுவான நாலுகால் உபதொழிலாளி ஒருவர். யாரென்று தெரிகிறதா? அவர்தான்! "காம்போதி காயன, கர்ண கடூர கர்த்தப தாஸர்." (இப்பட்டம் எந்த இசைச் சங்கத்தாரால் அளிக்கப் பட்டதென்று தெரியவில்லை.)

விடிய ஜாமத்துக்கு எழுந்தால் இதைக்கண்டு பிடிக்க, குட்டிச் சுவரையும், குப்பை மேட்டையும் ஒன்றுவிடாமல் தேடியலைந்து கண்டுபிடித்துக்கொணர்ந்துபொதியைப்போட்டால், நடந்தாலன்றோ? தந்திரமாய்த்தள்ளிவிட்டுத்தப்பியோடுவதும், அதைத் தொடர்ந்து நாம் ஓட, அது ஓட வெகு வேடிக்கைதான். அத்துடனா? துணிப்பொதிகள், துவைக்கும் கல், சால், காயவைக்கும் கழிகள், உலர்மண் மூட்டை, மண்வெட்டி; இத்தனை சாமக்கிரியைகளையும் உடன் கொண்டு செல்வதென்றால் எப்படி முடியும்? பெண்டு பிள்ளைகளும்கூட சோற்று மூட்டை சகிதம் ஆற்றுக்கு அலையவேண்டும். அடிக்கும் காற்றோ-மழையோ-வெய்யிலோ, எல்லாம் எங்கள் தலையில்தான். வசதியான இடமாகத் தேடிச் சென்று, பள்ளமும் ஓடையும் பறித்துக்கொண்டு, அத்தனை துணிகளையும் அஸ்த


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம், ஸி.
**அப்பாசாமி செட்டி & கோ.,**
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

மனபரியந்தம், ஓடும் தண்ணீரில் கால் ஒடிய நின்று, துவைத்து, காயவைத்து, மறுபடி ஜாக்கிரதையாய் ஒன்றுவிடாமல் சேகரம் செய்துகொண்டு திரும்பவேண்டும். துணிகள் காயும்பொழுது திடீரெனக் காற்ளு, மழையோ வந்துவிட்டால் பார்க்கவேண்டுமே எங்கள் பரபரப்பை. துணிகளை வாரிச் சுருட்டிக்கொண்டே போய்விடும் காற்று. அதன்பின் ஓடிக் குனிந்து—குனிந்து-எழுந்து பொறுக்குவதற்குள் குடல் வெளியே வந்துவிடும்.

வீட்டிற்கு வந்தபிறகாவது ஒய்ச்சல் உண்டா? ஒழிவுண்டா? துணிகளைத் தனித்தனியாகப் பொறுக்கவேண்டும். மடித்து இஸ்திரி போடவேண்டும். அடுத்த சலவைக்குள் எதை வெள்ளாவியில் வைக்கவேண்டும். உலர்மண் கொண்டுவர, கழுதைகளைக் கட்டி இழுத்துச் செல்லவேண்டும். பொறுக்கிய துணிகளை அவரவர் வீடுகளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து, அழுக்குக்களை அள்ளிவர வேண்டும். போதுமா? எங்கள் கஷ்டம்.

இத்தனை இடையூறுகளையும் இம்மியும் உணராமல், போனவுடன் வாடிக்கைக்காரர்களின் வரவேற்பு எப்படி? "என்னடா நீ? சரியாகவே வருவதில்லை. இதென்ன சலவை? இப்படி மடித்திருக்கிறாயே. இதுதான் விசிறி மடிப்போ? சுத்த மோசம். இஸ்திரி போடவேயில்லையா? கஞ்சி ஏன் போட்டாய்? நீலம் அதிகம். இந்தப் புது அங்கவஸ்திரத்தை இப்படியா கிழிப்பது? 8 முழ வேஷ்டியை எங்கே காணோம்? என்றெல்லாம் பலரிடமிருந்தும், ஏதாவது புகார் இல்லாமல் இருப்பதில்லை. பணமாவது கைக்குக்கிட்டுமா? கேட்டால் முதல் தேதி வா. அடுத்த சலவைக்கு ஆகட்டும், போ. சலவை செய்து 'கிழிப்பதற்கு' பணம் வேறு கேட்க வந்துட்டையோ. சலவை செய்தலக்ஷணத்துக்கு, கைமேல் பணம் தரணுமோ? போடா கழுதை" என்ற பதில்கள்தான் கிடைக்கும். கடைசியில் கிட்டுவது என்ன? என் உபதொழிலாளியின் ஸ்தானம். இதெல்லாம் கேட்க எப்படி இருக்கும்? தொழிலை விட்டுவிட்டு மரத்தில் தொங்கலாமா? எங்கேயாவது ஓடிவிடலாமா? அல்லது வேறு ஏதாவது தொழில் செய்யலாமா? என்று தோன்றுகிறது. எப்படி விடுவது? குலத்தொழில் அல்லவா? அதை நினைக்கும்பொழுது பெருமை பொங்குகிறது. யாரும், எதுவும் சகஜத்தில் சொல்லுவதுதான். அதற்காகக் கோபித்துக் கொள்ள முடியுமா?

இவ்வித கஷ்டங்களுக்கிடையிலும், இரவில் சாப்பிட்டபின் படுக்கப் போகுமுன், பரிவுடன் மேல் விழுந்து கொஞ்சி விளையாடும் குஞ்சு குழந்தைகளையும், இஷ்டமுடன் பேசி இன்பமூட்டும் இல்லாளையும், பார்க்கும் பொழுது, சர்வமும் சர்வேச்வரனுக்குச் சமர்ப்பணம், இதுவே பரமானந்தம், பரமபதம், எனத் தோன்றுவதுடன், மற்றெல்லா மனக்குறையும் மடிந்து மறந்துவிடுகின்றன. இதைவிட வேறு என்ன வேண்டும், இம்மாயப்பிரபஞ்சத்தில்? வேறு எது ஆனந்தம்? இதுவும் அம்மாயவனின் லீலா விநோதம்தான்.

எவருக்கும் எழில்தரும் எங்கள் தொழிலுக்கு, இழிவில்லை புகழுண்டு, அழிவில்லை செழிப்பு உண்டு அறிவீர்!


## மேதாஸ்

# "சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

**K. S. மேதா & Co., மதராஸ்.**

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,
ஸெகண்ட்ராபாத்.

# படித்த முட்டாள்

கமலா பத்மநாபன்

—x—

"உஸ்! அப்பா! என்ன வெய்யில்! சித்திரை பிறப்பதற்குள்ளாகவே இத்தனை உக்கிரமாய்த் தகித்தால் இந்த வருஷம் பாக்கி கோடை நாட்களும் எப்படி இருக்கப்போகின்றனவோ?" என்று ஆயாசத்துடன் கூறிக் கொண்டே ஆபீஸ் உடைகளைக் கழற்ற ஆரம்பித்தான் ஸத்யன்.

"என்ன? இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்துவிட்டீர்கள்? மணி இன்னும் ஐந்துகூட அடிக்கவில்லையே!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டுக்கொண்டே தன் கணவன் அருகில் வந்து நின்ருள் ஹேமா.

"ஆபீஸில் வேலை ஒன்றும்இல்லை இன்றைக்கு. பிடுங்கி வாயில் போட்டுக்கொள்ளும் மானேஜரும் ஊருக்குப் போயிருக்கிருன். அதனுல் தான் சீக்கிரம் வீட்டிற்கு வந்துவிட்டேன். கொஞ்சம் ஷர்பத் செய்துகொண்டு வாயேன், ஹேம். என்ன தாகம்! நெஞ்சும் நாக்கும் ஒட்டி உலர்ந்து போகின்றன?" என்று சொல்லிக் கொண்டே ஈஸிசேரில் சாய்ந்தான் ஸத்யன்.

"நல்ல வேலை செய்தேள்! விடிந்தால் வருஷப்பிறப்பு! நான்கூட உங்களோடு மனசு விட்டுச் சில விஷயங்களைப்பேச வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன்" என்று புகன்றுவிட்டு சமையலறைப்பக்கம்சென்ருள். ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம்எலுமிச்சம்பழப் பானகத்தைத் தயார் செய்துகொண்டு வந்து ஸத்யனிடம்லோட்டாவை நீட்டினுள். அதை வாங்கிக் குடித்துக்கொண்டே "என்ன சமாசாரம் அது ஹேமா? நீ சொன்னதைப்பார்த்தால் இத்தனை நாட்களாக நீ என்னிடம் மனசு விட்டுப்பேசாமல் இருந்து வந்திருக்கிருய் என்றல்லவா நினைக்கும்படி தோன்றுகிறது! இருக்கட்டும்" என்ருன் பாசாங்கானகோபத்துடன்.

ஹேமா மோகனப் புன்சிரிப்புடன் ஸத்யன் சாய்ந்து கொண்டிருந்த சாய்மான நாற்காலியின் கைப்பிடிச்சட்டத்தின் மேல் அமர்ந்து தன் கணவனுடைய கலைந்து போன கிராப் தலையைச்சரிப்படுத்திக்கொண்டே "அப்படியா சொன்னேன் நான்? நாளைக்குத் தாரணவருஷப் பிறப்பு அல்லவா? புது வருஷப்பிறப்பன்று நாம் நம் வாழ்க்கையில் சில நல்ல பழக்க வழக்கங்களைக் கடைபிடிக்கத் தொடங்கினுல் நமது இல்வாழ்க்கை இன்னும் அதிக இன்பமும் அமைதியும் உள்ளதாய் இருக்குமே என்ற ஓர் நூதன எண்ணம் ஏற்பட்டது. அதைப் பற்றி உங்களிடம் பேசி முடிவுசெய்ய வெகு ஆவலாக இருந்தேன். ஆனுல் வழக்கம்போல் மாலை ஏழு மணிக்கு, ஆபீஸிலிருந்து அலுத்துச் சலித்து வீடு திரும்பும் உங்களிடம் இதைப் பற்றி எப்படிப் பிரஸ்தாபிப்பதுஎன்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். இப்பொழுது அதற்கு இடமில்லாமல் நீங்கள் இன்று சீக்கிரமே வீடு திரும்பிவிட்டது எனது அதிர்ஷ்டம் தான்" என்ருள்.

ஸத்யன் காலி லோட்டாவை முக்காலியின் மேல் வைத்துவிட்டு ஹேமாவின் மற்ருெரு கரத்தைப் பற்றிக்கொண்டு "தேவியின் ஆக்ஞை என்னவோ?" என்று வினவினுன் அன்பு கனியும் குரலில்.

"ஆக்ஞையிடுவதும் கீழ்ப்படிவதும் உங்கள் ஆபீஸோடு நிற்கட்டும். இங்கு, நம் குடித்தனக் காரியாலயத்தில், அதெல்லாம் பேசக் கூடாது. பரஸ்பர அன்பினுலும் பூர்ண ஒத்துழைப்பினுலும்மட்டுமே நாம் வெற்றிகரமாய் குடும்பம் நடத்திவருகிருேம். வரவேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது தெரியுமா?"

"விஷயத்தைச் சொல்லாமல் ஏதோ பிரமாதமாய்ப் பிரசங்கம் செய்கிருயே, ஹேமா! நாளைக்குப் புது வருஷப் பிறப்புத்தான். எனக்கும் தெரியும், அதற்காக என்ன செய்ய வேண்டுமென்கிருய்?"

"புது வருஷ ஆரம்பதினத்தன்று ஆரம்பம் செய்யப்படும் எந்தக் காரியமும் அந்த வருஷம் முழுவதும் — முந்நூற்று அறுபத்தைந்து நாளும்-உறுதியுடன் நிலைத்திருக்குமென்று நம் பெரியோர்கள் சொல்வதில் எனக்கு எப்போதும் நம்பிக்கையுண்டு. நமக்கு விவாகம் ஆகி, குடித்தனம் செய்ய ஆரம்பித்தபிறகு நாம் கொண்டாட்டம் போடும் முதலாவது வருஷப் பிறப்புப் பண்டிகை இதுதானே? ஆகையால் அன்றைய தினத்திலிருந்து நம்மிருவருடைய பழக்க வழக்கங்களிலும் சில புதிய—மெச்சத்தக்க — மாறுதல்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதாவது நீங்கள் இந்த ஏற்பாட்டிற்கு மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கும் பக்ஷத்தில்" என்று தன் மனக்கருத்தைப்பகிரங்கமாய் ஸத்யனிடம் அறிவித்தாள் ஹேமா.

"என்றைக்கு, எந்த விஷயத்தில் உன் ஆசைக்குக் குறுக்கே நின்றிருக்கிறேன் நான். கண்ணே? விரலை மடக்கு, பார்ப்போம். என்னைப் பொறுத்தமட்டில் எத்தகைய மாறுதல்களை விரும்புகிறாய் நீ? நாளைக்கே நான் கட்டுக் குடுமிவைத்துக்கொண்டு, பட்டை பட்டையாய் விபூதியைக் குழைத்துப் போட்டுக்கொண்டு பக்தி சிரத்தையுடன் சுவாமி பூஜை செய்யத் தொடங்கவேண்டும் என்று மாத்திரம் சொல்லிவிடாதே! விபூதிப் பட்டை போட்டுக்கொண்டு பக்தியுடன் பூஜை செய்வது ஒன்றும் கடினமான காரியமில்லை. ஆனால் நாளைப்பொழுது விடிவதற்குள் கட்டுக்குடுமியை வரவழைக்கும் மாயசக்திக்கு எங்கே போவேன் நான்?" என்று வேண்டுமென்றே வருவித்துக்கொண்ட கலவரமுகபாவத்துடன் கேட்டான் ஸத்யன்.

தன் நாயகனின் வார்த்தைகளில் ஒலித்த ஹாஸ்யச் சுவையை அனுபவித்துப் பலமாய்ச் சிரித்தாள் ஹேமா. சிரிப்பு அடங்கிய பிறகு "அதெல்லாமில்லை. பயப்படாதேயுங்கள். நாளை முதல் உங்களுடைய சில்லறை வேலைகளை எல்லாம் நீங்களே செய்துகொள்ளவேண்டும் தெரியுமா? எதற்கெடுத்தாலும் 'ஹேமா, ஹேமா' என்று என்னைக் கூப்பிட்டு நச்சரிக்கக்கூடாது. அவரவர்கள் வேலையை அவரவர்களே செய்துகொள்வதினால் இருவருக்கும் எவ்வளவோ ஸௌகர்யமும் அவகாசமும் கிடைக்கும். வே......"

"என் காபியை நானே போட்டுக் குடிக்க வேண்டும்! உன் காபியை......"

"சரி விளையாட ஆரம்பித்துவிட்டேளா? நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை போங்கள்" என்று உதட்டைப் பிதுக்கிக்கொண்டு எழுந்தாள் ஹேமா.

"இல்லையில்லை! கோவிச்சுக்காதே. என் செல்லமோல்லியோ? பாக்கியையும் சொல்லு" என்று ஹேமாவை இழுத்துப் பிடித்து உட்கார வைத்த ஸத்யன் வெகு தணிவாய் "அப்புறம்?" என்று கேட்டான்.

"விழுப்புரம்!"

"பார்த்தாயா? நான்தான் இனிமேல் விளையாடமாட்டேன் என்றேனே! எத்தனை சீக்கிரம் கோபம் வந்துவிடுகிறது, ஹேமா, உனக்குத்தான்? காலையில் எழுந்தவுடன் எனக்கு வேண்டிய பல் தேய்க்கும் பிரஷ், பேஸ்ட், முகம் துடைக்க டவல் எல்லாவற்றையும் நானே பார்த்து எடுத்துக்கொண்டு பல் தேய்த்துவிட்டு வரவேண்டும். பிறகு உள்ளே வந்து நீ கொடுக்கும் காபியை வாங்கிச் சாப்பிடவேண்டும்."

"இல்லை, குளித்த பிற்பாடுதான் காபி கிடைக்கும். படுக்கையை விட்டு எழுந்து பல் தேய்த்த கையோடு குளித்தால்தான் சுறுசுறுப்பாக இருக்கும். நாளை முதல் இந்தப் புதிய மாறுதல் அமுலுக்கு வரும். பிறகு, நான் உள்ளே காரியமாக இருக்கும்பொழுது 'ஹேமா, என் பேனாவைப் பார்த்தாயா? டைரியைக் காணுமே! தைல சீசாவும் சீப்பும் எங்கே யாத்திரைபோய்விட்டன?" என்று அடிக்கொருதரம் என்னைத் தொந்தரவு செய்து கண்ணெதிரிலேயே இருக்கும் சாமான்களைக் கூட நான் வந்து கையில் எடுத்துக் கொடுக்கும்படி வைத்துக்கொள்ளக்கூடாது. காலைவேளையில் நாவல் படித்துக்கொண்டு பொழுது போனதே தெரியாமல் உட்கார்ந்திருந்துவிட்டு, பிறகு பத்தரை மணிக்குமேல் பறக்கப் பறக்க உள்ளே வந்து சாப்பாட்டை இரண்டு வாய்களாய் அள்ளிப் போட்டுக்கொண்டு விழுந்தேன் கெட்டேன் என்று ஆபீஸுக்கு ஓடும் பழக்கத்தைத் தொலைத்துத் தலை முழுகவேண்டும். இதுமாதிரி இன்னும் அனேக விரும்பத்தகாத வழக்கங்களை எல்லாம் இன்றோடு ஒழித்துவிட்டு நாளைமுதல் ஒரு புது மனுஷனாக மாறிவிடவேண்டும் நீங்கள். என்ன நான் சொல்வது புரிந்ததா?" என்று கேட்டாள்.

ஸத்யனின் உதடுகளில் ஒரு குறும்புப் புன்முறுவல் அரும்பிற்று. "ஆமாம், சற்று முன் யாரோ ஆக்ஞையிடுவதும் கீழ்ப்படிவதும் ஆபீஸ் மட்டோடு நிற்கட்டும் என்று சொன்ன மாதிரி இருந்ததே? இப்பொழுது நான் ஆபீஸில் இருக்கிறேனா, அல்லது குடும்பக் காரியாலயத்தின் தலைவியின் முன்நின்று 'இன்ஸ்ட்ரக்ஷன்' (Instructions) பெறுகிறேனா என்பதைத் தெளிவுபடுத்தினால் தேவலை" என்றான்.

"மறுபடியும் ஆரம்பித்துவிட்டேளே உங்களுடைய விகடப் பேச்சை! அப்பப்பா! உங்களோடு பேசிப் புறப்பட என்னால் சாத்தியப்படாதே! போகட்டும் பாக்கியையும் சொல்லிவிடுகிறேன். நீங்கள் அதன்படி நடந்தால் நடவுங்கள், இல்லாவிட்டால் போங்கள். தினமும் காலையிலோ, மாலையிலோ, உங்களுக்கு ஸௌகர்யப்பட்டபொழுது, சிறிது அவகாசம் ஏற்படுத்திக்கொண்டு, அந்த நேரத்தில், தனிமையில் உட்கார்ந்துகொண்டு பரிசுத்த மனதுடன் கடவுளைத் தியானம் செய்ய வேண்டும். உங்களுடைய சிநேகிதர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் 'என் மிஸஸ் அதைச் சொன்னாள், இதைச் செய்தாள்' என்று அடிக்கடி நீங்கள் பீத்திக்கொள்ளும் 'மிஸஸ்' பெருமையை விடவேண்டும். அதைவிட அநாகரிகப் பழக்கம் வேறெதுவுமில்லை என்பது என் அபிப்பிராயம். இவ்வளவுதான் நான் உங்களிடம் எதிர்பார்க்கும் முக்கியமான மாறுதல்கள். இப்பொழுது நீங்கள் சொல்லுங்கள். நான் எந்தெந்த விஷயத்தில் என் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளவேண்டும்? என் நடத்தையில் உங்களுக்குப் பிடிக்காதவை எவை? எதையும் மறைக்கக்கூடாது. மனசைத் திறந்து சொல்லவேண்டும். ஒற்றுமையான தம்பதிகளிடையே ஒளிவு மறைவு இருந்தால் அதைவிட பெரும் மூடத்தனம் வேறெதுவும் இல்லை.

ஊம், சொல்லுங்கள். நான் எப்படியெல்லாம் இருக்கவேண்டும்?'' என்றாள் ஹேமா.

''நீ எனக்கு இப்படியேதான் இருக்கவேண்டும் ஹேமா. உன் நடத்தையும் குணமும்தான் எல்லாவிதங்களிலும் ஏ. ஒன்றாக (A. 1) இருக்கின்றனவே! மாறுதல் ஏதுக்கு? அவசியமே இல்லை.'' என்று கூறி ஹேமாவின் கன்னத்தை ஆசையுடன் கிள்ளினான் ஸத்யன்.

தன் பதியின் வார்த்தைகளைக் கேட்டு ஹேமாவுக்கு உள்ளூற மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கின. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் ''ஊஹூம். நான் ஒத்துக்கொள்ளமாட்டேன் இதற்கெல்லாம். என்னிடம் குற்றமே இல்லையென்று கூறிவிடமுடியுமா? ஊன்றிப் பார்த்தால் ஏதாவது தெரியாமலிருக்காது! யோசித்துச் சொல்லுங்கள். நான் உங்களை விடப்போவதில்லை!'' என்று தன் கருவிழிகளின் பார்வையை ஸத்யன்மீது சுழற்றி வீசி இனிமையாய்ப் பேசினாள் ஹேமா.

அவளையே உற்று நோக்கியவண்ணம், கொஞ்சிப் பேசும்பொழுது அவளுடைய வனப்புப் பன்மடங்கு அதிகமாய்ச் சோபிப்பதைக்கண்டு ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்த ஸத்யன் ''ஆமாம், இப்பொழுதுதான் தெரிகிறது. உன்னிடம் சில குறைகள் இருக்கத்தான் இருக்கின்றன. அவற்றை நீ நீக்கிக்கொண்டால் எனக்கு எவ்வளவோ ஸௌகர்யமாக இருக்கும். ஒவ்வொரு சமயம் நான் அதனால் திண்டாடித் தவிப்பது எனக்கல்லவா தெரியும்'' என்றான்.

''என்ன அவை? சீக்கிரம் சொல்லுங்கள்?'' என்று துடித்தாள் ஹேமா.

''உன்னுடைய மயக்கம்தரும் வேல் விழிகளின் பிரயோகத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளவேண்டும். மற்றும் என்னை மெய்மறக்கச் செய்யும் மந்திர சக்திவாய்ந்த உனது மதுர மொழிகளை இனிமேல் செட்டாகச் செலவழித்தால் தேவலை. அப்புறம்......''

''சரி, சரி! போதும் நிறுத்துங்கோ! எத்தனை தடவை சொன்னாலும் உங்கள் குறும்புத்தனத்தை மாத்திரம் விடமாட்டீர்கள். நான் ஏதோ கேட்டால் வேல் விழிகள் மதுர மொழிகள் என்று கவிகள் வர்ணிப்பதுபோல் ஏதேதோ கூறி என்னைப் பைத்தியமாக்குகிறீர்களே! நான் போகிறேன், கையை விடுங்கள். கொள்ளை வேலை கிடக்கிறது எனக்கு'' என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டே ஸத்யனின் பிடியிலிருந்து திமிறினாள் ஹேமா.

''ஆ, இப்பொழுதுதான் தெரிகிறது உன்னிடம் தென்படும் ஒரே ஒரு குறை! சொல்லட்டுமா? விளையாடவில்லை. இந்தத் தடவை நிஜமாகவே சொல்லிவிடுகிறேன்'' என்று தன் இனியாளின் முகத்தை ஆசையுடன் நிமிர்ந்து பார்த்தபடி கேட்டு அவள் தன் பிடியிலிருந்து நழுவிவிடாதபடி, அவள் இடுப்பைச் சுற்றித் தன் கரத்தை வளைத்து இறுகப் பிடித்துக்கொண்டான் ஸத்யன்.

ஹேமா தன் வளைந்த புருவங்களை உயர்த்தி நெறித்து ஸத்யனின் முகத்தைப் பாராமலேயே ''என்ன அது?'' என்றாள்.

''மூணுக் என்பதற்குள் உனக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடுகிறதே! அதை மாத்திரம் விட்டொழித்தால் நீ ஒரு ஐடியல் பெண் (Ideal Girl) என்று நிச்சயமாய்க் கூறிவிடலாம்'' என்றான் ஸத்யன்.

''இவ்வளவுதானே! வேறு ஏதாவது செய்ய முடியாத காரியத்தைக் கூறப்போகிறீர்களோவென்று பயந்துபோனேன்! இனிமேல் இந்தக் கோபத்திற்கு இடம் கொடுக்கமாட்டேன் நான். உங்களிடம் 'ஐடியல்' பெண் என்று பேர் வாங்குவது பெரிசா என் முன்கோபத்தை விடுவது பெரிசா?'' என்று உத்சாகத்துடன் கூறித் தன் கணவன் முகத்தருகே குனிந்து அவனுடைய கன்னத்தில் ஒரு ஆசை முத்திரை வைத்துவிட்டு, அவனுடைய அணைப்பிலிருந்து நழுவி ஓடிவிட்டாள் ஹேமா.

மறுநாள் தாரண வருஷம் மற்றெல்லா வருஷங்களைப்போலவே வெகு குதூகல வரவேற்புடன் பிறந்தது. இந்த விசேஷ பண்டிகையின் பொழுது தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் குஷிக்கும் கொண்டாட்டத்திற்கும் கேட்கவேண்டுமா? ஹேமாவும் அன்று விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்து வீடு முழுவதும் வெகு நேர்த்தியாய் மாக்கோலமிட்டு அழகுபடுத்தினாள். வாசலில் லக்ஷணமாய் மாவிலைத் தோரணம் கட்டினாள். சூரியோதயமாவதற்குள் மங்கள ஸ்நானம் செய்துவிட்டுப் புதுசு உடுத்திப் பிறகு அடுப்பங்கரைக் காரியங்களைக் கவனிக்கச்சென்றாள். ஸத்யனும் அன்று சீக்கிரமே எழுந்துவிட்டான். முதல் தினம் ஹேமா தனக்கு இட்டிருந்த கட்டளைகளை எல்லாம் அவன் மறந்துவிடவில்லை. அவன் ஒரு விஷயத்தில்கூட அன்று ஹேமாவின் உதவியை எதிர்பார்க்காமல் வெகு சுறுசுறுப்புடன் பல் தேய்த்த கையோடு குளித்துவிட்டு விபூதியிட்டுக்கொண்டு அப்புறம் தான் காபி சாப்பிட்டான். ''ஹேமா, இன்று எனக்கு ஆபீஸ் கிடையாது. ரஜாதானே. உனக்குச் சுத்து வேலை செய்து கொடுக்கப்போகிறேன்' பண்டிகையென்று சமையல் திட்டத்தில் அதிகப்படி 'ஐடம்'களை சேர்த்திருக்கிறாய் அல்லவா? நீ மாத்திரம் ஒன்றியாய் அத்தனை வேலையையும் செய்வதைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்கமுடியாது. காய் நறுக்கித் தரட்டுமா? அடே! காய்களெல்லாம் அப்பொழுதே நறுக்கிக்கொண்டுவிட்டாயா? அதென்ன அந்தப் பாத்திரத்தில் ஊறப்போட்டிருக்கிறாய்? வடைக்கா? சரி, இன்று நான்தான் அதை அரைத்துத் தட்டப்போகிறேன். உப்பு, காரம்

முதலியவற்றை மாத்திரம் திட்டமாய் நீ போட்டுக் கொடுத்துவிடு" என்று சொல்லிக் கொண்டே கல்லுரலை அலம்பத் தொடங்கி விட்டான். ஹேமா முதலில் இதற்குச் சிறிது ஆக்ஷேபித்தாள். பிறகு 'தினமுமா இப்படி வந்து வேலை செய்யப்போகிறார்? லீவாகவும் இருக்கிறது. வருஷத்திற்கு ஒரு நாள். அவர் ஆசையைக் கெடுப்பானேன்' என்றெண்ணிச் சும்மா இருந்துவிட்டாள்.

பண்டும் பரிகாஸமுமாய்ப் பேசிக்கொண்டே தம்பதிகள் இருவரும் சேர்ந்து தடபுடலாய்ப் பண்டிகைச்சமையலைத் தயார்செய்து, பத்தரை மணிக்கெல்லாம், சமையலறை வேலையைக் கச்சிதமாய் முடித்துவிட்டு வெளியே வந்தனர்.

"இந்த மாதிரி சவரணையாய்ச் சுத்துவேலை செய்துகொடுக்கும் ஆள் கிடைத்துவிட்டால் நூறுபேருக்குக்கூட சிரமம் இல்லாமல் பஞ்ச பக்ஷிய பரமானத்துடன் சமையல் செய்துவிட லாமே!" என்று நிஜமாகவே தன் கணவனுக்கு ஸர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டாள் ஹேமா.

மனைவியின் வாயால் புகழுரை கேட்க வேண்டுமென்றால் (அதுவும் சமயலறை வேலைத் திறமையைப்பற்றி) எந்தப் புருஷனுக் குத்தான் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற் படாது?

சுவாமி அறைக்குச் சென்று ஒரு தாம்பாளத் தில், தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு, புஷ் பம் அக்ஷதை முதலியவற்றையெல்லாம் எடுத்து வைத்தாள் ஹேமா. வெள்ளிக் குத்துவிளக்குக் களுக்குத் திரிபோட்டு, சுவாமி படங்களின் முன்புவைத்து, நெய்ஊற்றிப் பற்றவைத்தாள். "பட்டைக் கட்டிக்கொண்டு வருகிறீர்களா? சுவாமிக்கு இன்றைக்காவது இரண்டு பூவும் அக்ஷதையும்போட்டு நமஸ்காரம் செய் யுங்கள்" என்று கணவனுக்கு உத்தரவிட் டாள்.

"பட்டு எதற்கு? இந்த நூல் வேஷ்டியோடு போடும் பூவையும், அக்ஷதையையும் அந்த ஸ்வாமி ஏற்றுக்கொள்ளாதோ?"

"இல்லாவிட்டால்தான் தீராது. லக்ஷண மாய், கல்யாணத்தின்போது எங்காத்தில் வாங்கிக்கொடுத்த ஜரிகைக் கரைபோட்ட பட்டுப் பத்தாறுதான் (பத்துமுழ வேஷ்டியும் ஆறுமுழ மேல்அங்கவஸ்திரமும் கூடிய கோடி) இருக்கிறதே! அதை நாள் கிழமைகளில் உடுத்தி உபயோகிக்காதுபோனால் வேறு எப் பொழுதுதான் உடுத்திக்கொள்ளப் போகி றீர்கள்?"

"உங்களகத்தில் வாங்கிக்கொடுத்தது என்ப தினால் அதற்கு ஒரு தனிப்பட்ட மதிப்பு வந்து விடுமா ஹேமா? உடம்புவேர்வை படுவதினா லேயே அந்தப் பட்டின் கரைச்சாயம் உடலெல் லாம் இறங்கி, நீலமும் சிகப்புமாய் வர்ணமடிக் கப்பட்டு ஹோளிப் பண்டிகையில் கலந்து கொண்டவனின் வஸ்திரம்போல அல்லவா காக்ஷி கொடுக்கிறது? அந்த அவலக்ஷணத்தைத் தரித்துக்கொண்டு சுவாமியை வணங்குவதை விட இந்தச் சாதாரண மல் வேஷ்டியுடன் தொழுதாலே சுவாமி திருப்தியடைவார்" என்று தன் கண்களில் குறும்புத்தனம் கூத் தாட லேசாகச் சிரித்துக்கொண்டே கூறினான் ஸத்யன்.

ஸத்யனின் வார்த்தைகள் ஹேமாவுக்குச் சுறுக்கென்றுபட்டன. முகத்தை ஒருமாதிரி சுளுக்கிக்கொண்டு "அப்படியானால் எங்காத் தில் வேண்டுமென்றே உங்களுக்கு அந்தமாதிரி மட்டப்பட்டை வாங்கிக்கொடுத்தார்கள் என் பது உங்கள் அபிப்பிராயமா?"

"இல்லையென்று மறுக்கமுடியாது நான்! கறுப்பு மாப்பிள்ளைக்கு, எல்லாம் இந்த மட்ட ரகப்பட்டே போதுமென்று நினைத்துத்தான், தண்ணீரில் போடுவதற்கு முன்பே சாயம் போகக்கூடிய வஸ்திரத்தைப் பிரஸண்டாகக் கொடுத்திருக்கலாம். ஞாயம்தானே?"

பிறந்தகத்து மனுஷாளைப் பற்றித் தூஷணை யான வார்த்தைகளைக் கேட்டால், சாதாரண மாய் எல்லாப் பெண்மணிகளுக்கும், ரோ ஷமும், வருத்தமும் வருவது இயற்கைதானே? படித்த பெண் என்ற காரணத்தினால் ஹேமா, அதற்கு விலக்காக இருப்பாள் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா?

தாங்கமுடியாத கோபத்தினாலும் ரோஷத் தினாலும் ஹேமாவின் முகம் சிவந்தது. நாசி த்வாரங்கள் விரிந்து துடித்தன.

மாப்பிள்ளை என்ற பதவியை வகிப்பதினால் வேட்டகத்து மனுஷாளின்மேல் காரணமில் லாமல் குறைகூற உரிமை உண்டு என்பது உங்களுடைய எண்ணமா? எனக்கும் சுய மரியாதை உண்டு! ஆனால் நீங்கள் என்னை ஆயிரம் சொல்லுங்கள். கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்! என் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எனது பெற்றோர் களை என் காது கேட்கத் தூஷித்தால் என்னால் ஒருநாளும் பொறுக்கமுடியாது!" என்று கண் களில் ஜலம் துளும்பத் தொண்டையில் துக்கம் அடைக்க, ஆத்திரத்துடன், தன் பர்த்தாவிடம் புதுவருஷப்போர் தொடுத்துவிட்டாள் ஹேமா,

ஸத்யன் இதற்கெல்லாம் பயந்துபோய்விட வில்லை. தன் மனைவி ஆவேசம் பொங்கப் பொ றித்துத்தள்ளும் வார்த்தைகள் ஓயும்பரியந்தம், மௌனமாய், உள்ளுறச் சிரித்துக்கொண்டே, சும்மா இருந்தான். பிறகு "ஐயோ, அசட்டுப் பெண்ணே! தோற்றுவிட்டாயே! நேற்று நீ பூண்ட திட சங்கல்பம் என்ன? இன்று நீ நடந்துகொள்ளும்மாதிரி என்ன? முன் கோபத்தை விட்டு விட்டு இலக்ஷியப்பெண் என்று என்னிடம்பெயர் வாங்கப்போவதாக வீருப்புப்பேசியதை இவ்வளவு சீக்கிரம் மறந்துவிடலாமா? நான் உன்னைச் சோதிக்கும் பொருட்டு விளையாட்டாகக் கூறிய வார்த்

தைகளை நிஜமென்றெண்ணிப் பிரமாதமாய்க் கோபித்துச் சண்டைக்கு வந்துவிட்டாயே? புது வருஷப்பிறப்பன்று இப்படிப் பொறுமையை இழந்து கோபத்திற்குஇடம் கொடுத்தால், வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் அல்லவா முன் கோபியாக இருப்பாய்! அப்புறம் என் கதி என்ன?'' என்று பரிகாசம் செய்தான்.

ஹேமாவின் கோபஜ்வாலையில் எண்ணெயை ஊற்றியதுபோலிருந்தது ஸத்யனின் பரிகாஸப் பேச்சு! முன்னிலும் பன்மடங்கு ஆத்திரம் பற்றிக்கொள்ள, "ஆமாம், சொல்வதையெல்லாம் சொல்லி இடித்துக்காட்டிவிட்டு, விளையாட்டுக்காகச் சொன்னேன் என்று இப்பொழுது மழுப்பி, என்னை ஏமாற்றப்பார்க்கிறீர்களா? அவ்வளவு தூரத்திற்கு என் புத்தி மழுங்கிப்போய்விடவில்லை!'' என்று கண்ணீர் மடையைத் திறந்துவிட்டாள்.

''அட ராமச்சந்திரா! நான் ஏதோ வேடிக்கையாகச் சொல்லப்போக அதை விபரீதமாய் நினைத்துக்கொண்டு நல்லநாளும் கிழமையுமாய் இவ்விதம் கண்ணீர்விடத்தொடங்கிவிட்டாளே!'' என்று எண்ணித் தன் செய்கைக்குத் தன்னையே நொந்தவனாய், ஹேமாவைச் சமாதானப்படுத்துவதற்காக அவளருகில் நெருங்கினான் ஸத்யன்.

அதே சமயத்தில் வாசல்புறமிருந்து "ஸத்யா, ஸமயம் எப்படியோ? உள்ளே வரலாமா? விஷ் யூ எ வெரி ஹாப்பி நியு இயர்! (Wish you a very Happy New Year)'' என்று கூவும் தன் நண்பன் மணியின் குரலைக்கேட்டுச் சட்டென்று இரண்டடி பின்னால் வைத்து, வீதிப்புறம்போய்த் தன் நண்பனை வரவேற்றான் ஸத்யன்.

''வா அப்பா, மணி, ஏது? பண்டிகை அன்று லக்ஷணமாய் ஆத்தில் தங்காமல் வெளிச்சவாரி கிளம்பிவிட்டாயே!'' என்று கேட்டான்.

''அதையேன் கேட்கிறாய் போ! அவள் நேற்றுத் திடீரென்று கோபித்துக்கொண்டு பிறந்தகத்துக்குக் கிளம்பிப்போய் விட்டாள். ஐந்து மைல் தூரத்தில்தானே இருக்கிறது. அவள் பிறந்தகம். பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தாள், நீட்டினாள் கம்பி! இன்றைக்குப் பண்டிகைச் சாப்பாடு உங்களகத்தில்தான், அதாவது, உனக்கு ஆக்ஷேபணை ஒன்றும் இல்லாவிட்டால்?'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் விடை பகர்ந்தான் மணி.

''நன்றாயிருக்கிறது நீ பேசுவது! ஆக்ஷேபணை என்னடா? உனக்கு இல்லாத சாப்பாடா? அதிருக்கட்டும். என்ன நடந்தது? கோபித்துக்கொண்டு பிறந்தகத்திற்குப் போய்விடும்படி அப்படி என்ன பெரிய தவறு செய்துவிட்டாய் நீ?''

''பார்க்கப்போனால் உப்புக்கல் பெறாத விஷயம் அப்பா! நேற்று மத்யானம் இருவரும் ஏதோ பழையகதைகளை எல்லாம் பேசிக்கொண்டிருந்தோம். பேச்சுவாக்கில் விளையாட்டாக 'உங்கப்பா கல்யாணத்தின் பொழுது எனக்கு வைரமோதிரம் பண்ணிப் போடுவதாகப் பெருமை அடித்துக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியில், கீரை விதை அளவில் மூன்று புஷ்பராகக்கற்களை வாங்கி மோதிரம் கட்டிப்போட்டு விட்டு என்னை ஏமாற்றிவிட்டாரேடீ!' என்று கேட்டேன். இத்தனைக்கே பொறுக்கவில்லை அவளுக்கு. 'எங்கள் அப்பாவைத் தூஷிக்க நீங்கள் யார்? நீங்கள் பார்க்கும் வக்கில் குமாஸ்தா வேலைக்கு இதைவிட உயர்ந்ததாகச் செய்வார்களோ! நொட்டைச்சொல்லைப் பார்க்கவில்லை!' என்று இன்னும் கண்டபடி இரைந்து சண்டை சண்டையாய்பிடித்தாள். நான் எத்தனையோ சமாதானம் கூறிக் காலில் விழாத தோஷமாய், மன்னிப்புக் கேட்டுக்கொண்டும் அவள் கோபம் தணியவே இல்லை. மூட்டையைக் கட்டிக்கொண்டு அம்மாவகத்திற்குப் போய்விட்டாள்.'' என்றான் மணி.

வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் மனதிற்குள்ளேயே "இங்கேயும் இப்பொழுது கிட்டத்தட்ட அதே நிலைமைதாண்டாப்பா ஏற்பட்டிருக்கிறது'' என்று நினைத்துக்கொண்டான் ஸத்யன்.

மணி மேலும் தொடர்ந்து "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிடா ஸத்யா. நல்ல கல்வியறிவும் விவேகமும் உள்ள பெண்ணைக் கைப்பிடித்து இருவரும் அன்யோன்யமாய் வாழ்ந்து வருகிறீர்கள். என் தலைவிதி, எழுத்து வாசனையே அறியாத ஒரு முட்டாள் மனைவியை கட்டிக்கொண்டு மாரடிக்கும்படி ஆகிவிட்டது. எடுத்ததுக்கெல்லாம் கோபம் வந்து புலு புலு என்று சண்டைக்கு வந்து விடுகிறாள், அதுதான் நான்கண்ட சுகம். பூர்வஜன்மக்ருதம் பாவம் வியாதி ரூபேண பீட்யதே!' என்று மாற்றிச் சொன்னால் நன்கு பொருந்தும்'' என்று மிகுந்த அலுப்புடன் கூறினான்.

''இங்கே சற்று வந்துவிட்டுப் போறேளா?'' என்று உள்ளே இருந்தபடி இனிய குரலில் தன் கணவனைக் கூப்பிட்டாள் ஹேமா.

ஸத்யன் வந்தான். "ஹேமா, என்னை மன்னிக்கமாட்டாயா? நான் சொன்னது தப்பு. பண்டிகை நாளில் உன் மனசை இப்படி வருத்தப்படுத்திவிட்டேனே என்று என் மனசு கிடந்து தவிக்கிறது'' என்றான் பரிவுடன்.

'இல்லையில்லை! மன்னிப்புக் கேட்கவேண்டியவள் நான்தான். நீங்கள் அல்ல! உங்கள் சினேகிதர் கூறியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்குப் புத்தி வந்துவிட்டது, உங்கள் சினேகிதர் மனைவிக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அவள் படிக்காத முட்டாள். நான் படித்த முட்டாள்! அவ்வளவுதான். இலை போட்டுவிடுகிறேன். உங்கள் சினேகிதரைக் கைகால் அலம்பிக்கொண்டு வரச்சொல்லுங்கள். இதைச்சொல்லத்தான் கூப்பிட்டேன்'' என்றாள் ஹேமா.

''என் கண்ணே!,' என்று பிரேமை பொங்கக் கூறி ஹேமாவின் மிருதுவான கன்னங்களைப் பற்றி அசைத்தான் ஸத்யன்.

# சிதைந்த கனவு

"விஜயஸ்ரீ"

தையல் வேலையில் கவனத்தைச் செலுத்திக் கொண்டு இருந்த செண்பகம் தையற் சாமான்களைக் கீழே வைத்துவிட்டு விரல்களைச் சொடுக்கிவிட்டுக்கொண்டாள். அவளுடைய கண்கள் அப்பொழுதுதான் முடிந்திருந்த ஒரு சிறு சொக்காயின்மேல் படிந்தன. முகத்தில் புன்னகையின் சாயல் தோன்றிமறைந்தது.

சற்றுத் தூரத்தில் பேப்பர் படிப்பதில் முனைந்திருந்த தன் கணவனின் பக்கம் திரும்பி, "ஏன்னா!" என்றாள்.

ராமஸ்வாமி பேப்பருக்குள்ளிருந்து தன் மனைவியை எட்டிப்பார்த்து, "என்ன" என்று கேட்டான்.

"இந்தச் சொக்காய் எப்படி யிருக்கு?"

அவளுடைய கைகள் அச்சிறு சட்டையைத் தூக்கிக்காண்பித்தன.

"பேஷாயிருக்கு; குஷியாயிருக்கு; ஜிலுஜிலுன்னு இருக்கு. யாருக்கு அது?"

"என்னவோ தெரியாததுமாதிரி பாசாங்கு பண்றேளே. எல்லாம் சைலாவுக்குத்தான்"

"இல்லே, கோபுவுக்குன்னு நெனச்சேன்"

ராமஸ்வாமி தனக்குள் சிரித்துக்கொண்டான். செண்பகத்திற்கு இவ்வாறு வேடிக்கை காட்டுவதில் அவனுக்கொரு தனிப்பட்ட திருப்தி.

அச்சிறு சட்டையை ரேடியோவின்மேல் வைத்துவிட்டு உள்ளே எழுந்து சென்றாள் செண்பகம்.

கையில் ஒரு செலுலாயிட் பொம்மையுடன் தன் கணவனை நெருங்கினாள்.

"அழகாயிருக்கே பொம்மை. இது யாருக்கு?"

"எல்லாம் சைலாவுக்குத்தான்"

ராமஸ்வாமி பதில் பேசவில்லை. அருகிலிருந்த பீரோவைத் திறந்தான். அதிலிருந்த அட்டைப்பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு பீரோவை மூடிவிட்டான். செண்பகம் அவனை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அதுக்குள்ளே என்ன?"

"இதோ தெரியறது" என்று சொல்லி அப்பெட்டியைத் திறந்தான். அதற்குள் பலவிதமான பொம்மைச் சாமான்கள் நிரம்பியிருந்தன. பொம்மை மோட்டார்கார் ஒன்றை எடுத்து முடுக்கித் தரையின்மேல் விட்டான். கிர்ரென்று அறையைச் சுற்றிச் சுற்றி வந்தது பொம்மை மோட்டார். குருவிக்காரன் போன்றிருந்த ஒரு பொம்மையை முடுக்கிவிட்டான். கையிலிருந்த ஜாலராவைத் தட்டிக்கொண்டு குதிக்க ஆரம்பித்துவிட்டது அது.

செண்பகம் இதையெல்லாம் பார்த்தாள். தரையில் ராமஸ்வாமிக்கருகில் உட்கார்ந்துகொண்டாள்.

"இதெல்லாம் யாருக்காம்?"

"கோபுப் பயலுக்குத்தான்."

"ஒண்ணுகூட சைலாவுக்கில்லையா?"

"ஊ ஹூம். ஸரோஜாவுக்குத்தான் குடுப்பேன். அவதானே அவனுக்குத் தோழியா இருக்கப்போறா!"

"என்னமோ போங்கோ. இந்த மாதிரி பாரபக்ஷம் காட்டக் கூடாது."

"நீ காட்டலியா? சைலாவுக்குத் தெச்ச சட்டேலே ஒண்ணு கூட நீ கோபுவுக்குத் தரலியே"

"உங்க பேச்சு எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவேயில்லே"

"பிடிக்காப்போனா போறது."

அப்பொழுது வாசலில் "பூச்செடி! பூச்செடி!!" என்று கத்திக்கொண்டு ஒருவன் சென்றான்.

"ஏய் பூச்செடி, இங்கே வா" என்று கூப்பிட்டாள் செண்பகம்.

பூச்செடி (!) வந்தது.

"ரோஜாச்செடி இருக்காப்பா?"

"இருக்கும்மா"

அழகிய மண்தொட்டியிலிருந்த ரோஜாச்செடி கைமாறியது. ராமஸ்வாமியின் பர்ஸில் ஒரு ரூபாய் குறைந்தது!

"இது என்னத்திற்கு?" என்று கேட்டான் ராமஸ்வாமி.

"என் சைலாவுக்குத் தலெலே வெச்சுக பூ வேணுமோல்லியோ, அதுக்குத்தான்."

ராமஸ்வாமி சிரித்து விட்டான். ஏட்டிக்குப் போட்டியாக அல்லவோ இருக்கிறது—கோபு

வுக்கு ஒரு சாமான் வாங்கினால் சைலாவுக்கு இரண்டு சாமான் கிடைக்கிறது.

“ஆனால் ஸரோஜாவுக்கு? - ஒன்றுமில்லையா? செண்பகம் அதோபார்” என்று சுவரைச் சுட்டிக்காட்டினான் ராமஸ்வாமி. செண்பகம் பார்த்தாள். தன் கோட்டுப்பைக்குள் இருந்து பூப்பந்து ஒன்றை எடுத்துத் தரையில் போட்டான். அது உருண்டு வந்து செண்பகத்துக்கருகில் நின்றது. அதை ஆசையுடன் எடுத்துக் கொண்டாள் அவள்.

“சைலாவுக்குத்தானே?”

“ஆசெயெப் பாக்கலே ஆசெயெ. பந்து கோபுவும் ஸரோஜாவும் விளையாட. சுவரில் மாட்டியிருக்கு பார். அந்த பாட் (Bat) டை அவா ரெண்டு பேரும் விளையாடத்தான் வாங்கினேன். உன் சைலாவுக்கில்லே ஒண்ணும்”

“இந்தப் பித்த பாட்டும் பந்தும் இல்லாட்டா சைலா ஒண்ணும் குறஞ்சி போயிடமாட்டா”

இதற்கு மேல் விளையாட ராமஸ்வாமி விரும்பவில்லை. மனைவியின் கண்களில் துளித்த கண்ணீரைக் கண்டு கேலிப்பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

“செண்பகம், செண்பகம்! இந்த மாதிரியெல்லாம் நீ மனசைக் கஷ்டப் படுத்திக்கக் கூடாது. என் கோபு உன் கோபுதானே. உன் சைலா என் சைலா இல்லையா? அசடே! அழாதே, ஸரோஜா வர நேரமாகி விட்டது. அவெ எதிரிலே இந்த மாதிரியெல்லாமிருந்தா குழந்தை ரொம்ப கஷ்டப்படும். கண்ணைத்துடைச்சுக்கோ” என்று கூறி அன்புடன் அவளுடைய தலைமயிரைக்கோதி விட்டான்.

“உங்களுக்கு வேடிக்கையெ எதோடே நிறுத்தணும்னே தெரியறதில்லே. என்னமோ பகவான் என் தலெலெ இந்த மாதிரி எழுதியிருக்கான். அது நான் பண்ணினபாவம்” என்று வருத்தப்பட்டாள் செண்பகம்.

“இதோ பார் செண்பகம், மனசை வீணாகக் கெடுத்துக்காதே. நான் எதுக்காக உழைக்கிறேன்? எல்லாம் உனக்கும் சைலாவுக்கும் கோபுவுக்கும் ஸரோஜாவுக்கும்தானே?”

“என்ன எதுக்கெடுத்தாலும் ஸரோஜா ஸரோஜா ஸரோஜா தானா? மீதியெல்லாம் மனுஷாளா தோணலியா?”

“நீயேன் வரவர இந்த மாதிரி ஆகிவிட்டே? ஸரோஜா உன்னெ என்ன பண்ணா? பாவம்! தேமேனு அவ உண்டு அவ பள்ளிக்கூடப் பாடம் உண்டுனு இருக்கா. அவளெ மட்டும் ஒண்ணும் கரிக்காதே; நமக்குத்தான் அடுக்காது.”

அப்பொழுது பாதசரம் ஒலிக்க, புத்தகத்தைக் கைசிவக்கச் சுமந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் சரோஜா, அவளுடைய குழந்தை முகம் வியர்த்திருந்தது, முத்து முத்தாக வியர்வை அரும்பி முகத்தில் பரவிக்கொண்டிருந்தது, ஸரோஜாவுக்கு ஒரு புது அழகையே கொடுத்தது. ஒரு வினாடியும் ஒரு பொருள்மீதும்நிலைத்து நிற்காத பார்வை; நல்ல சிவப்பு.

“மாமி! இன்னிலேந்து பள்ளிக்கூடம் சாத்திடரா” என்று கூறிக்கொண்டே தன் புத்தகங்களை அடுக்கி வைத்தாள் குழந்தை.

“சரி இனிமே வீட்டிலே ஊட்டி தான்” என்றாள் செண்பகம். அவளுடைய குரலில் சிறிது வெறுப்பும் தொனித்தது.

“ஸரோஜா! இங்கே வாம்மா” என்று அன்பொழுகக் கூப்பிட்டான் ராமஸ்வாமி. ஸரோஜாவும் தன் மாமாவிடம் போனாள். கைக்குட்டையால் அவளுடைய வியர்வையைத் துடைத்தான். ரோஜாப்பூப் போன்ற கன்னங்களை முத்தமிட்டு இன்னும் சிவக்க வைத்தான்.

“செண்பகம்! அசல் அவஅம்மா தான். இல்லே?” செண்பகம் பதிலே பேசவில்லை. தலையசைத்தாள்.

“ஸரோஜா! உனக்குச் செருப்பும் குடையும் வாங்கிக் குடுத்திருக்கேனே. அதில்லாமெ ஸ்கூலுக்குப் போயிட்டு வரியே. உடம்புக்கு ஆகாதும்மா.” என்று ஸரோஜாவுக்குப் புத்திமதி கூறினான் ராமஸ்வாமி.

மாமாவின் அணைப்பில் ஸரோஜா கொஞ்சிக்கொண்டிருந்தாள். ராமஸ்வாமியும் அவளுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு இருந்தான். இது செண்பகத்திற்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை.

ஸரோஜாவைக்கண்டால் இப்பொழுதெல்லாம் செண்பகத்துக்கு எரிச்சல்தான். முன்பொரு சமயம் அவள் ஸரோஜாவை உயிரினும் அருமையாக நேசித்தாள். ஆனால் இப்பொழுது அவளுடைய நெஞ்சில் வெறுப்புத்தான் மிஞ்சியிருந்தது.

பல வருஷங்களுக்கு முன். வாசலுக்கு அருகில் இருந்த ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு தெருவைக் கவனித்துக்கொண்டிருப்பாள் செண்பகம், அப்பொழுது பெண்மையின் அழகுச்சிகரம் என்றே அவளைச் சொல்லலாம்.

காலையில் சமைத்ததனால் அவள் களைப்படைந்திருப்பாள். களைப்பைப் போக்கிக் கொள்ள மத்தியானம் கொஞ்சநேரமாவது கண்மூடுவாளா? அதுதான் கிடையாது மத்தியானம் பள்ளிக்கூடமணி எப்பொழுது அடிக்கும் என்று காத்துக்கொண்டு ஜன்னலருகில் பதுமைபோல அமர்ந்திருப்பாள். “டண்டண்” என்று பள்ளிக்கூடத்தின் மணி ஒலிக்கும்.

அத்துடன் செண்பகத்தின் உள்ளமும் துள்ளிக் குதிக்கும். மத்தியான நேரம் சாப்பிடுவதற்காகப் பள்ளிக்கூடக் குழந்தைகள் வீட்டினெதிரே தெருவில் செல்லும்.

அந்தக் குழந்தைகளுக்குத்தான் என்ன சந்தோஷம்! கொஞ்சநேரமாவது ஆட்டுக் கணக் கணக்கும், தமிழிலக்கணமும் இல்லாமல் இருக்கலாமே என்று அவைகள் மலர்ந்த முகங்களுடன் தங்கள் தங்கள் வீட்டுக்குச் செல்லும். என்னதான் பேச இருக்குமோ? வளவளவென்று பேசும். கணீரென்று சிரிக்கும். பாதசரங்கள் ஒலிக்க ஓடும். வளையல்கள் குலுங்க நடக்கும். அரிசிப்பற்கள் தெரியப் புன்சிரிப்புச் சிரிக்கும். சில குழந்தைகள் பாடவிஷயமாகப் பேசிக்கொண்டு போகும். இன்னும் சில குழந்தைகள் மாலை நேரத்தை எவ்வாறு கழிக்கலாம் என்று பிளான் செய்துகொண்டு போகும். சில குழந்தைகளுடைய நெற்றியில் கவலைக்கோடுகள் இருக்கும். இன்னும் சில குழந்தைகளோ கவலை என்பதையே அறியாமல் சிரித்துச்சிரித்துப் பேசும்.

இவைகளையெல்லாம் பலகணி வழியாகப் பார்ப்பாள் செண்பகம். அவளுடைய இளம் உள்ளத்தில் எண்ணங்கள் குமுறி, அலை அலையாக எழும்; விழும்; எழும்; சில வேளைகளில் பிரளய காலத்தில் தோன்றும் பிரசண்ட மாருதம்போல் அவளுடைய மனதில் புயல் வீச ஆரம்பித்துவிடும். பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரைக்கண்டு தனக்கு அம்மாதிரி குழந்தைகள் இல்லையே என்று வருத்தப்படுவாள். கண்களில் கண்ணீர் தளும்பி, தாடையிலே வழியும் அப்பொழுது அவளுடைய கணவன் வருவான்.

"செண்பகம் செண்பகம்! ஏன் அழறே?" என்று அன்புடன் கேட்பான் ராமஸ்வாமி. அவள் பதில் பேசமாட்டாள். பலகணி வழியே குழந்தைகளைப் பார்த்துக்கொண்டே இருப்பாள்.

அவளுடைய உள்ளத்தில் மிதந்து செல்லும் உணர்ச்சி வெள்ளத்தை ராமஸ்வாமி அறிவான்.

"செண்பகம்! நாமென்ன செய்வது? எல்லாம் கடவுள் செயல். நமக்குக்குழந்தையில்லை. நாமென்ன செய்வது?" என்பான் தன் மனைவியைத்தேற்றும் எண்ணத்துடன். அவள் விசித்து விசித்து அழுவாள். அவன் என்ன செய்வது என்றறியாமல் தவிப்பான்.

இப்படி ஒரு நாள் தவிக்கையில் ஒரு யோசனை உதித்தது. உடனே தன் மனைவியிடம் சென்று, "செண்பகம்! பள்ளிக்கூடச் சிறுமிகளை நம் அகத்திற்கு வந்து விளையாடச்சொல்" என்று கூறினான்.

அந்தயோசனை அங்கிகரிக்கப்பட்டது. மறுநாளிலிருந்து பல சிறுமிகள் ராமஸ்வாமியின் அகத்திற்கு வந்து விளையாடினர்; சென்றனர். வீடு குதூகலமாய் இருந்தது. கலகலவென்ற பேச்சுடன், செண்பகத்தின் மகிழ்ச்சியும் கூடி அகத்திற்கு ஒரு மங்களகரத்தை அளித்தது. தன் குழந்தைகள் போல் அக்குழந்தைகளிடம் நடந்துகொண்டாள் அவள். அவர்களுக்குக் பட்டாணி கடலை வாங்கிக்கொடுப்பாள். சில வேளைகளில் மரபாச்சிகளும் மண் சொப்புக்களும் வாங்கிக்கொடுபபாள். தலை மயிரை விதம் விதமாக வாரி முடிப்பாள். மல்லிகையும் கனகாம்பரமும் சூட்டுவாள். சிறுமியோடு சிறுமியாய் மண்வீடு கட்டுவாள். சண்டையிடுவாள். கண்ணாமூச்சி விளையாடுவாள். சிறுமிகள் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்று பிடிக்க வேண்டிய சிறுமிக்குச் சொல்லிக்கொடுப்பாள். குழந்தைகள் கத்தும்போது தானும் கத்துவாள். இப்படியாக அவள் தாய் மனம் பிள்ளையில்லாப் பெருங்குறையை மறந்து ஆனந்தத்தில் ஈடு பட்டது.

இப்படியிருக்கும்போதுதான் இன்னொரு சந்தோஷமான நிகழ்ச்சி நடந்தது. ஆம், துயரத்திலும் இன்பம் உண்டுதான்! ஏழ்மையில் அடிபட்டு வைதவ்யக்கோலம் பூண்டிருந்த ராமஸ்வாமியின் தங்கை மரணமடைந்தாள். அவளுடைய மரணத்தின்போது ராமஸ்வாமிசெண்பகம் இருவருமே அவளுடைய பக்கலில் இருந்தனர்.

"நீ தான் ஸரோஜாவைக் காப்பாத்தணும்; அனாதையான அவளுக்கு நீதான் தகப்பன்; செண்பகம் தான் தாயார். எங்கேயாவது ஒரு ஏழைக்கு அவளைக்கலியாணம் செய்து கொடு, அது போதும்" என்று சொல்லித் தன் மகளை ராமஸ்வாமியிடம் ஒப்புவித்தாள் அவள்.

சந்தோஷத்துடன் ஸரோஜாவைக் காப்பாற்றும் பொறுப்பை ஒப்புக்கொண்டான் ராமஸ்வாமி. செண்பகமும் சந்தோஷப்ட்டாள். பாலைவனத்திலே—மணற்காடு சூழ் பாழ்வனத்திலே— பசுமையான புல்லைக் கண்ட ஒட்டகம் அடைந்த மகிழ்ச்சி சிறியது செண்பகம் கொண்ட ஆனந்தத்துடன் ஒப்பிடப்படும்போது. ஸரோஜா ராமஸ்வாமியின் புத்திரி ஆனாள்; செண்பகத்தின் செல்லக் குழந்தையானாள். பிள்ளைப்பேற்றையே அறிந்திராத அவள் புதையல்போல் ஸரோஜாவைக் காப்பாற்றினாள்.

ஸரோஜாவுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கப்பட்டன. குறைவுஎன்பதே கிடையாது தாயைப்பிரிந்த துக்கத்தால் அவள் கவலையுற்று இருந்தாள், சில நாட்களில் மாமியின் சைத்யோபசாரத்தாலும், மாமாவின் அணைப்பினாலும், அம்மாவை மறந்தாள். "மாமி" ஜபம் ஆரம்ப மாகிவிட்டது.

எதெடுத்தாலும் "மாமி! மாமி!!" என்ற கூச்சல்தான். சிரிப்பும் கும்மாளமும்தான்

தன் மாமியே உலகம் என்று நம்பினாள் ஸரோஜா. அதற்கேற்ப மாமியும் புதிய புதிய பக்ஷணங்கள் செய்துகொடுத்தாள். நவநவமான நகைகள் செய்து அணிவித்தாள். பருத்தி, பட்டு ஆடை வாங்கிக் கொடுத்தாள். நவநாகரிக உருவங்களாகத் திகழ்ந்த பொம்மைகள் விளையாடுவதற்குக் கொடுத்தாள். வர்ண ஜாலங்கள் நிறைந்த கதைப் புத்தகங்கள் வாங்கிக்கொடுத்தாள். விதவிதமான வளையல்கள் ஸரோஜாவின் குஞ்சுக் கைகளை அலங்கரித்தன.

ஸரோஜாவுக்கு மாமி இல்லாமல் பொழுது போகாது. மாமிக்கு ஸரோஜா இல்லாமல் போனால் உலகமே இருண்டுவிடும். சற்று நேரம் கழித்துப் பள்ளிக்கூடத்திலிருந்த ஸரோஜா வந்தால் ஒரு புகார்தான்.

"என்ன ஸரோஜா! இவ்வளவு நாழி வெளிலே இருக்கலாமாம்மா? எங்க மனசு எப்படி அடிச்சுக்கறது தெரியுமா? இனிமே பள்ளிக்கூடம் விட்ட உடனே வந்துடு" என்று சொல்வாள் மாமி.

குழந்தையை யாராவது வெறித்துப் பார்த்தால் செண்பகம் திருஷ்டி சுத்திப்போடுவாள். கற்பூர ஒளியில் மந்த ஹாஸ நகையுடன் "ஏன் மாமி இது?" என்று ஸரோஜா கேட்டால் "எல்லாம் பொன்னான மேனி கறுக்காமலிருக்கத்தான்" என்று சொல்லிக் குழந்தையின் முகத்தில் தன் பத்து விரல்களையும் வைத்துத் திருஷ்டி கழிப்பாள்,

இவ்வாறு எவ்வளவோசெல்லமாக வளர்ந்து வந்த ஸரோஜாவின் இன்பத்திற்கும் ஒரு முடிவு வந்துவிட்டது.

ஒரு நாள் செண்பகத்திற்குத் தலை சுற்றியது' வாந்தி வந்தது. ஒரு நாளுங் காணாத புதுமையாயிருக்கவே லேடி டாக்டர் வரவழைக்கப்பட்டார்.

ராமஸ்வாமிக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை! ஒரு தகப்பனுருடைய கர்வத்துடன் அவன் மார்பை ஒரு முறை பார்த்துக்கொண்டான். கண்ணாடியின் முன் நின்றுகொண்டு காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டான்.

ஆம், செண்பகம் தன் வயிற்றில் ஒரு குழந்தையைச் சுமந்துகொண்டு இருந்தாள். சில சமயங்களில் "குவா குவா" என்று கத்தும் வாண்டுப்பயலுக்குத்தான் தகப்பனாகப்போகிறோம் என்ற நினைவு வந்தவுடன் ராமஸ்வாமி கற்பனையுலகில் தங்கு தடையின்றித் திரிய ஆரம்பித்துவிட்டான். தன் மனைவியின் வயிற்றில் பிறக்கப்போகும் குழந்தைக்குக் கோபு என்றுதான் பெயரிடுவானாம்! அவனுடைய கற்பனை அத்துடன் நின்றுவிடவில்லை. கோபு விளையாடுவதற்குச் சாமான்கள்வாங்கி வரக்கூட ஆரம்பித்துவிட்டான்!

செண்பகமோ தான் தாயாராகப்போகிறோம் என்ற நினைவில் இன்பத்தேன் மாந்தி ஸ்வப்பன ஸஞ்சாரம் செய்தாள். அவள் பட்ட மனக்கஷ்டங்கள் கடைசியில் விடியப்போகின்றன! இனிமேல் அவள் பிறர் குழந்தைகளுக்காக அலையவேண்டியதில்லை. இன்னும் சில மாதங்களில் வீட்டை மங்களமாக்க ஒரு பெண் குழந்தை பிறக்கும், அதற்கு என்ன பெயரிடலாம்? சைலா—அதுதான் அக்குழந்தையின் பெயராக இருக்கும்! அக்குழந்தைக்குச் சின்னஞ்சிறு சொக்காய்கள் தைக்க ஆரம்பித்து விட்டாள் இப்பொழுதிலிருந்தே! இன்னும் எத்தனையோவிதமான தாயுள்ளத்தின் அன்பின் ஆழத்தை காண்பிக்கும் சிறு சம்பவங்கள் எவ்வளவோ உண்டு; கணக்கிலடங்கா.

மெள்ள மெள்ள ஸரோஜா மாமியின் உள்ளத்திலிருந்து பெயர ஆரம்பித்துவிட்டாள். மாமி தன் இன்ப மயக்கத்தில் ஸரோஜாவை மறக்க ஆரம்பித்துவிட்டாள், அவளுக்குத்தான் சைலாவைப்பற்றிய நினைவே நாள் பூராவும் இருக்கிறதே!

ஸரோஜாவுக்கு இம்மாறுதல் ஆச்சரியத்தையே அளித்தது. தன்னை எதற்கெடுத்தாலும் கொஞ்சும் மாமி இப்பொழுது ஏன் மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்? ஏன் ஒன்றுமே பேசாமல் சிறிய சொக்காய்கள் தைப்பதும் அவற்றைப் பார்த்து மகிழுவதுமாகவே இருக்கிறாள்? அந்தச் சொக்காய்கள் தனக்கா! இல்லை, இல்லை, தனக்கு மிகவும் சிறியவாக இருக்குமே!

தன் சந்தேகத்தை நிவர்த்திசெய்ய ஒரு நாள் ஸரோஜா சிறு சொக்காய் தைப்பதில் ஈடுபட்டிருந்த தன் மாமியை நெருங்கி, "எனக்கு ரொம்ப சின்னதா இருக்கும்போலே இருக்கே சட்டை?" என்று கேட்டாள். என்றும் ஆசையுடன் அணைக்க வரும் மாமி இன்று, "எது தெச்சாலும் உனக்காகன்னு ஏன் நெனச்சுக்கறே?" என்ற வெடி குண்டைத் தூக்கிப்போட்டாள்.

"பின்னே எனக்கில்லையா இந்தச் சட்டை?" என்று கேட்டது குழந்தை.

"இல்லை சைலாவுக்குத் தெக்கறேன்."

"சைலா யார் மாமி?"

ஸரோஜா அதிகமாக எண்ணவில்லை; ஏதோ குழந்தைக்காகத் தைக்கிறாள் தன் மாமி என்று நினைத்தாள்.

ஒரு நாள் "பக்கத்தாத்து" அம்மாமியிடம், "மாமி சைலாவுக்குச் சட்டை தெக்கறு', என்று பேச்சு நடுவில் கூறினாள் ஸரோஜா. "சைலா யாருடி குட்டி?" என்று கேட்டாள் அம்மாமி.

"யாரோ எனக்குத் தெரியாது அம்மாமி" என்றது குழந்தை. அம்மாமி யோசித்துப் பார்த்தாள். அவளுக்கு எல்லாம் தெரிந்து விட்டது.

"ரொம்ப சின்ன சட்டையோ?" என்று கேட்டாள்

ஆமாம் ரொம்ப துலியூண்டு இருக்கு என்று கூறினுள் சிறுமி.

"உன்னுடை விளையாட அவொ வயத்திலே ஒரு பாப்பா பொறக்கப்போறதடி குட்டி" என்று அடுத்த அகத்து அம்மாமி சொன்னதைக் கேட்டவுடன் ஸரோஜாவின் குழந்தையுள்ளம் மகிழ்ந்தது. அவள் இனிமேல் தனியாய் இருக்கவேண்டாம்! பாப்பாவோடு விளையாடலாம். பாப்பாவுடன் 'நோக்கு நேக்குன்னு சண்டைபோடலாம். இடுப்பில் தூக்கி வச்சிண்டு ஓடலாம். இவற்றை எல்லாம் நினைத்துப்பார்த்த ஸரோஜா சந்தோஷப்பட்டாள்.

ஆனுல் சில நாட்களில் ஒரு விஷவித்து அவளுடைய வெள்ளை மனதில் போடப்பட்டது.

பக்கத்தாத்து அம்மாமி சொன்னுள். "இனிமே உன் ராஜாங்கம் எல்லாம் போயிட்டது. பாப்பாதான் மாமிக்குச் சர்வமும். தெரியுமோல்லியோ?" என்று

ஸரோஜா பாப்பாவைப்பற்றிச் சந்தோஷப்பட்ட நாட்கள் மறைந்தன. அதற்குப் பதில் பொருமை கொழுந்து விட்டெரிய வெள்ளை மனம் கருகியது.

தன் இன்பத்தை குலைக்கவந்த அந்த ராக்ஷஸப்பாப்பாவைப்பற்றி அவள்நினைக்கவும் அருவைப்பட்டாள். குழந்தையுள்ளத்தில் பல நிம்மதியற்ற ஆலோசனைகள் குவிய ஆரம்பித்துவிட்டன. பாப்பாவை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கி நின்றது.

தன் மனைவிக்கும் ஸரோஜாவுக்கும் இடையே இருந்த பாதலம் அகலுவதை ராமஸ்வாமி உணர்ந்தான். வருத்தப்பட்டான். என்ன இருந்தாலும் அனுதைக்குழந்தைதானே என்ற இளக்கரத்தால்தான் தன் மனைவி அவ்வாறு செய்கிருள் என்பதை அறிந்தான்.

செண்பகத்தின் பேச்சிலிருந்து சைலாவுக்காகப் பலி ஸரோஜா என்பதைத்தெரிந்து கொண்டான். செண்பகத்திற்கு ஸரோஜாவின் மேல் ஆசை எவ்வளவுக்கெவ்வளவு டிறைந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அந்த அனுதைப் பெண்ணிடம் ராமஸ்வாமிக்கு வாஞ்சை அதிகரித்தது,

மாதங்கள் உருண்டன, வீட்டிற்கு நர்ஸ் வந்துவிட்டாள் பிரசவத்தை முன்னிட்டு.

கடைசியில் கோபு ஜனிக்கப்போகிருன் என்றெண்ணிச் சந்தோஷப்பட்டான் ராமஸ்வாமி! சைலா பிறக்கப்போகிருள் என்று வேதனையிலும் இன்பம் கண்டாள் அவன் மனைவி!!

இவ்விருக்குமிடையே ஒரு குழந்தையின். மனம் இடிந்துகொண்டு வந்து பொருமைத்தீயால் சாம்பாகிய்து. பிராவ வேதனை கண்டு விட்டது. தலைச்சன் குழந்தையாகையால் செண்பகம் மிகவும் கஷ்டப்பட்டாள்.

"ஐயோ" "அம்மா"? "தாங்கமுடியல்லியே என்ற வேதனை மிகும் சொற்களைக்கேட்டுக் கொண்டு அடுத்தஅறையில் அமர்ந்திருக்கிருன் ராமஸ்வாமி. செண்பகமோ படுக்கையில் நெளித்துக்கொண்டு இருக்கிருள். ஸரோஜா மத்தியான தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாற். சிறிது நேரம் சென்றது.

பிரசவ அறைக்கு அருகில் நின்று கொண்டு நர்ஸுக்காகக் காத்துக்கொண்டிருந்தான் ராமஸ்வாமி. "கோபுவா? சைலாவா?"என்று அறிய அவன் மனம் பாடுபட்டது.

நர்ஸ் வெளியே வந்தாள்.

"என்ன?" என்று கேட்டான் ராமஸ்வாமி!

அதற்குச்சரியாக அங்கு ஸரோஜாவும் வந்து சேர்ந்தாள்.' குழந்தை இறந்துவிட்டது" என்ருள் நர்ஸ் முகததைத்தொங்கப்போட்டுக் கொண்டு.

"தாயார்?" என்று நடுக்கத்துடன் கேட்டான் தகப்பன்.

"பலஹீனமாக இருக்கிருள். ஆனுல் உயிருக்கு ஹானியில்லை" என்று சொல்லிவிட்டுப் பிரசவ அறைக்குள் மறுபடியும் நுழைந்து விட்டாள் நர்ஸ்.

தம்பதிகளின் மனக்கோட்டைகள் தகர்ந்தன. சைலாவும் இல்லை, கோபுவும் இல்லை!

ஆனுல்,........ஆனுல்! ஸரோஜா? அவள் இருக்கிருன். அவள்தான் தன குழந்தை. "அவள்' குழந்தை. இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்தான். தோல்வியடைந்த ராமஸ்வாமி.

ஸரோஜா விஷயத்தைக் கிரகித்துக்கொண்டாள். பாப்பா 'செத்துப்போனது' அவளுக்கு வருத்தம்தான். ஆனுல் அவள் இன்பத்திற்காகக் கடவுள் கொண்ட பலியல்லவா அது? வெற்றி தோன்ற மாமியைப் பார்க்கச் சென்ருள் ஸரோஜா.

தாய், தகப்பன் ஒருவருமற்ற ஒரு அனுதைப் பெண்ணிடம் காட்டிய அலக்ஷியத்திற்காகக் கடவுள் தன் இன்பக்கனவை-வைசலாவைச்சிதைத்து விட்டார் என்ற எண்ணம் செண்பகத்தின் மனதில் மேலோங்கி நின்றது.

ஸரோஜா அறைக்குள் நுழைந்தவுடன் செண்பகம் "வாம்மா வா!" என்று கூப்பிட்டு அருகில் உட்காரவைத்துக்கொண்டாள்.

"நீதாம்மா இனிமே எங்க குழந்தே" என்ருள் ஈனஸ்வரத்தில். ஸரோஜாவின் உள்ளமும் உருகிவிட்டது. மாமி பழைய மாமியாகித் தன்னிடம் அன்பு காண்பிக்கிருள் என்று அறிந்தவுடன் செண்பகத்திடம் இரக்கம் உண்டாயிற்று.

"மாமி!மாமி! நீங்க தான் என் அம்மா' என்று மனக்குழைவுடன் கூறி மாமியின் தலை மயிரைத் தடவிக்கொடுத்தாள் ஸரோஜா.

கோபுவின் விளையட்டுச் சாமான்களுடன் உள்ளே நுழைந்த ராமஸ்வாமியின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளித்தது.

# செல்லாத நாணயம்

ரா. விழிநாதன்.

பொதுவாக எனக்கு வெற்றிலை போட்டுக்கொள்ளும் பழக்கமில்லை. ஆனால் அன்றொருநாள், ஏனோ தெரியவில்லை. சைனா பஜார் வழியாகப் போய்க்கொண்டிருந்த பொழுது, என்னையறியாமலே கும்பகோணம் பீடாவிற்குப் பிரசித்திபெற்ற கடையண்டை என்கால் இழுத்துச் சென்றது. காந்த சக்தியால் இழுக்கப்பட்ட இரும்புத்துண்டைப் போல, கடை வாசலில் போய் நின்றேன்.

அவனுக்கு வெற்றிலை விற்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் நான் வெற்றிலைபோட்டுக்கொள்ளவேண்டுவதும் என்று கடைக்காரன் நினைத்தான் போலும். "எவ்வளவு பீடா தரட்டும் சார்" என்றான். அவனுக்குக் குறி வியாபாரத்தில்தானே. அவனது கடை வாசலில் போய் நின்ற எவனும் தன் உதட்டைச் சிவக்கச்செய்துகொள்ளாமல் நகருவதில்லை. அவன் என்னையும் அக்கோஷ்டியினருள் ஒருவராக நினைத்துவிட்டான் என்றால் ஆச்சரியப்படுவானேன்?

நான் சொன்னேன், இல்லை—இல்லை என் வாய் சொல்லிற்று 'ஒரு பீடா கொடும் என்று.

'புகையிலை'

'வேண்டாம்'

'வாஸனைச் சுண்ணும்பு, சீவல் ஏதாவது?"

'ஒன்றும் வேண்டாம்.'

வெற்றிலைப் பீடாவை வாங்கிவாயில் திணித்துக்கொண்டு 'பளபள' வென்று பிரகாசிக்கும் ரூபாய் ஒன்றை அவனது பித்தளைத் தட்டில், பையினின்றும் எடுத்து விட்டெறிந்தேன்.

ஸி. ஐ. டி. போலிஸார்கள் புரட்சிக்காரர்களை நோக்கும் பாவனையில் அவன் ரூபாயை உற்று நோக்கலானான் ரூபாயைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். தட்டிப் பார்த்தான். சுரண்டிப்பார்த்தான். காதினருகில் கொண்டு போய் அதன் ஒலியையும் கண்ணிற் கருகில் கொண்டுபோய் அதன் ஒளியையும் ஆராயலானான். இவ்வளவு நன்கு பரிக்ஷித்துப் பார்த்த பின் ரூபாயை என்பால் நீட்டி, 'வேறு ரூபாய் கொடுங்கள்' என்று கூறினான்.

'ஏன்' என்றேன் நான்.

'ரூபாய் செல்லாது' என்றான் அவன்.

'சரி' இந்தாரும் அப்படியானால் வேறு ரூபாய்' என்று கூறிய வண்ணம் பையில் கைபோட்டேன். ஆனால் பையில் ரூபாய் இருந்தால்தானே! ரூபாய்க்கு எங்குப்போவது பையில் ஒரு ரூபாயைத் தவிர—இதுவும் இந்தச்செல்லாத ரூபாயைத்தவிர-ஒரு செல்லாக்காசுகூட இல்லை. வெட்கத்தினால் என் காதுப்புறம் எல்லாம் 'குப்'பெனச் சிவந்துவிட்டது.

கடைக்காரன் எனது இப்பரிதாப நிலையைக்கண்டு புன்முறுவலுற்றான். அவனது அந்தப்புன்முறுவல்—

"பெரிய மனுஷன் மாதிரி கடைத்தெருவிற்குக் கிளம்பிவிட்டான், கையிலே காசில்லை. வெற்றிலைபோட்டுக்கொள்ள. ஆசையைப் பாரு ஆசையை. சீ இவனும் ஒரு ஆண் பிள்ளையா?' என்று ஏளனம் செய்வதுபோலிருந்தது.

சிறிது நேரம் சென்று நான் கடைக்காரனை நிமிர்ந்து நோக்கினேன். அப்பொழுதும் அவன் முகத்தில் அப்புன்முறுவல் தவழ்ந்தது.

"கடைக்காரரே! வேறுசில்லறை இல்லை' நாளைக்கு இவ்வழியே போகும்பொழுது கொண்டுவந்து தந்துவிடுகிறேனே" என்றேன்

வாய் வெற்றிலை விஷமாகத் தோன்றியது எனக்கு. அவன், 'அதெல்லாம் முடியாது' என்பானாகில் காலணாவிற்காக இப்பெரிய பட்டணத்திலே அவமானப்படுவதா? பரிதாபப்பார்வையில் கடைக்காரனைப் பார்த்தேன். அப்பொழுதும் அவனது அப்புன்முறுவல் மறையவில்லை. 'சார் காசைக் கொடுத்து விட்டு நகருங்கள். உங்களை யார் கண்டது? நாளைக்கு இந்தப்பக்கம் வருகிறீர்களோ இல்லையோ, எப்படி நம்புகிறது? காலணாவிற்காக உங்களை எங்கெல்லாம்நான் தேடுவது? அதெல்லாம் முடியாது' என்பதுபோலிருந்தது அவனது முகபாவம். எனது கண்களும் பூமியில் புதைந்துவிட்டன.

"அதெற்கென்ன பரவாயில்லை சார். என் காலணாவை எடுத்துக்கொண்டு நீங்கள் ஒன்றும் மாடிவீடு கட்டிவிடப்போவதில்லை. நானும் குடி முழுகிப் போவதில்லை. நாளைக்கே கொண்டுவந்து கொடுங்கள். போய் வாருங்கள்" என்றான் கடைக்காரன்.

'கடைக்காரரே. நீங்கள் தங்கமான மனுஷர். நாளைக்கு மறக்காமல் காசைக் கொண்டுவந்து தந்துவிடுகிறேன். கவலைப் படாதீர்கள்' என்றேன் நான்.

"இன்னும் எதற்காக விசாரப்படுகிறீர்கள்? உங்கள் கையில் இல்லையென்றால் நான் வேண்

டுமானுல் இரண்டு மூன்று தருகிறேன். தாராளமாய்க் கவலையின்றிப் போய் வாருங்கள்' என்ருன் அவன்.

சென்னையின் பேர்போன தெரு ஒன்றில் பேர்போகாத வீடு ஒன்று என்னுடையது. நான்மட்டும் தன்னந்தனியாக அதில் இருந்து வருகிறேன். 'தன்னந்தனி' என்பதைக்கேட்டு உங்களுக்கு ஏன் ஆச்சரியம் ஏற்படுகிறது? உலகில் எவ்வளவு பேர் தன்னந்தனியாக இல்லை? கொண்டி முடம், கிழம், குருடு என்று எவ்வளவோபேர் தனியாக இல்லையா? ஓகோ, ஆரோக்யசாலி, படித்தவன் 24 வயது நிறைந்த காளைப்பருவத்தினன். தனிமையில் இருக்கிறேன் என்கிறேனே என்று ஆச்சரியப்படுகிறீர்கள்? அது தான் எனது வாழ்வின் இரகசியம் என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

இரண்டு இரண்டரை வருஷங்களாகத்தான் நான் தனியாயிருக்கிறேன். அதற்கு முன்பெல்லாம் தாய் இருந்தாள். ஆம் அவள்தான் உறுதுணையாயிருந்தாள். அவள் உயிருடனிருந்தபொழுது என் கல்யாணத்தின் பொருட்டு. சிபாரிசுக்குமேல் சிபாரிசாக வந்துகொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் நான் திமிருடன் மறுதலித்து விட்டேன். அம்மாள் இறந்தபிறகு ஒரு பெண்வீட்டுக்காரனுவது எட்டிப்பார்ப்பதில்லை.

இன்னுமொரு முக்கியமான சிரமம் என்னவென்ருல் அப்பொழுதெல்லாம் கல்யாணத்தின் அவசியமே நன்கு புலப்படவில்லை. இப்பொழுதோ, அம்மா இறந்தபிறகு ஹோட்டல் சாப்பாடு—அதுவும் இந்த மாபெரும் யுத்தம் நடக்கும் சமயத்தில் ஹோட்டல் சாப்பாடு. என் வயிற்றில் 'கடபட' என்று இடிக்கவாரம்பித்துவிட்டது. "கடபட" சப்தத்தின் பயம் வயிற்றில் புளியைவேறு கரைக்கிறது. இந்த அனுபவமெல்லாம் ஏற்பட்டதும் தான் 'மனைவி' என்ருல் என்ன என்பது விளங்குகிறது.

மனைவியென்பவள் கடைத்தெருவிலோ, வழியிலோ; மாதமொரு புத்தகம்' போலக் கிடைத்துவிடுவாளாகில் அடியேன் வாங்கிக் கொள்வதில் முதற்பெயர் அடைந்துவிடுவேன். அதில் எனக்கு முதற்பெயர் கிடைக்காது என்று சந்தேகப்படுவீர்களாகில் நான் மூடனல்ல.

நான் ஒரு பரம ஏழை. தன்னைத்தானே அம்பலத்துக்குக் கொண்டு வருகிருனே. இவன், என்று ஏளனமாக நினைக்கக்கூடாது. நான் ஏன் எனது உண்மை நிலையை மறைக்க வேண்டும். மறைத்தால் யாராவது உடையோ, உணவோ கொடுத்துவிடப்போகிருர்களா? எனது ஏழ்மை நிலையை நான் இக்காலத்தில் மறைக்காமல் கூறிக்கொள்கிறேனே, அது என்னுடைய நல்லதனமல்லவா? நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இக்காலத்தில் எந்த முட்டாளாவது தன் தாரித்திரியத்தை வெளிக் காட்டிக்கொள்கிருனு?

ஒரு பெண்ணைப் பிடித்து எப்படிக்கொண்டு வருவது? பெண் என்பது காட்டிலுள்ள பறவையாகவோ, மிருகமாகவோ. இருந்தால் பிடித்துக் கூட்டில் அடைத்து இழுத்து வந்து விடலாம். ஆனுல் என்ன நம்நாட்டில், எல்லாவற்றிற்கும் பஞ்சம் வந்திருப்பது போலப் பெண்ணிற்கு பஞ்சம் வந்துவிட்டதா? சர்க்கரைப் பஞ்சத்தினுல் காப்பிக்குக் கருப்புக்கட்டியோ, வெல்லமோ போட்டுக்கொள்ளவில்லையா? அதேபோல கருப்போ, சிவப்போ, யுவதியாக மட்டும் கிடைத்துவிட்டால் சாப்பாட்டுக் கஷ்டத்தை நிவர்த்தித்துக்கொள்ளவாவது பிடித்துவந்துவிடலாமே. என்ற பெருத்த யோசனையில் ஆழ்ந்திருந்தேன்.

அச்சமயம் நண்பன் ராமு வந்து இன்றைக்கு 'ஸ்வீட்'டுடன் 'டீ' வாங்கித்தருகிருயா, ராமகிருஷ்ணுவில்! உனக்கு ஒரு ரொம்ப-ரொம்ப நல்ல செய்தி சொல்லுகிறேன்" என்ருன்.

'என்ன அப்பா நல்ல செய்தி?'

'உனக்கு ஒரு நல்ல பெண்டாட்டி பிடித்து விட்டேன். ரொம்ப அழகு, ரொம்ப நல்ல மனது, ரொம்ப-ரொம்ப -என்ன சொல்கிறது, போ. உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்'

'யாரப்பா அது?'

'சொல்லித்தான் ஆகணுமோ. அதெல்லாம் சொல்லி முடியாது. இப்பொழுதுதான் சொன்னேனே-சந்திர வதனம். அழகில் அரம்பை. சஞ்சல ஸ்வபாவத்தில்-உம்-உம் வரமாட்டேன் என்கிறது. வாயில், தொண்டையில் இருக்கிறது--'

"ராமு. வேடிக்கை விளையாட்டெல்லாம் மூட்டைகட்டிவை. விஷயத்தை விபரமாகச் சொல்லு.'

"சொல்லித்தான் ஆகணும் போலேயிருக்கிறது. சரி கேட்டுத் தொலை. அவளுக்கு இந்த ஊருதான். பேரு பத்மா. சம்பத்தின் தங்கை. பார்த்தஸாரதி அய்யங்காரின் பெண்' அவளை உனக்கு நன்ருகத்தெரியுமென்று நினைக்கிறேன்'

அவளையா? நன்ருகத்தெரியுமே அவயளோடேயா எனக்குக் கல்யாணம்? அவள் எங்கே! நான் எங்கே! அவளுக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாஸமாச்சே?"

ராமு சமயாசமயம் தெரியாமல் பரிகாசம் செய்கிருன் இன்னும் அவனுக்கு உலக அனுபவம் போதாது பத்மா என்னைக் கலியாணம் செய்துகொள்ள இசைவாளா! அவளது தாய் தந்தைதான் சம்மதப்படுவார்

களா? நானோ ஏழை. பத்மாவின் துணிமணி ஸ்நோ, க்ரீம், ஆகாரம் முதலியவைகளுக்காக என்னையே விற்றுக்கொள்ளவேண்டியதுதான், நடக்காத காரியம்.

'நல்ல செய்தியா இல்லையா? சொல்லு' இன்றைக்கு எனக்கு டீ உண்டாகிடையாதா?' என்று கேட்டான் ராமு.

'நீ சொல்வதெல்லாம் வெறும் பொய்'

'உனக்கு நான் சொல்வது எல்லாம் அப்படித்தான் தோன்றும். ஸம்பத்தே வந்து நேரில் சொன்ன பிறகு என்னிடமே சொல்வாய் பாரு' என்று கூறிவிட்டு ராமு சென்றுவிட்டான்.

இரவு பூராவும் பத்மாவைப்பற்றிய இன்பக்கனவில் எனது சித்தம் மூழ்கியது. ராமு கூறுவது நிஜம்தானா? முக்காலும் இருக்க முடியாது. ஏழேழு பிறப்பிலும் அவளை நான் அடையமுடியாது. ஒருகால் எங்கேயாவது பத்மா-பத்மா-பத்மா.........

இருக்கட்டும் இந்த ரூபாய்......... இந்த ரூபாய் யார் கொடுத்தது? ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறதே'' சிந்தனைத் தேர் பத்மாவின் கனவை விட்டு ரூபாயில் உருளவாரம்பித்தது,

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் மண்டையை உடைத்து மூளையைக் குழப்பிக்கொண்டபின் கடைக்காரன் — ஜவுளிக்கார ஸேட்—கொடுத்தது என்ற ஞாபகம் வந்தது. ஒரு ஜோடி வேஷ்டி எனக்காக வாங்கிக்கொண்டு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். ஜவுளிக்கிரயம் போக மீதி ஏழு ரூபாய் இரண்டணாக் கொடுத்தேன். ஆறு ரூபாய் இரண்டணா செலவழிந்துவிட்டது. மிஞ்சியது இந்த ரூபாய்தான்.

ஸேட் என்னை ஏமாற்றிவிட்டான். நாம் தான் ஏமாந்தோம். அப்பொழுதே ரூபாயைப் பார்த்து வாங்கியிருக்கவேண்டும், சிலர் பார்த்து வாங்குகின்றனர். சிலர் பார்க்காமல் வாங்கிப் பையில் என்னைப்போலப் போட்டுக்கொண்டுவிடுகின்றனர். உலகில் உள்ள அனைவரும் நாணயஸ்தர்களாயிருப்பார்களா அதற்கு?

ஹோட்டல் சாப்பாட்டிற்குப் பயந்து வீட்டுச்சமையல் ஆரம்பித்திருந்த என் தனிக்குடித்தனத்தில் பருப்புமில்லை, உப்பும் ஆய்விட்டது. கடைக்காரனோ கடனாகத் தரமாட்டான். பசிப்பிணியினால் மடியவேண்டியதுதான். இரவு 10-மணிக்கப்புறம் யாரிடம் போய் முகதலையாவது வாங்கி வருவது? சாமா சாயந்திரம் கட்டாயம் பணம் கொண்டுவந்து தருகிறேன் என்று சொல்லியிருந்தான். உலகமே புளுகு மோசம் நிறைந்த நாசகாரக் கும்பல்தானோ என்னவோ? சரி நடந்தது நடந்துவிட்டது. இம்மாதிரி பிழைகள் ஏற்படாவண்ணம் நாம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

அரைப்படி பருப்பும் ஒருபடி உப்பும் வாங்கியபின் கடைக்காரனிடம் மொத்தம் என்ன வாயிற்று? என்று கேட்டேன்.

'பதின்மூன்றரையணா' என்ற பதில் கொடுத்தான் அவன்,

'நாளைக் காலையில் சில்லறை வாங்கிக் கொள்ளேன்'

'அதெல்லாம் முடியாது ஸார். கடைசாத்தும் நேரம். இந்நேரத்தில் கடன் கொடுப்பது ஆகாது' என்று கூறிவிட்டான் அவன்.

'ராத்திரி வேளை, அந்த ரூபாயைத்தான் கொடுத்துப் பார்ப்போமே, ஒருகால் அவன் ஏமாந்துவிட்டால் என்ற சபலம்.

தன் வாழ்நாள் பூராவையும் உப்பு பருப்பு எண்ணெய் இவைகளை வியாபாரம் செய்து கழித்திருக்கும் கடைக்காரச்செட்டி ஏமாறுபவனாகத்தோன்றவில்லை. குடிசையைக் குபேர மாளிகையாக்கிய கோணப்பார்வையுள்ள மண்ணெண்ணெய் நாற்றம் வீசும் தேகத்தையுடைய செட்டியை 'ஏமாந்துவிடுவான்' என்று எண்ணும் நானல்லவா ஏமாந்தவன்.


சேலத்தில்

கல்யாணப்பட்டு ஜவுளி ரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

# ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

மிகக் கடினமான பரீக்ஷைக் கேள்விப் பேப்பரைக் கையில் பிடித்திருக்கும் மாணவனது உள்ளமும் உடலும் நடுக்கமுறுமே அதுபோலப் பையிலிருக்கும் ரூபாயைச் செட்டியிடம் கொடுத்துக்கொண்டிருக்கும் எனக்கும் நடுக்கமேற்பட்டது. செட்டியிடம்சென்றுகொண்டிருந்த பணம் என் தைரியத்தையும் பறித்துச் சென்றது. பரீக்ஷை ரிஸல்டில் தன் நம்பரைப் பார்க்கும்வரை மாணவனது உள்ளத்தில் ஏற்படும் துடிப்பிற்குச் சமானமாகக் கூறலாம் அதிருஷ்டத்தைச் செட்டியிடம் பரீக்ஷித்துக் கொண்டிருந்த எனது உள்ளத்தின் நிலையை. "இந்தப் பயல் கவனிக்காமல் இருக்கவேண்டுமே" என்ற ஆசையின் உத்வேகத்தை என்னவென்று உரைப்பது?

கடைக்காரன் தன் கோணல் பார்வையில் பரிகாசப் புன் முறுவலை வரவழைத்துக் கொண்டு என் சமீபமாகப் பணத்தைவிட்டு எறிந்து கூறலானான்: 'இதைச் செல்லவைக்க வேறு ஆளைப்பாருங்கள்! அதற்கு நானல்ல. சாமானை வைத்துவிட்டு நடையைக்கட்டுங்கள்"

'டண்' என்றொலித்துக்கொண்டு பூமியில் உருண்டோடி சுவரில்மோதி நின்றது ரூபாய். இப்பணத்திற்கு இவ்வளவு அவமானமா! துணி முடிப்பிலிருந்து சாமானை அவிழ்த்துக் கொட்டிவிட்டு வீட்டையடைந்தேன். வெட்கமும் வருத்தமும் சேர்ந்து சாப்பிடவும் விடவில்லை, தூங்கவும்விடவில்லை.

பொழுது விடிந்தது. சம்பத்து தன் களையான முகத்துடன் காக்ஷியளித்தான். "நீதான் பத்மாவைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்ன?" என்றான்.

'நிஜமாகவா'?

'ஆம் நீ சம்மதித்துவிடுவாயாகில் அப்பாவிடம் சொல்லி வெகு விரைவில் கலியாணத்தை முடித்துவைத்து விடுகிறேன்'

'இவ்வளவு சீக்கிரமாகவா?'

'ஆமாம். ஏன்? சுபகாரியமோ இல்லையோ! சீக்கிரத்தில் முடிவதுதான் நல்லது'

'ஆனால்'..................

'நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்' பணம், நகை, ஜவுளி எல்லாவற்றிற்கும் நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன்'

'வீட்டு மராமத்து வேலை கொஞ்சம் செய்ய வேண்டும். ஓடுமாற்றவேண்டும். சுண்ணாம்பு அடிக்கவேண்டும். கூடம், தாழ்வாரம், திண்ணை இவை தளவரிசை போடவேண்டும். இதற்கெல்லாம்?'

'எல்லாம் செய்து முடித்து விடலாம்'

'அவசரப்படுவானேன், எனக்கும் சிறிது யோசனை செய்து கொள்ள அவகாசம் கொடு.'

'யோசனையா? பத்மாவைக் கல்யாணம் செய்துகொள்ள யோசனையா ஹ- ஹ- ஹ யாரிடமப்பா யோசனை கேட்கப்போகிறாய்? கல்லினிடமா, கட்டிடத்தினிடமா, கூரையினிடமா? என்றான் சம்பத்து.

'அதைப்பற்றி உனக்கு என்ன?'

'முகூர்த்த நாள் அகப்பட வேண்டாமா?'

'சித்திரை மாஸம் தானே நடக்கிறது இப்பொழுது. இன்னும் ஆனி முப்பதும் இருக்கிறதே' அகப்படாமலா போய்விடப்போகிறது சம்பத்து?'

'அதெல்லாம் சரிதான் அப்பாவின் எண்ணம், அம்மாவின் அபிப்பிராயம் பத்மாவின் விருப்பம், எனது ஆசை எல்லாம் கலியாணம் சீக்கிரம் நடந்துவிட வேண்டுமென்பதே. அதனால் தான் சொல்லுகிறேன்?

'உனது இஷ்டம் சம்பத்து எனக்கு ஒரு வித ஆக்ஷேபனையும் இல்லை;'

எனது இந்தப் பெருமிதத்திற்கு யாதுகாரணமோ, தெரியவில்லை.

பத்மா! பத்மா! எனது கனவு நினைவாகி விடுமா? உன்னுடன் எனக்குக்கல்யாணம் நடந்து விடுமா? என் மனத்துள் இவ்வெண்ணம் இதுகாறும் எள்ளளவும் உதிக்கவில்லையே! ஆனால் இன்று நடந்த சம்பாஷணையை எப்படிமறப்பது? ராமுவேண்டுமானால் பொய் சொல்லியிருப்பான். ஆனால் ஸம்பத்து வார்த்தையைப்பொய்யென்று எப்படியுரைப்பது?

நான்—பத்மாவைப்பெறும் பாக்கியமுள்ள நான்—பாக்கியசாலிதான். ஸ்வர்க்கம், ஊர்வசி ரம்பை, லக்ஷ்மி, சரஸ்வதி எவரும் பத்மாவிற்கு நிகராக மாட்டார்கள். நான் சிறிதும் அவர்களைப் பொருட்படுத்தமாட்டேன், பத்மா அழகி. பத்மா, மனோரமா பத்மா, விதுஷி பத்மா, மெல்லியளால் பத்மா...பத்மா...பத்மா.....பத்மாதான் எரியும் ஒளிச்சுடர் எனக்கு. அவளது காதலின் சக்தியைக்கொண்டு உலகத்தில் நடவாததையும் நடத்திக்காட்டுவேன். 'கைஸை'ப்போல விஷமருந்தத்தயார் 'மணசூரை'ப்போல கழுவிலேறத்தயார் 'பர்ஹாதைப்போல மலையைக்கெல்லி நீரருவியை வரவழைக்கவும் தயார். 'மஜ்னு'வைப்போல பத்மாவிற்காகப் பித்தனாக வாழவும் தயார் பத்மா.........

பண மழை பொழிய ஆரம்பித்துவிடும் என் வீட்டில், பங்குனி மாதத்தில் மரத்தடியில் குலுங்கி உதிர்ந்திருக்குமே பாரிஜாத மலர்கள் அவைகளைத்திரட்டும் குழந்தைகளைப்போல நான் இருகைகளாலும் பணத்தைத்திரட்டி வாரியெடுப்பேன்.

பத்மா என்னை உயிருக்குயிராக நேசிப்பாள். அவளது காதலின் உதவியைக்கொண்டு நான் புத்துயிர் பெறுவேன். எனது கற்பனை புது ஒளி பெறும். எனது எண்ணங்களில் புதுமெருகு

ஏறும் எனது எதுகை மோனைகள் புதியஉருவம் அடையும். எனது போக்கே அலாதிப்புதுமையடையும். எனது எழுத்தாணி உலகத்தை அப்படியே அதிசயத்தில் ஆழ்த்திவிடும். நான் எழுதுவேன், நாவல் நாடகம், கதை, விமரிசனம், கட்டுரை, வியாஸம், கவிதை எல்லாம். நெப்போலியன் செங்கிஸ்கான் இவர்களைப் போல என் பெயரும் தமிழ் இலக்கிய உலகில் பிரசித்தி பெறும். இவ்வளவு எல்லாம் கனவு காண ஆரம்பித்து விட்டேனே! அட, இந்த ரூபாய்!

இந்த ரூபாய் மூன்று நாட்களாக என்னை விட்டு நகரமாட்டேன் என்கிறதே! செல்லவே செல்லமாட்டேன் என்கிறதே! ரூபாய் பார்ப்பதற்கு நன்றாகத்தானே இருக்கிறது! பிரகாசம் வட்டம் எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது! ஒருகால்...........

சப்தக்கட்டையோ? இல்லையே. 'டண்டண்' சப்தம் சரியாகத்தானே இருக்கிறது. இதைத் தவிர வேறென்ன வேண்டும். இந்தத்திமிர் பிடித்த மனிதர்கள் ஏன் இதை வாங்கிக் கொள்ள மறுதளிக்கிறார்கள்? எவ்வளவு நல்ல ரூபாய்?

இன்று எப்படியாவது செல்லவைத்தே தீருவேன். ஏன் செல்லாது. 'செல்லாது' என்று யார் சொல்கிறது?' செல்லாது' என்றால் இந்த ரூபாய் என்னிடம் எப்படி வந்தது? நான் என் வீட்டில் இந்த ரூபாயைச்செய்தேனா அதற்கு? இந்த ரூபாயும் எல்லா ரூபாய்களையும் போல நாணய சாலையில் தான் செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வளவோ கைகள் மாறி மார்வாடி 'ஸேட்.'டிடம் வந்திருக்க வேண்டும். வடிக்கட்டின அடுமுட்டாள்' என்று என்னைக் கண்டு, இதை என் கழுத்தில் கட்டிவிட்டான் அந்தக்காலாடி 'ஸேட்.' நானும் ஒரு முட்டாளைப்பார்த்து இன்று எப்படியாவது செல்லவைத்தே தீருவேன்.

இந்த யோசனையிலிருந்து, உலகத்தில் எந்த மாதிரியான மனிதர்கள் பணத்தைப்பரீக்ஷிக்காமல்' வந்தது ஆதாயம், என்று பையில் போட்டுக்கொள்ளக்கூடியவர்கள்! என்ற யோசனைக்குப் பாய்ந்தேன். வந்ததை வரப்பற்றுபவர்கள் வக்கிலும் மாப்பிள்ளையும் தான் என்று எனக்குப்பட்டது. கக்ஷியாடிப்பீஸ் கொடுக்க வழக்கிருந்தால் தானே நான் வக்கில்களை நாடுவதற்கு? எனக்கு மாப்பிள்ளையும் கிடையாது. முதலில் பெண்டாட்டி இருந்தால் அல்லவா மாப்பிள்ளை இருப்பான், இதையெல்லாம் யோசித்து என்ன பயன்?

'பாரத்கபே' மானேஜர் ரொம்ப சாது. நேர்மையானவர். சின்னஞ் சிறு குழந்தைகூட அவரை ஏமாற்றி விடலாமே! நம்மால் முடியாதா? கல்லை எறிந்து பார்ப்போம், மாங்காய் விழுந்தால் விழுகிறது, விழாவிட்டால் போகிறது! என்ற எண்ணத்துடன் ரூபாயை எடுத்துக்கொண்டு ஹோட்டல் பக்கம் சென்றேன்

மாலை டிபன் செய்யும் நேரம். ஹோட்டலில் நல்ல கூட்டம். மானேஜர் அறைக்குப்பக்கத்தில் நான்கு வட்ட மேஜைகள் இருந்தன. அம்மேஜைகளில் காலேஸ் மாணவர்கள் 'காபி' சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

காலேஜ் மாணவர்களுக்குக்குடும்பபாரமோ கவலையோ ஏது? கவலையின்றி அவர்கள் கேலிக்கூத்தில் ஈடுபட்டு விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டும், ஒருவரையொருவர் முதுகில் குத்திக்கொண்டும் 'காபி' அருந்திக்கொண்டிருந்தனர். மானேஜர் பயந்த ஸ்வபாவம் வாய்ந்தவரா! போனைக்கையில் எடுந்து 3.7,5- என்று சுற்றவாரம்பித்து விடுவார்.

375 என்பது மாம்பலம் போலீஸ்டேஷனின் போன் நம்பரோ என்னவோ எனக்கு அவ்வளவு திடமாகத்தெரியாது.

நடுவிலிருக்கும் மேஜையினருகில் கிடந்த நான்கு நாற்காலிகளில் ஒன்று காலியாயிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தபின் அந்த நாற்காலியில் அமர்ந்தேன்.

மற்ற மூன்று நாற்காலிகளிலும் அமர்ந்திருந்த வாலிபர்கள் சம வயதினர்கள். ஒரே வகுப்பில் படிப்பவர்களாகவும் இருக்கலாம் என நினைக்கிறேன். ஒவ்வொருவித கிராப்பு, முகம்-கிளீன் ஷேவ், புளுகோட், நெக்டை, பட்டுக்கைக்குட்டை மகமல் ஷர்ட்டு வங்காளி பாஷன், இந்தமாதிரி விதம்விதமான அலங்காரங்கள்! 'பிளேட்டு'களில் குலாப்ஜான் வைக்கப்பட்டிருந்தன. ஸ்பூள்களினால் வெட்டி வெட்டி ருசி பார்த்துக்கொண்டிருந்தனர்.

வருகிறவர்கள் போகிறவர்கள் வேடிக்கைப் பேச்சு,'ஸர்வர்'களின் வாயோயா'ஆர்டர்'கள். பிளேட்டுக்'களை எடுத்துச் சுத்தம் செய்யும் 'கடகட' சப்தம், இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஹோட்டலை இடைவிடாத விசித்திர சப்த ஜாலங்களினால் எதிரொலிக்கச் செய்து கொண்டிருந்தன.

மூன்று பையன்களும் மெதுவாகத் தமிழில் ஏதோ 'குசுகுசு' வெனப் பேசிக்கொண்டனர். மனிதஸ்பாவப்படி எனது செவிகளும் அவர்களது பேச்சை ஒட்டுக் கேட்பதில் முனைந்தன. என்னை உலகத்துப்பட்டிக்காட்டுப் பிராணிகளில் ஒன்றாகக் கருதினரோ என்னவோ? தமிழைநிறுத்தி ஆங்கிலத்தில் பேசவாரம்பித்து விட்டனர். அவர்கள் பிறக்கு முன்னரே நான் ஆங்கில எழுத்துக்களைப்பயில ஆரம்பித்து விட்டவன், என்று அந்த ஊர்சுற்றிகளுக்குத்தெரிந்திருந்தால் தானே!

இந்த உலகத்துக்காரியங்களே வெகு விசித்திரமானவை, அப்பா, என்றான் ஒருவன்.

'என்ன அப்பா; புதிர் போடுகிறாய்? என்றான் இன்னொருவன்.




# அழகிய கூந்தல்-இதன் இரகசியம் என்ன?

உங்கள் கூந்தலை சரியாக பராமரித்து அழகுடனிருக்கச் செய்துவர தமயந்தியின் நாட்களைப்போன்று சேடி பரிஜனங்கள் இன்று தேவையில்லை. கூந்தல் தேங்காயெண்ணெய் தினசரி நன்கு தேய்த்து ஷாம்பூவால் வாராவாரம் கேசத்தை அலசிக்கழுவி வாருங்கள். அவ்வளவே! நல்ல மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தலின் இரகசியம் என்னவென்பது உங்களுக்குத் தானகவே விளங்கும்.



**டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும்**

A TATA PRODUCT

## டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

சென்னை-600 008

'ஊர் பூராவும் சிரிக்கிறது. இதுகூட உனக்குத்தெரியாதா? ஆச்சரியமாக இருக்கிறதே' என்ருன் மூன்ருமவன்

'எனக்கு நிஜமாக ஒன்றுமே தெரியாதப்பா. என்ன விஷயம் சொல்லப்பா? என்ருன் இரண்டாமவன்.

'டேய் சம்பத்து தங்கை பத்மாவை உனக்குத்தெரியாது'?

ஏன் தெரியாது. அடிக்கடி உலாவப்போகும் பொழுது பார்க்கில்கூட பார்த்திருக்கிறேனே. அவள் நல்ல அழகப்பா' என்ருன் இரண்டாமவன்.

பத்மாவின் பெயரைக்கேட்டதுமே எனது செவிகள் நிமிர்ந்து நின்றன. நான் நாற்காலியில் நன்கு அமர்ந்து கவனிக்கலானேன்.

'இரு அப்பா, இவன் ஏதோ ஒட்டுக்கேட்கிருன் போலிருக்கிறது' என்ருன் மூன்ருமவன்.

'என்னப்பா பயப்படுகிருய், இந்த ஊர்க் காலாடிப்பயல்களில் இவனும் ஒருத்தன்' நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன் அப்பா இவனை!' என்ருன் முதலாமவன்.

இவ்வளவு அருகில் அமர்ந்து நேருக்கு நேர் தெளிவான வார்த்தைகளில் என்னைப்பற்றிய விமரிசனம் நடந்து கொண்டிருந்தது. நானும் 'கடவுள் செயல்'இது என்றெண்ணி கோபத்தையடக்கிக்கொண்டு வாளாவிருந்தேன்.

'கலிகாலமோ இல்லையோ?' என்று பேச்சைத்தொடர்ந்தான் மூன்ருமவன்.

'ஆமாமப்பா' வயது வந்த பெண்ணொருத்தியை அதுவும் இருபதுவயதிற்கு மேலானவளை கன்யாப்பெண்ணுகவீட்டில் வைத்துக்கொண்டு படிக்கவைப்பது, ஸ்வதந்திரமாக விட்டு வைப்பது என்ருல் சரியா? அது கெடாமல் என்ன செய்யும்? சீதை, தமயந்தி, ஸாவித்திரி இவர்களின் ஆதர்சத்தை இந்த நாகரிகம் முற்றிய உலகில்கடைப்பிடிப்பது என்பது சாத்தியமா? வயது வந்த எல்லாப்பெண்மக்களிடமும், பரிசுத்தத்தையும் பாதிவிரத்தியத்தையும் எதிர் பார்ப்பது என்பது நடவாத காரியம்தான், என்ருன் முதலாமவன்.

'அதற்குக்கைமேல் பலன் கிடைத்துவிட்டது அப்பா. விஷயம் முற்றிவிட்டது என்பதைக்கண்டதும் காதோடு காதகாத்தெரியாமல்யார் தலையிலாவது கட்டிவிட வேண்டும், குட்டுவெளிப்படக்கூடாது, வெளிப்பட்டு விட்டால் பத்மாவிற்குக் கல்யாணம் நடப்பது என்பது குதிரைக்கொம்பாகிவிடும். எப்படியாவது சீக்கிரம் எவன் தலையிலாவது கட்டிவிட வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்திருக்கின்றனர். ஒரு மண்டு அவளைக்கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்து விட்டதாகவும் இன்று காலை கேள்விப்பட்டேன்' என்ருன் மூன்ருமவன்.

'செல்லாக்காசை யாரப்பா வாங்கிக்கொள்வான்?' என்று கேட்டான் முதலாமவன்.

'என்ன அப்பா, விளங்கச்சொல்லேன். ஒன்றும் புரியவில்லை. செல்லாக்காசை, பிரதர், சற்றுப் புரியும்படி விஷயத்தை விளக்கிக்கூறேன்'' என்ருன் இரண்டாமவன்.

'புரிய வில்லை என்ருல் போய் சுவரில் முட்டிக்கொள். நீ அவளைக் கலியாணம்செய்து கொண்டு விடேன்' என்று கூறி மற்றிருவரும் சிரித்தனர்.

ஹோட்டலை விட்டு வாசற்புறம் கிளம்பினேன். உலகமே என்னைப்பின் தொடர்வது போல.... ராமு, சம்பத்து, பத்மா இம் மூவரும் என்னைப்பிடிக்க ஓடி வருவதுபோல-ஒரு கனவு...

ஓடி வந்த வேகத்தில் கதவு சார்த்தியிருப்பது கூடத்தெரியாமல் கதவில் முட்டிக்கொண்டேன்.

'ராமு, நடந்ததை நடந்தபடி மறைக்காமல் சொல்லு' என்று கெஞ்சினேன்.

'நீ பெரும் மடையன்' என்ருன்.

'என்னைப்போல மடையனே உலகத்தில் இல்லையா?,

'கிடைக்கவேமாட்டான் உன்னைப்போல மடையன்'.

'அப்படியானல் என்னிடம் இவ்வளவு கருணை காட்டுவானேன்?'

'நீ மடையன் என்பதனல்தான்.........உலக ரீதி இது?

'ஏண்டா ராமு உண்மையில் பத்மா நெறி தவறினவள்தானு?'

'தவறினவள் என்ருல் தவறினவள்தான்' எனக்கு ஒன்றும் நிச்சயமாகத்தெரியவில்லை.'

'என்ன நடந்தது என்று சொல்லிக்கொள்கிருர்கள்?'

'பத்மாவிற்கு அத்தை பிள்ளை ஒருவன் இருக்கிருன். அவன் பனரஸ்யுனிவர்ஸிடியில் B. A. படிக்கிருன். 5-6-மாதத்திற்கு முன்பு இங்கே பட்டணத்திற்கு வந்திருந்தானும். பத்மாவும் அவனும் ரொம்ப நெருங்கிப்பழகினர்களாம் ''பீச்சு'' ''பீப்பிள்ஸ் பார்க்கு ''லைப்ரரி'' ''சினிமா'' முதலியவைகளுக்கு இருவரும் சேர்ந்தே போவார்களாம். பத்மா கலியாணமாகாத பெண். வயதோ இருபதுக்கு மேல் ஆகிவிட்டது. அவளுக்கும் ஆசையென்பது இருக்குமோ இல்லையோ, நெறிதவறி

விட்டாள். அப்பையனும் சேர்ந்து குருட்டுக் கிணற்றில் பிடித்து ஆழ்த்திவிட்டான். காமம் தன் வேலையைச்செய்துவிட்டது. வயிற்றில் குழந்தை வந்துவிட்டது. ஒரு நாள் குட்டு வெளிப்பட்டுவிட்டது. தாய் தந்தையர் ஓயாக் கவலைக்காளாகினர். தெருவிலும் "குசு குசு" வெனப்பேச்சு ஆரம்பமாகியது. சுற்றத்தார்கள் விஷயம் எட்டியதும் மனக்கிலேசம் அடைந்தனர். எல்லாரும் ஒன்றுகூடி எப்படியாவது பத்மாவிற்குக்கலியாணம் செய்துவைத்தாகி விடவேண்டுமென்று தீர்மானித்தனர். ஆனால்சமூகம் கல்வி,சம்பிரதாயம்இவைகளின்படி பார்க்கப்போனால் அப்பையன் முன்பே கலியாணமானவன், வீட்டில் அரம்பை போன்ற அழகிய இளம் மனைவியிருக்கிறாள். பத்மாவிடம் அதிக மையல் கொண்டுவிட்டான். அவன் தன் இளம் மனைவியை விஷம் கொடுத்துக் கொன்று போடவும் பத்மாவைக் கலியாணம் செய்து கொள்ளவும் கூட நினைத்தானாம்'...என்று. கூறிக்கொண்டே போகலானான் ராமு.

'அதற்காகத்தான் எனைக் குறிவைக்கிறார்கள் என்று சொல்லு" என்றேன் நான்.

'அவளைக் கலியாணம் செய்துகொள்ள உனக்கு என்ன தடை?' என்று வினவினான் ராமு.

'ராமு! நீ சொல்வது சிறிதும் நன்றாயில்லை. மார்ச்சு முடிந்து ஏப்ரல் பிறந்திருக்கிறதே என்று எண்ணி ஏப்ரில் முட்டாள் பட்டம் எனக்குக் கட்டப்பார்க்கிறாயா?' என்று வனவினேன்.

'அப்படி யொன்றுமில்லை. பத்மாவைக் கலியாணம் செய்துகொண்டு சமூகத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கு' என்றான் ராமு.

'ராமு, கலவரத்தை யுண்டு பண்ணினவன் பத்மாவின் கள்ளக்காதலன் அல்லவோ? அதற்கு நான் என்ன செய்வேன்' என்றேன் நான்.

'நெறிதவறியவளைக் காப்பாற்றக் கூடாதா நீ?'

'காப்பாற்றுவதா? நானல்லவா நெறிதவறி விட்டவன் ஆவேன்'

'இல்லையப்பா! நீ தவறியவனாக ஒரு பொழுதும் ஆகமாட்டாய். தற்காலம் எங்குப் பார்த்தாலும் சமூகச்சீர்திருத்தத்தின் முழக்கம் ஓங்கி நிற்கிறது. ஒருவன் விதவையை மணக்கிறான். இன்னொருவன் வேசியை மனையாளாக்கிக் கொள்கிறான். இதே மாதிரியான சீர்திருத்தங்களில் எவ்வளவோ பேர் முனைந்திருக்கவில்லையா? தாழ்ந்தோர்களைச் சமூகத்தில் முன்னேற்றிவிடும் கைங்கர்யத்தை எவ்வளவு பேர் செய்ய வில்லை? தற்காலத்திய சூழ் நிலை தகுதியானது தான். கவலை கொள்ளாமல் கலியாணம் செய்துகொள்' என்று உரைத்தான் ராமு.

'உனது உண்மையான அபிப்பிராயம் என்ன? மறைக்காமல் சொல்லு'

'அதுதான் சொல்லி விட்டேன். பத்மாவைக் கலியாணம் செய்து கொண்டால் சமூகத்திற்கு உபகாரமாயிருக்கும். நீயும் சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியெனப் பெயர் வாங்குவாய். பத்மாவும், பழி அவமானம் இவைகளினின்றும் தப்புவாள். அவளது பெற்றோர்களும் கவலை யொழிந்து சுகிப்பார்கள்"

'அதிருக்கட்டும் ராமு, நான் ஒரு ஏழை என்ற காரணத்தினால்தானே என்னிடம் எவ்வித சங்கோசமுமின்றி இப்படிக் கூறுகிறீர்கள். ஏழைகள் எச்சில் பொறுக்கிகள் என்றுதானே எண்ணம். கையில் பணமிருந்து காதத்தில் மூழ்கி, நெறி தவறினாலும் அவர்கள் நல்லவர்கள் என்றுதானே நினைப்பு. இன்று நெறி தவறி, காமத்தில் சிக்குண்ட பத்மாவை ஏழையான என் கழுத்தில் கட்ட எவ்வளவு முகஸ்துதி பார். இதே பத்மா நெறி தவறாமல் இருந்திருப்பாளாகில் இந்த ஏழையை பொருட்படுத்துவார்களா? நீயே சொல். எச்சிற் பண்டங்களை நாயின் முன்னிலையில் விட்டெறிவார்களே, அதேபோல் அல்லவா நெறி தவறிய பத்மாவை, ஏழையான-நாதியற்ற-என்னிடம் விட்டெறிகிறது இந்தச்சமூகம். நெறிதவறினவர்களைக் காப்பாற்றும் பொறுப்பை, இச் சீர்திருத்தவாதியான சமூகம்தான் ஏற்றுக்கொள்ளட்டுமே, நான் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்?'



டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

'சமூகத்தினிடம் உனக்கு வெறுப்பு இருக்குமாகில், நீ சமூகத்திற்காக ஒன்றும் செய்ய வேண்டாம். பத்மாவிற்காகவாவது நீ இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாதா? பத்மா என்ன குற்றம் செய்தாள் அதற்கு?'

'ராமு, பத்மாவின் குற்றம் என்ன என்பது விவாதத்திற்கு உரிய விஷயம். அவள்மேல் குற்றமில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. ஒரு வயதுவந்த பெண்ணிற்கு இது தகும், இது தகாது என்றுகூடவா தெரியவில்லை? அவள் என்ன பச்சைக் குழந்தையா, அதற்கு?'

'ஆனால்....காமம் சம்பந்தப்பட்ட வரையில் வயதுவந்தவர்கள் பச்சைக் குழந்தையாகி விடுகிறார்கள். பச்சைக் குழந்தைகளுக்குக் காமம் என்னவென்பதுகூட தெரியாதே.'

'இன்னும் கலியாணம் ஆகவில்லையே என்ற நினைப்பாவது அவளுக்கு இருக்கவேண்டாமா?',

'இருக்க வேண்டியதுதான், அவள் நெறி தவறிவிட்டாள். அதனால்தானே உன்னையாவது பெறத்தவம் கிடக்கிறாள். இல்லையேல் உன் கையில் அவள் சிக்குவாளா? இந்தத் தண்டனையே அவளுக்குப் போதுமானதாயிற்றே. நீயே சிந்தித்துப் பார்"

'அதெல்லாம் முடியாது. யோசனை வேறு என்ன செய்யவேண்டியிருக்கிறது?' என்று சொல்லிக்கொண்டே பையிலிருந்த ரூபாயை எடுத்து ராமுவிடம் கொடுத்து, 'இந்த ரூபாய் செல்லுமோ செல்லாதோ?' என்று வினவினேன்.

ராமு பார்த்துவிட்டு 'இது செல்லாது' என்றான்.

'ஏன் செல்லாது?' என்றேன் நான்.

'யாராவது குருடன் வாங்கிக்கொண்டால் தான் உண்டு' இது எப்படிச் செல்லும்?'

'இதற்கென்ன குற்றம்?'

'இதோ பார் வெட்டுப்பட்டிருக்கிறது எப்படியோ'

'வெட்டுப்பட்டால் செல்லாதோ?'

'இது போதாதா செல்லாமலிருப்பதற்கு? எதையும் மிக ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். இல்லாவிடில் ஏதாவது குறறங் குறை ஏற்பட்டுத்தான் விடுகிறது.

'ராமு என்னிடமிருப்பது இந்த ஒரு ரூபாய் தான். வேறு ரூபாயோ கிடையாது. பசியோ வாட்டுகிறது, பசிப்பிணியைத் தீர்த்துக் கொள்ள இதற்குச் சில்லறை கிடைத்துவிட்டால் நல்லது. யாராவது எடுத்துக்கொண்டு சில்லறை தரமாட்டார்களா?

கண்ணுள்ளவன் வேண்டுமென்று செல்லாத ரூபாயைவாங்கிக்கொண்டு சில்லறைதருவானா? சாப்பாட்டிற்கு இல்லையென்றால் ஏதாவது பிச்சை வேண்டுமானால் போடுவான்.

'எனக்குப் பணம் வேண்டுமே?'

'யாரிடமாவது கடன் வாங்கிக்கொள்' இல்லை வேலை செய்து சம்பாதி. ஏதாவது உபாயம் தேடு. இந்த ரூபாய் செல்லாது'

'பத்மா—அந்தோ—பத்மா!

'பத்மா - இந்தமாதிரி நிலையில் நானும் உன்னை வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது. உன் சிரமத்தை நன்கு அறிவேன். இருந்தாலும் என்ன செய்ய? ஒரு வழியும் புரியவில்லையே?'

பத்மாவை யாருமே கலியாணம் செய்து கொள்ளமாட்டார்களோ!'

'சமூகம்! இக்கொடும் சமூகம் அவளை உதறித் தள்ளிவிடும். அப்பொழுது அவள் என் செய்வாள்? அவளது தமையன்......... ஊஹூம் - வைத்துக்கொள்ள மாட்டான். அச்சமயம் வேசி...பத்மா—வேசியாகிவிடுவாள். வேசித்தொழில்தான் பத்மாவின் தலையிலெழுதியிருக்கிறதோ!'

ஆமாம் இந்த ரூபாய் செல்லமாட்டேன் என்கிறதே! பத்மாவை எப்படி போஷிப்பது. அவளும் செல்லமாட்டாளோ!'

'சினிமா-ஆம்-சினிமாக்கொட்டகையில் ஒரே கூட்டமாயிருக்கும். கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று டிக்கட்வாங்கினால் தானே சென்றுவிடும்? கூட்டத்தில் யார் கவனிக்கப் போகிறான். நிச்சயம் சென்றுவிடும்...'

வெகு ஆவலுடன் மணி ஐந்து அடிப்பதை எதிர்நோக்கியிருந்தேன். ஐந்து அடித்ததோ இல்லையோ சினிமாக் கொட்டகைக்குப் புறப்பட்டேன்.

புக்கிங் ஆபீஸிற்கு அருகில் நல்ல ஜனத்திரள் அலைபோல மோதிக்கொண்டு இருந்தது. இது தான் சரியான தருணமென்றெண்ணி வீரனைப் போல முன்னேறினேன். இத் தருணத்தைத இழந்தால் வேறு தருணம் ரூபாயைச் செல்ல வைக்க வாய்ப்பதரிது!

பகவன் நாமத்தை உச்சரித்துக் கொண்டு நேசதேசப் படை முன்னேறுவதுபோல மெதுவாக முன்னேறிப் புக்கிங் ஜன்னலண்டை போய்ச் சேர்ந்தேன். முஷ்டியுத்தம் செய்து ஜன்னல் இடுக்கு வழியாகக் கையை உள்ளே திணித்து '4 அணு டிக்கட் ஒன்று சார்' என்றேன்.

நான் செய்வது மகத்தான நாலணு தியாகம். இவ்வளவு பெரும் தியாகம் கௌதம புத்தரோ, ரகு குல திலகரான ஸ்ரீராமரோ செய்திருக்க முடியாது. ரூபாயில் நான்கில் ஒரு பங்கான நாலணுவை 'வேட்டு' விட்டுக்கொண்டிருந்

தேன். செல்லாத காசு எப்படியோ செல்லப் போகிறதே என்று அலாதித் திருப்தி. 'எனக்கு ரூபாய் செல்லவேண்டியது எவ்வளவு முடை' என்பது சொல்லாமலே விளங்கும்.

வெகு சாதுரியமாக ரூபாயைச் செல்ல வைக்கமுயலும் எனது புத்திகூர்மையை இவ்வுலகம் புகழாமலிருக்குமாகில் அது என் பிழையல்ல, என் பாக்கியம் செய்த பிழை என்று தான் கூறவேண்டும்.

எனது ரூபாய் போனவழியே திரும்பி வந்து விட்டதைக்கண்ட எனக்குத் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. சினிமாக் கொட்டகையில் கூடவா இது செல்லவில்லை? இனி என் செய்வது? என் ஆதுரம், என் முயற்சி எல்லாம் பாழ்பட்டுவிட்டதே! அட கடவுளே!

உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவ நினைக்கும் என் கண்களில் அல்லவா புழுதி அடிக்கிறது! இதற்கு என்ன செய்வது!

'உன் செல்லாக்காசை வாங்கிக் கொள்ள என்னைத்தான் பார்த்தாயோ அப்பா' என்முன் உள்ளிருந்தவன்.

'உன் நடத்தைகெட்ட தங்கையை என் கழுத்தில் கட்டப் பார்க்கிருயோ சம்பத்து?' என்றேன் நான்.

'யார் சொல்கிறது, என் தங்கை நடத்தை கெட்டவள் என்று?' என்று உறுமினன் சம்பத்து.

'உலகம் சொல்கிறது...அதை நான் சொல்கிறேன்' என்றேன் நான்.

'ஜாக்கிரதை, இனி இம்மாதிரி வார்த்தையை இன்னெருதடவை சொல்வாயாகில்...' என்று அதட்டினன் சம்பத்து,

நான் பேசாமல் இருந்திராவிடில் வார்த்தை தடித்து அடிதடிவரை போயிருக்கும். நல்ல வேளை கை கலக்கவில்லை.

அன்றைய தினமே ஒரு சீமான் ரோடுவழியே போய்க்கொண்டிருந்தார். அவர் உதாரகுணமுள்ளவராயிருக்கலாமென எனக்குத் தோன்றியது. என்னிடம் ஒரு செல்லாத ரூபாய் இருக்கிறது. ஒருவரும் அதை எடுக்கமாட்டேன் என்கிருர்கள். உங்களுக்கு அநேக பிஸினஸ்கள் இருக்கலாம், சென்றுவிடக்


# சைபால்

CIBOL

(வெளி உபயோகத்திற்கு)

—முகப்பரு, சொரிசிறங்கு, வேனல்கட்டி,— பித்தவெடிப்பு தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் — சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கரைபிடிக்காது

— நறுமணம உள்ளது —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

**THE SOUTH INDIAN MFG. COY.**

**44, DHANAPPA MUDALY ST.**

**MADURA**

கூடும். நான் மிகவும் சிரம தசையில் இருக்கிறேன், இந்த ரூபாயை வைத்துக்கொண்டு நல்ல ரூபாய் ஒன்று கொடுப்பீர்களாகில் ஸௌகரியமாயிருக்கும் என்று சொல்லலாம் என்ற எண்ணத்துடன் நெருங்கினேன். ஆனால் சங்கோசம் வழி மறித்தது. பிறகு அவரே ரூபாயைப் பார்த்தால் ' நான் செல்லவைத்துக் கொள்கிறேன். அதற்குப் பதிலாக இந்தா வேறு ரூபாய் என்று சொல்லிவிடுவாரோ என்ற சபலத்தில் ' இந்த ரூபாய் செல்லுமா சார் ' என்று நீட்டினேன்.

"என்ன ! ரூபாயா! இந்த ரூபாய் யாருடையது ? ஊம்" என்று கோபத்துடன் கர்ஜித்தார்.

எனக்குப் பயமாயிருந்தது. உரலில் தலையைக்கொடுத்தபின் உலக்கைக்குப் பயப்படுவதா ! சற்றுத் தணிந்து, "இந்த ரூபாய் செல்லுமா என்று கேட்கிறேன் ஸார்" என்றேன்.

அச் சீமான் ரூபாயைப் புரட்டிக்கிரட்டிப் பார்க்கலானார். ' மனிதர் ரொம்ப நல்லவர், தயாளகுணம் உடையவர், நிச்சயம் வேறு ரூபாய் கொடுத்துவிடுவார், பெரிய ' பிஸினஸ் ' உள்ள அவருக்கு நஷ்டமாகவா போய்விடப் போகிறது ? எப்படியாவது சென்றுவிடும் ' என்ற நம்பிக்கையுடனும், ஆவலுடனும் அவர் முகத்தை நோக்கினேன்.

' ஆம் சென்றுவிடும் ' என்றார் அச் சீமான். நான் அவரை மனமார வாழ்த்தவும், கஷ்டத்தினின்று விடுவித்த கடவுளைத் தொழவும் முற்பட்டேன்.

' சென்றுவிடுமா '

' நான் செல்லவைத்துவிடுவேன் '

' எப்படி ? தயவுசெய்து செல்லவைத்துத் தாருங்கள் ' என வேண்டினேன் நான்.

' இதோ 'பார் இப்படிச் செல்கிறதை ' என்று கூறி ரோட்டில் விட்டெறிந்துவிட்டார்.

"ரூபாயும், ஓதுப்புறத்தில் ஓடிக்கொண்டிருந்த சாக்கடையில் உருண்டோடிச் சென்று விழுந்தது.

செல்லாத ரூபாய்தான், இருந்தாலும் அதன் பின் நான் ஓடினேன். சாக்கடையின் அழுக்குத் தண்ணீரில் கைவிட்டுத் தேடி அதை எடுத்தேன். சாக்கடையின் நாற்றமுள்ள சகதித் தண்ணீரில் கைவிட்டுத்தேடி அதை எடுத்தேன். சாக்கடையின் நாற்றமுள்ள சகதித் தண்ணீர் முழங்கைமட்டும் ஒட்டிக்கொண்டுவிட்டது.

ரூபாயை எடுக்கும் எனது பரபரப்பைக் கண்டு அச் சீமான் ' கல கல ' வென நகைத்தார். ' காலிப்பயல் பிச்சைக்கு என்னிடம் வரப் புதுவழி கண்டு பிடிக்கிறான் ' என்று கூறிக்கொண்டு நகர்ந்தார்.

பெருந்தன்மை என்று நாம் சொல்கிறோமே, அதுதானா இது? நல்ல பெருந்தன்மையாக இருக்கிறதே இது !

' ரூபாய் சென்றது எப்படி ? ' என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

' கேள்விப்பட்டாயா, பத்மாவிற்குக் கலியாணம் ஆகிவிட்டது ' என்று ராமு கூறிக் கொண்டே வந்தான்.

' எப்படி ஆயிற்று '

' கலியாணம் நடப்பது போலத்தான் '

' சொல்லப்பா ! '

முந்தாநாள் ராத்திரியே காஞ்சீபுரத்திற்கு ஒருத்தனை அனுப்பினார்கள் மாப்பிள்ளை தேட. நல்ல வரன், படித்த வரன்தான், பணக்காரனும்கூட. ஷோக் ஷோக் பேர்வழியாகவும் இருக்கிறானாம். பிடித்து வந்துவிட்டான் அந்த ஆசாமி. ஆனால்...

' ஆனால், என்ன '

' நல்ல தொண்டு கிழம். வயது 60-65-க்குக் குறைவில்லை. ' பெண் எப்படி ' என்பது அவருக்குத்தெரியாது. ஒத்துக்கொண்டு விட்டாராம். இங்கே பத்மாவிற்கு லேடி டாக்டர் ஒருத்தியைக் கொண்டு ஆபரேஷன் நடத்தினார்களாம். ஆபரேஷனும் வெற்றி கரமாயிருந்ததாம். ஸ்வஸ்தமடைந்ததும் கலியாணம் ஆயிற்றாம். புக்ககத்திற்குக்கூட கிளம்பிப் போய் விட்டாளாம். தெரிந்ததா ? '

' எனது ரூபாயும் சென்று விட்டதே ! உனக்குத் தெரியுமா ராமு? '

' எப்படியப்பா ? '

' நேற்று ஒரு குருட்டுப்பிச்சைக்காரன் தெருவழியே போய்க்கொண்டிருந்தான். நான் ரூபாயை அவனிடம் கொடுத்துவிட்டேன். குருடன் தடவிப்பார்த்தான். காலணாவை விடப்பெரிதாகவும், கனமாகவும் இருந்தது. அதைக்கண்டு சந்தோஷத்துடன் ' கடவுள் உன்னைக்காப்பாற்றுவார்; நீ பெரிய புண்யவான் ' என்று ஆசீர்வாதம் கூடச்செய்து சென்றான்.

' நான் தான் அப்பவே சொன்னேனே, குருடன் தான் இந்தச்செல்லாத ரூபாயை வாங்கிக் கொள்வானென்று பார்த்தாயா ? ' என்றான் ராமு.

' ஆமாம் ஆமாம். பத்மாவையும் அப்படித் தானே !' என்றேன் நான்.

எனது மனத்திரையில் பத்மாவும் ரூபாயும் மாறிமாறிக் காக்ஷியளித்துக் கொண்டிருந்தனர். காரணம் என்னவோ ! தெரியவில்லை. செல்லாத ரூபாய் செல்லாத ரூபாய்தானே !

Edited & Published by N. R. Ramanujan B. A. & Printed by S. Rangaswami B. A.
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# The Cauveri Colour Press

— *Leading Quality & Art Printers* —

30 MAY 1944
MADRAS

***Consult us for all your requirements***

Marriage Invitations

Block Printing

Colour Lables

Letter Heads

Bills, Ledgers

& all other Jobs

## Up to date Collection of types

— Book Printing a Speciality —

## Our Get-up & Execution second to none

*For particulars, apply to:—*

Besant Road
KUMBAKONAM

MANAGER,
**Cauveri Colour Press.**

T. S. R.



டி. எஸ். ஆர்.




மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
நிகரற்ற தைலங்கள்

கோகுல் தைலம்

தேங்காயெண்ணை தைலம்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி—மதராஸ்




T.S.R.&Co PERFUMERS KUMBAKONAM


PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.